Registered as a Newspaper

பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்

TAMILALAI

ஞாயிற்றுக்கிழமை, 02-11-2003 ஓசை -31




தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

F:\computer\Tamilalai 31.cdr

வாரமலர் தமிழ் அலை Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே,
தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
02.11.2003

# சிஹல உறுமயவின் இனவாதம்

வளர்ந்து வரும்தமிழ் சிங் கள இனங்களுக்கிடையிலான உறவை பலவீனப்படுத்தி மற்று மொரு போருக்கு தூபமிடும் இனவாதிகளின் சூட்சியில் இருந்து சமூகம் விடுபடவேண்டும்.

கடந்த இருபது வருட போர்க் காலத்தில் இரு இனங்களுக்கிடையிலான உறவு மிகக் கடுமையான முறையில் விரிசலடைந்து காணப் பட்டது.

காரணம் வடக்குக் கிழக்கில் போரிலீடுபட்ட இராணுவப்படை போர் மரபுகளை முழுமையாக மீறி மனித உரிமை மீறல் சம்பவங்களில் கணிசமானளவு ஈடுபட்டன. தமிழா களின் உயிர்கள் பறிக்கப்ப ட்டன, தமிழ் பெண்கள் பாலியல் வல்லுற வுக்குள்ளாக்கப்பட்டனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிங்கள இனம் மீது தமிழ் மக்கள் அச்ச உணர்வுடன் வாழும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக் குமிடை யிலான போரில் இறந்த இராணுவ த்தினரின் உடலங்கள் தென்னில ங்கைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது ஆத்திரத்தில் கொதித் தெழுந்த பேரினவாதக் கும்பல்கள் தமிழினத் தையே வேட்டையாடியமை கடந்து போன வரலாறுகள்.

இதே வேளை எல்லாத் தமிழனும் சிங்கள இனத்திற்கு புலியாகவே தென்பட்டனர். இவ்வா றான காலத்தில் முறிந்து கிடக்கும் இன உறவைப் பலப்படுத்தி இரு இனங்களின் கலைஞர்களுக ்குமிடையில் கருத்துப்பரிமாற் றங்கள் நடைபெறும் போது ஒரு ஐக்கியம் புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புண்டு.

இத்தகைய ஒரு நிகழ்வு தான் கடந்த புதனன்று கொழும ்பில் புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இது நாட்டைத் துண்டாடும் சதிமுயற்சியல்ல. கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்க ளைத் தாக்குவதற்கான சட்டதிட் டங்கள் மாநாட்டில் தீட்டப் படவில்லை.


இவ்வாறான ஒரு நிலை யில் சிகல உறுமயக் கட்சியினதும் ஜே.வி.பி. கட்சியினதும் உறுப்பி னர்கள் தமிழர்களைத் தாக்க முனைந்தமை மாநாட்டைக் குழப்ப முனைந்தமை கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்மிடையில் புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஓர் அமைதி நிலையினை உருவாக்க சர்வதேச சமூகம் அவாக்கொண்டுள்ளது.

இதனடிப்படையில் சிறிலங்காவின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வரும் நிலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தமிழினம் சிங்கள தேசத்துடன் சேர்ந்து வாழ முடியாது. இதனை சிங்கள தமிழ்க் கலைக் கூடல் நிகழ்வு மீதான தாக்குதல் ஆழமாக உணர்த்தியிருக்கிறது.

# கிண்ணியா வன்முறையில் ஓசாமா குழு



கிழக்கில் நடைபெறுகின்ற சம்பவங்களைப் பார்க்கும் போது ஒட்டகத்திற்கு இடம்கொடுத்த கதைதான் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா ஆலங்கேணி என்ற பூர்வீக தமிழ் கிராமத்தில் தமிழ் மக்களை விரட்டியடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முஸ்லீம் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவமாகும். ஆலங்கேணி முழுக்கமுழுக்க தமிழ் கிராமமாகும். இக்கிராமத்தில் 500ஏக்கர் சரவணமுத்து என்ற தமிழருக்குச் சொந்தமாக இருந்தது. காணிச்சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இவரின் 450ஏக்கர் காணியை அரசாங்கம் 1972ம் ஆண்டு சுவீகரித்தது. சுவீகரிக்கப்பட்ட காணியில் அப்போது மூதூர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மஜித் என்பவர் முஸ்லீம்களைக் குடியேற்றினார். ஒருஇனத்தவருக்குச் சொந்தமான காணியை சுவீகரித்து மற்றொரு இனத்திற்கு வழங்குவது முறையற்றது. ஆனால் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு ஏற்படப்போகும் அபாயத்தையும், அச்சுறுத்தல்களையும் உணராது குடியேற்றப்படுவது முஸ்லீம்கள்தானே. அவர்கள் எங்களுடன் பிரச்சினைக்கு வரமாட்டார்கள் என்ற தாராள மனப்பான்மையும் தமிழர்கள் மௌனமாக இருந்து விட்டனர். அக்கிராமத்தில் முஸ்லீம்களைக் குடியேற்றி அதற்கு மஜீத்புரம் என்று பெயரும் வைத்தனர். முஸ்லீம் பாடசாலை ஒன்றையும் கட்டினர். காணிசுவீகரிக்கப்பட்ட பின் மிகுதியாக தனது பெயரில் இருந்த 50 ஏக்கர் காணியை சரவ்ணமுத்து என்பவர் அக்கிராமத்தில் இருந்த பிள்ளையார் ஆலயத்திற்கு எழுதிக் கொடுத்து விட்டு இறந்துவிட்டார். 1990ல் இக்கிராமத்திலிருந்தும் கிண்ணியாவிலிருந்தும் முஸ்லீம் ஊர்க்காவல் படைகளின் தாக்குதல்களால் வீடுவாசல்களை இழந்து அகதிகளாக வன்னிக்குச் சென்று தங்கியிருந்த குடும்பங்கள் தற்போது மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் காணி இல்லாதவர்களுக்கு ஆலயத்திற்குச் சொந்தமாக இருந்த தரிசு நிலத்தில் காணித்துண்டுகள் வழங்கப்பட்டன. அவர்கள் அதில் குடிசை வீடுகளையும் அமைத்துக் கொண்டனர். இதை அங்குள்ள முஸ்லீம் பாடசாலை நிர்வாகத்தினர் விரும்பவில்லை. பிள்ளையார் கோவில் காணியையும் தாங்கள் சுவீகரித்து பாடசாலைக்கட்டிடத்தை அமைப்பதற்கும், மேலும் முஸ்லீம் குடும்பங்களைக் குடியேற்றி அது தமிழ் கிராமம் என்ற நாமத்தையே அழிப்பதற்குத் திட்டமிட்டிருந்தனர். பிள்ளையார் கோவில்காணியில் தமிழ் மக்கள் குடியேறியதனால் தமது திட்டம் தோல்வி அடைந்து விட்டதே என ஆத்திரம் கொண்டவர்களின் வேலையே ஆலங்கேணியில் தமிழ் மக்கள் மீதான தாக்குதலாகும். சம்பவதினம் அப்பாடசாலைக்கு வந்த திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும், அவரின் கீழ் இயங்கும் ஒசாமா என்ற ஆயுதக்குழுவினரும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தமிழர்களை இந்தப் பிரதேசத்திலிருந்து விரட்ட வேண்டும் என உணர்ச்சி ஊட்டினர். பாடசாலை நிர்வாகத்தினரும், மாணவர்களும் கிண்ணியா உதவி கல்விப்பணிப்பாளர் அலுவலகம் வரை ஆர்ப்பாட்டம் செய்து மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இதனையடுத்து ஒசாமா குறூப் என்ற முஸ்லீம் கும்பல் ஆலங்கேணி தமிழ் கிராமத்திற்குள் துப்பாக்கிகள், கத்திகள், இரும்பு கம்பிகள் சகிதம் புகுந்து பிள்ளையார் கோவில் ஆலயக்காணியில் குடியேறியிருந்த தமிழ் மக்களை அடித்துத் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தில் லிங்கேஸ்வரன் என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்தார். ரீயுசன் வகுப்பிற்குச் சென்ற சிறிதரன், கண்ணன், ஆகிய இரு மாணவர்களையும் ஒசாமா குழுவைச் சேர்ந்த காடையர்கள் கடத்திசென்று வீடு ஒன்றில் அடைத்து வைத்திருந்தனர். இவர்களுடன் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் அங்கிருந்து தப்பிவந்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து இந்த மாணவர்கள் மீட்கப்பட்டார்கள். ஆனால் கடத்திசென்று தடுத்துவைத்திருந்தவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆட்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் தங்களுக்கு ஆபத்து என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன் பின்னர் அப்பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதிலும் தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தமிழ் கிராமங்களில் குடியேறும் முஸ்லீம்கள் அக்கிராமங்களில் தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வருவதாகக் காட்டுவதற்காக முஸ்லீம் பெயர்களைச் சூட்டுகின்றனர். அவ்வாறு பெயர் சூட்டப்பட்ட கிராமங்களான இடிமன், பௌசல்நகர், மஜீத்நகர் ஆகியவற்றில் உள்ள தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் வீடுவாசல்களை இழந்த 70 தமிழ் குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி ஈச்சந்தீவு விபுலானந்தா வித்தியாலய கட்டிடத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். கிண்ணியா நலன்புரி நிலையத்தில் இருந்த 45 குடும்பங்களும் இடம்பெயர்ந்து விபுலானந்தா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இச்சம்பவங்களுக்குப் பின்னணியில் சில அரசியல்வாதிகளும், அவர்களுக்குப் பக்கத்துணையாக இயங்கும் ஒசாமா என்ற ஆயுதக்குழுவுமே காரணம் என்று விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார். குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தையும் பூதாகரமாக்கியவர்கள் முஸ்லீம் அரசியல்வாதிகள் தான். குரங்குபாஞ்சான் கிராமம் பாரம்பரிய தமிழ் கிராமம் , அக்கிராமத்தை அண்டிய பகுதிகளில் 1990க்கு பின் குடியேறிய முஸ்லீம்கள் இப்போது குரங்குபாஞ்சான் முகாமையும் தங்களுடைய பிரதேசம் என கூறிவருகின்றனர். கடந்த வாரத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக மரங்களை வெட்டிக்கொண்டு மூதூர் நோக்கி வந்து கொண்டிருந்த இரு மாட்டு வண்டில்களை அப்பிரதேச விழிப்புக்குழுக்கள் கைது செய்து விசாரித்த பின் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்தனர். அனுமதி இன்றி மரம் வெட்டுவது யாராக இருந்தாலும் சட்டவிரோதமானது தான். சட்டமும் ஒழுங்கும் அனைவருக்கும் சமமானதுதான். சட்டவிரோதமாக மரம் தறித்து ஏற்றிவந்த முஸ்லீம்கள் விழிப்புக்குழுவால் விசாரணைக் குட்படுத்தப்பட்டதை ஆட்சேபித்து முஸ்லீம்களால் மூன்று தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்று கொலை செய்ய முற்பட்டனர். இதில் ஒருவர் விடுதலைப்புலி உறுப்பினராகும். தமிழ் இளைஞர்கள் முஸ்லீம் கும்பல்களின் கைகளில் அகப்பட்ட விடயத்தை தமிழ் மக்கள் இராணுவத்தினரிடமும் பொலிஸாரிடமும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் தெரிவித்ததையடுத்துப் படையினர் அவ்விடத்திற்குச் சென்று மூன்று தமிழ் இளைஞர்களையும் மீட்டெடுத்தனர். இந்த மூன்று தமிழ் இளைஞர்களையும் தங்களிடம் தரவேண்டும் என முஸ்லீம்கள் படையினரிடம் வாக்குவாதப்பட்டனர். தமிழ் இளைஞர்களைக் கொலை செய்வதற்குத் தங்களிடம் தரவேண்டும் என வாதிடும் அளவிற்கு காடைத்தனமும், பயங்கரவாதமும் வளர்ந்திருக்கிறது. படையினர் அந்த இளைஞர்களை இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்ததையடுத்து அவர்கள் காப்பாற்றப்பட்டனர். இல்லையேல் அந்த மூன்று தமிழ் இளைஞர்களும் காடையர்களின் பயங்கரவாதத்திற்கு பலியாகியிருப்பார்கள். இதனால் ஆத்திரம் கொண்ட முஸ்லீம் காடையர்கள் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் வீடுகளைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர். முஸ்லீம்கள் மிகவும் கீழ்த்தரமான காடைத்தனத்திலும் பயங்கரவாதத்திலும் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பது புலனாகிறது. தங்களது பாராளுமன்ற உறுப்பினர்களது வீடுகளையே தாக்கி அழிக்கும் அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்றால் தமிழர்களின் வீடுகளை எப்படி அழிப்பார்கள் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை. இதன் பின்னர் கடந்த ஞாயிறு காலையில் மூதூரிலிருந்து மல்லிகைத்தீவு நோக்கிச் சென்ற தாமோதரம்பிள்ளை கஜேந்திரன் (44வயது) புண்ணியமூர்த்தி மதன்மூர்த்தி(வயது 22) ஆகிய இருவரும் மூதூர் இறங்குதுறைப் பகுதியில் வைத்து வாள்வெட்டுக்கு இலக்காகினர். மல்லிகைத் தீவிலிருந்து மூதூர் நோக்கி வந்த சுப்பிரமணியம் ராஜலிங்கம் (வயது28)


## திருமுகன்

என்பவரும் சனி அன்று மூதூர் இறங்குதுறையில் வாள்வெட்டுக்கு இலக்கானார். மல்லிகைத்தீவு சந்தியில் வைத்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான லொறியொன்று தீக்கிரையாக்கப்பட்டது. மல்லிகைத்தீவு கிராமத்தைச்சேர்ந்தவர்களே முஸ்லீம்கள் கும்பல்களின் வாள்வெட்டிற்கு இலக்காகினர். இதனால் அக்கிராமமக்கள் மத்தியில் அச்சமும் பதட்டமும் ஏற்பட்டது. அக்கிராமத்தில் கூடிநின்ற பொதுமக்கள் மீது அங்குவந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி கலைத்தனர். மூதூர் தமிழ் மக்களைப்பொறுத்தவரை அவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களைப்பொறுத்தவரை சிங்கள இராணுவத்தினரையோ பொலிஸாரையோ நம்பத்தயாராக இல்லை. படையினர் முன்னிலையிலேயே முஸ்லீம் கும்பல்கள் தமிழர்களை தாக்கிய பல சம்பவங்கள் உண்டு. இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கென யாரும் இல்லை. அவர்கள் அச்சத்துடன் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மூதூர் மெதடிஸ்த தேவாலய குரு தெரிவித்துள்ளார். கிழக்கில் திருக்கோவில் வட்டமடுவில் நடந்த சம்பவமும் தமிழ் மக்களைச் சீண்டும் ஒரு நடவடிக்கையாகும். திருக்கோவில் வட்டமடுவில் கால்நடைகளுக்கான மேச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் தமக்குச் சொந்தமென சில முஸ்லீம்கள் உரிமைகோரி விவசாயத்தில் ஈடுபட முற்பட்ட போது அங்கு தமிழ் முஸ்லீம் விவசாயிகளுக்கு இடையில் மோதல் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு சொந்தமான இந்நிலம் மேச்சல்தரை நிலம் என 1977ம் ஆண்டு வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அந்த காணியை கள்ளஉறுதி தயாரித்து இப்போது தங்களுக்குச். சொந்தம் என சில முஸ்லீம்கள் உரிமை கொண்டாடுகின்றனர். தமது

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# ஆனந்தசங்கரிக்கு எதிராக அவநம்பிக்கை பிரேரணை!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து ஆனந்தசங்கரி உடனடியாக விலகவேண்டும், அல்லது செயலாளர் மத்தியசெயற்குழுவைக் கூட்டி அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தமிழர் விடுதலைக்கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டக்கிளை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. திருகோணமலையிலும் இவ்வாறான ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அம்பாறையில் எதிர்வரும் 2ம் திகதி கூட்டணி கிளை கூடி இவ்வாறான ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற இருப்பதாக அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தெரிவித்திருக்கிறார்.



கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தில் மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் சிலரை அழைத்து மந்திராலோசனை நடத்தியதும், பின்னர் விடுதலைப்புலிகளின்ஊடகப்பேச்சாளர் தயா மாஸ்ரரை வன்னியில் சந்தித்துப் பேசியதும் தமிழரசுக்கட்சிக்குப் புத்துயிர்கொடுக்க மாவை முயற்சி என்றும், தமிழரசுக்கட்சிதான் இனித் தலைதூக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணி அஸ்தமனமாகிவிடும் என்றும் கடந்த வாரங்களில் பல செய்திகள்வெளிவந்தன. தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் அளிக்க எடுக்கப்பட்ட முயற்சிக்கும், தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைமையை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதை மறுக்க முடியாது. கடந்த ஜுலை 6ம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்தியசெயற்குழு கூடியபோது தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து ஆனந்தசங்கரியை நீக்கிவிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆனந்தசங்கரியை பதவியிலிருந்து நீக்குவதற்குப் பதிலாக அவர் மீது நம்பிக்கைதெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இப்பிரேரணையை யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தஆவரங்கால் சின்னத்துரை முன்மொழிந்த போது மட்டக்களப்பைச் சேர்ந்த அல்போன்ஸ்மேரி வழிமொழிந்தார். அதே அல்போன்ஸ் மேரி இன்று ஆனந்தசங்கரியை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்ற மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தீர்மானத்தை கையொப்பம் இட்டு செயலாளர் நாயகம் ஆர்.சம்பந்தனுக்கு அனுப்பிவைத்திருக்கிறார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொள்கை முரணாகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிவரும் விடுதலைப்புலிகளை அவமானப்படுத்தும் வகையிலும் பேசி வரும் ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த மே மாதத்திலிருந்து விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் மாவட்டக் கிளைகள் இப்போதுதான் விழித்தெழுந்திருக்கின்றன. இந்த காலம் தாழ்த்தலுக்கான காரணம் என்ன? தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமையை மாற்றுவதற்குப் பதிலாக மாவை சேனாதிராசா தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் கொடுக்கமுற்பட்டதேன் ? இவ்வாறான கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததாகும். தமிழர் விடுதலைக்கூட்டணி பொதுச்சபையைக் கூட்டி தலைவரை மாற்றுவார்கள் என எதிர்பார்த்ததற்கு மாறாக ஆனந்தசங்கரி மீது நம்பிக்கைப் பிரேரணை கொண்டுவந்தது விடுதலைப்புலிகளை மிகவும் ஆத்திரப்படுத்தியிருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனால் தமிழர் விடுதலைக்கூட்டணியை விடுதலைப்புலிகள் ஒதுக்கிவைக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டார்கள். இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பாக ஆராய்வதற்காக பாரிஸ் செல்வதற்கு முதல் தமிழ் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி ஆகியவற்றை அழைத்து பேசிய போதிலும் தமிழர்விடுதலைக்கூட்டணியை அழைத்து பேசவில்லை. இதன் பின்னர் கடந்த வாரம் மாவை சேனாதிராசாவையும் ஆர்.சம்பந்தனையும் அழைத்து பேசியிருக்கிறார்கள். தமிழ் தேசியக்கூட்டமைப்புப் பிரதிநிதிகளை சந்தித்த பின் தனியாக கூட்டணி பிரமுகர்கள் இருவரையும் அழைத்து விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து ஆனந்தசங்கரியை நீக்குவதற்குநடவடிக்கை எடுக்காது தமிழரசுக்கட்சிக்கு மாவை சேனாதிராசா புத்துயிர் கொடுக்கமுற்பட்டதற்கும் சில காரணங்கள் இருக்கின்றன. ஆனந்தசங்கரியை பதவியிலிருந்து நீக்குவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது.இந்தியாவை மாவை சேனாதிராசா பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மாவை மட்டுமல்ல தமிழர்விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பலரது நிலைப்பாடும் அதுதான். மாவை சேனாதிராசாஉட்பட பலரது குடும்பங்கள் இந்தியாவில் தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல இந்தியாவின்சொல்லை மீறி ஒரு அடி கூட எடுத்துவைக்க கூட்டணியில் உள்ள பலர் தயாராக இல்லை. இந்த நிலையில் மாவை சேனாதிராசாவைப் பொறுத்தவரை தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர்கொடுப்பதன் மூலம் ஒரு கல்லில் பலமாங்காய்களைப் பெறலாம் என நினைத்திருக்கக் கூடும். தமிழரசுக் கட்சிக்கு புத்துயிர்கொடுத்து அதற்கு தான் தலைவரானால் தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவரை பதவி நீக்க வேண்டும் என்ற பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியும். தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று கூறிவிடுதலைப் புலிகளின் கோப பார்வையிலிருந்து தப்பிக்கொள்ள முடியும். அத்துடன் இந்தியாவிற்கும் நல்லபிள்ளையாக இருந்து விடமுடியும். தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவியை இலகுவாக பெற்றுக்கொள்வதன் மூலம் தனது அரசியல்இருப்பையும் தலைமையையும் காப்பாற்றிக்கொள்ள முடியும். இந்தியா, விடுதலைப்புலிகள் என்ற முரண்பட்ட இருதரப்பிற்கும் நல்ல பிள்ளையாக இருப்பதற்குமாவை தேர்ந்தெடுத்த வழிதான் தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் கொடுப்பதாகும். ஆனால் அதற்குவிடுதலைப்புலிகள் இடம்கொடுக்கவில்லை. தமிழரசுக்கட்சிக்கு புத்துயிர் கொடுப்பதென்றபேச்சை விட்டுவிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியைப் புனரமையுங்கள் என விடுதலைப்புலிகள் மாவைசேனாதிராசாவிடம் கடந்த வாரம் வன்னியில் வைத்து கூறிவிட்டனர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் சம்பந்தனும் இந்தியாவையும் ஆனந்தசங்கரியையும் விடுதலைப் புலிகளையும் பகைக்காது அரசியலை கொண்டுநடத்தலாம் என எண்ணி காலத்தைக் கடத்திவந்த போதிலும் அந்த காலம் கடத்தலோ அல்லது மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும்காட்டி வாழலாம் என்ற எண்ணமோ இனிமேல் சரிவராது என்ற நிலையில் தலைமையை மாற்றவேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்திருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்ட கிளை கூட காலம்கடந்த நிலையிலேயே இத்தீர்மானத்தை எடுத்திருக்கிறது. மட்டக்களப்பு மாவட்ட கிளையின் செயலாளர் அல்போன்ஸ் மேரி தான்கொழும்பில் நடந்த மத்திய செயற்குழு கூட்டத்தில் ஆனந்தசங்கரி தொடர்ந்தும் தலைவராகஇருக்க வேண்டும் என்று அவர் மீது நம்பிக்கை தெரிவித்து கொண்டுவரப்பட்ட பிரேரணையைவழி மொழிந்தவர். இந்தப் பிரேரணை மீது எந்த ஒரு உறுப்பினரும் அன்று ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. மூன்று மாதங்கள் கடந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் அவசரஅவசரமாககூட்டப்பட்டு தலைவரை நீக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.மத்தியசெயற்குழுவில் ஆனந்தசங்கரி மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையைவழிமொழிந்த மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் அல்போன்ஸ்மேரி கடந்த ஞாயிற்றுக்கிழமைஆனந்தசங்கரியை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டிருப்பதாக கூட்டணியின் செயலாளர் நாயகத்திற்கு அறிவித்திருக்கிறார். மீண்டும் கூட்டணியின் மத்திய செயற்குழு கொழும்பில் கூடும் போது அல்போன்ஸ்மேரிபோன்றவர்கள் என்ன மனநிலையுடன் இருப்பார்கள் என்பது கேள்விக்குறியே. எவ்வாறு இருப்பினும் மாவட்ட கிளைகள் கோரும் இடத்து செயலாளர் மத்திய செயற்குழுவை கூட்டவேண்டும். மத்தியசெயற்குழுவில் உள்ள 36 அங்கத்தவர்களில் மட்டக்களப்பு மாவட்ட கிளையிலிருந்து10அங்கத்தவர்களும், யாழ்.மாவட்ட கிளையிலிருந்து 10பேரும், வன்னியிலிருந்து 6பேரும்,அம்பாறை திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தலா 5பேரும் அங்கம் வகிக்கின்றனர்.இவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளான ஆவரங்கால் சின்னத்துரை,முகுந்தன், அரவிந்தன், ஆகியோர் மட்டுமே ஆனந்தசங்கரிக்கு ஆதரவாக இருப்பார்கள் என்றும்ஏனைய 32 அங்கத்தவர்களும் ஆனந்தசங்கரியை மாற்றுவதற்கு ஆதரவாக இருப்பார்கள் என்றும்நம்பப்படுகிறது. ஆனந்தசங்கரியை தலைவர் பதவியிலிருந்து நீக்கிய பின் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு தலைவராக யாரைத் தெரிவு செய்வது என்ற பெரும் சிக்கல் ஒன்றும் எழுந்திருக்கிறது. கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவராக இருக்கும் ஜோசப் பரராசசிங்கமா? மாவைசேனாதிராசாவா? ஆர்.சம்பந்தனா? என்ற கேள்விகளும் எழுகின்றன. ஜோசப் பரராசசிங்கத்தைத் தலைவராக தெரிவு செய்தால் தலைவரும் செயலாளரும் கிழக்கைசேர்ந்தவர்களாக இருப்பார்கள். வடக்கு ஓரங்கட்டப்பட்டு விடும் என்று சிலர் கூறுகின்றனர். வடக்குக் கிழக்கு என்று பார்க்கமுடியாது. ஆளுமை மிக்கவர்கள் யார் என்றுதான் பார்க்க வேண்டும். சிவசிதம்பரம் தலைவராக இருந்தபோது அமிர்தலிங்கம் செயலாளராக இருந்தார். இருவரும் வடக்கைச் சேர்ந்தவர்கள். அப்போது கிழக்கில் உள்ள யாரும் அதைப்பற்றிப் பேசவில்லையே. பெரும்தன் மையும் கிழக்கில் உள்ளவர்கள் அதை விட்டுக்கொடுத்தார்கள்.எனவே கிழக்கில் உள்ளவர்கள் தலைவராகவும் செயலாளராகவும் இருப்பது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. இவைகளுக்கு அப்பால் கல்விமான் ஒருவரை தமிழர் விடுதலைக்கூட்டணிக்குத் தலைவராக தெரிவுசெய்ய வேண்டும். அவர் கட்சியை வழிநடத்தவேண்டும். தேர்தலில் போட்டியிடாது தமிழ்மக்களின் நலனில் அக்கறையோடு கட்சியை வழிநடத்தக் கூடிய ஒருவரைத் தலைவராக தெரிவு செய்யவேண்டும். அதற்கு பொருத்தமானவராக யாழ். பல்கலைக் கழகத்தில் உள்ள பேராசிரியர் ஒருவரின் பெயரும் முன்வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பொதுநோக்கத்தோடு முன்வைக்கப் பட்டிருக்கும் இக்கோரிக்கையை வெறும் சுயநலஅரசியல் இலாபத்துடனும் செயற்படும் கூட்டணியின் இன்றுள்ள மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்களா ?

(இரா.துரைரத்தினம்)

> இந்தியாவை மாவை சேனாதிராசா பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மாவை மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தர்கள் பலரது நிலைப்பாடும் அதுதான்.



> தேர்தலில் போட்டியிடாது தமிழ்மக்களின் நலனில் அக்கறையோடு கட்சியை வழிநடத்தக் கூடிய ஒருவரை தலைவராக தெரிவு செய்யவேண்டும்

## போடியார் பொறிவெடி

**சமாதான காலத்தில் புலிகளின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.** -ஜனாதிபதி சந்திரிக்கா-



உங்கட வாய் நாளுக்கு நாள் அதிகரிக்கக்குள்ள அவங்கட பலம் கூடத்தான் செய்யும்........

*''வாழ்வு சமைப்பதற்காகவே வருங்காலம்*
*எத்தனை அழகுடன் இருந்த வெளி .*
*எத்தனை வலுவுடன் நடந்த வழி.*
*அமைதியின் பேரால் அடக்கப்படுகின்றது.*
*பெருகிப் பாய்ந்த ஆற்றின் பிரவாகம்*
*போத்தலில் அடைக்கப்படுகிறது.*
*வீட்டுக்குரியவர் வெளிநாட்டில் அகதி*
*வெளிநாட்டுக்காரர்கள் ஊருக்குள் அதிதி*
*வியாசனுக்கிது வேடிக்கையாகப் படுகிறது''*

(நன்றி:- விடுதலைப் புலிகள் ,குரல்- 110, ஆடி-ஆவணி 2003) முக்காலமுணர்ந்த வியாசனுக்கு மட்டுமல்ல ,அண்மைய அரசியலரங்க அவதானங்களை அப்பழுக்கற்று நோக்குவோருக்கும் தமிழர் சேவையின் படைவலுச் சமநிலையை உயர்த்தியது. கட்டுநாயக்காவில் சிங்களப்படைப் பொறியின் பொருண்மியம் ''கட்டுண்டு''போகச் செய்யப்பட்டது. இப் பின்னணியில் தான் நோர்வே மூன்றாந்தரப்பு அனுசரணையுடனான அமைதிப் பேச்சுக்கான பேச்சுக்கள் பரவலாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இங்கேதான் இன்னொரு ''சர்வதேச தலையீடு''பற்றிப் பார்க்க வேண்டி இருக்கிறது. அது என்ன? ''சர்வதேச சண்டியர்''ஆன அமெரிக்காவின் அதிகப் பிரசன்னமும்,அதிகப் பிரசங்கித்தனமான அரட்டையும் அமெரிக்காவின் வாணிபப் போட்டியாளரும் ,இயற்கை மூல வளங்களைப் பாரியளவில் தன்னகத்தே வேண்டும். சொல்லக் கூடியவர்கள் அரசறிவியல் ,சமூகவியல்,பொருண்மியம் போன்ற பல்கலைக் கழகத் துறைகளுக்கு இத் தேவைப்பாட்டை எடுத்துச் சொல்லி ஆவன செய்வது வரவேற்கப்படும்.

சமாதானப் பேச்சுக்கான பேச்சுக்களின் பல். வேறு கட்டங்களின் பின்பும் வீறு படுத்தப்பட்டுள்ள ''மேம்பாட்டுக் கருத்திட்டங்கள்'' தொடர்பாகக் கவனம் செலுத்தப் பட்டே ஆக வேண்டும். போர் நடைபெற்ற காலத்தில் மேம்பாடு/அபிவிருத்திச் செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட்ட தமிழர் தாயகப் பரப்புகளிலும் வேலைத் திட்டங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்கதே. பல்கிப் பெருகியுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களும் ,அரசாங்கத்தின் விசேட செயற்திட்டப் பிரிவுகளும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை மேற் கொண்டதாக அவ்வப் போது பட்டியலிடுகின்றன. பல செயற்திட்டங்கள் நடைபெற்றுள்ளன. பாராட்டுகிறோம். இவற்றின் வெளியீடுகளது வினைத்திறன் தொடர்பாக ஐயம் எழுவதை உரியவர்கள் கவனிப்பார்கள் என எதிர் பார்ப்போம். பெருமளவு பன்னாட்டு நிதி வழங்கல் மூலம் முன்னெடுக்கப்படும் இவை, எமது தமிழர் தாயக மேம்பாட்டுக்கு உச்சளவில் ,சரிவரப் பயன்படுத்தப் பட வேண்டும். என்பதே எமது வேணவா.

# சமாதான முன்னெடுப்பில் மேவும் சர்வதேச பொருண்மியநலன்

நிலை அதே. ''சமாதானம்'' என்பதை உச்சாடனம் செய்து கொண்டு ,''கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழிகள் '' பலவும் வீரியம் காட்ட முற்பட்டுள்ளன. ''அரச சார்பற்ற ''(?)என்ற அடையாளத்துடன் சர்வதேச முகவர்கள் பலர் முகாம் இடுகின்றனர். அகலக் கால் பரப்புகின்றனர். இப் பின்னணியிலும் முன்னம் பல்வேறு இடங்களிலும் உரைத்ததையே மீள மீள வலியுறுத்திக் கூறுகின்றோம்,''என்றும் வழிப்புணர்ச்சியோடு இருப்பது தான் விடுதலைக்குக் கொடுக்கும் விலை'' இதை இன்னும் ஒரு விதத்தில் கூறுகிறோம்.

இப்போது இந்துக்களின் விரதங்கள் (கேதார கௌரி காப்பு விரதம் ,கந்த சஷ்டி விரதம் முதலானவை) அனுஸ்டிக்கப்பட்டுள்ளன. இவ் வேளைகளில் வயதில் பெரியவர்கள் கூறிய கருத்தொன்றைப் பார்ப்போம். ''விரத நாள்களில் குறிப்பாகப் பகல் தூக்கம் கடுமையாகத் தவிர்கப் பட வேண்டும். அவ்வாறின்றி சிறிது தூங்கினாலும் விரதப் பலன் குன்றிவிடும்'' என்ற கருத்தே அது. இக் கருத்தை மேற்போந்த ''விழிப்புணர்ச்சி''யுடன் தொடர்புபடுத்திப் பாருங்கள். வடகிழக்கு இணைந்த



தமிழ் மரவுவழித் தாயக ஆள்புலத்தில் (TERRI-TORY) நிரந்தர கௌரவமான சமாதானத்தை வேண்டிப் பல் பரிமாணப் போராட்டத்தை (விரதத்தை) முன்னெடுக்கும் எம்மை, எமது எதிரியினதும் நேச சக்திகளதும் முகவர்களால் எமது ''பொருண்மிய நலன்'' சார்ந்ததாக ''பெரிது படுத்திக் காட்டப்படுகிற'' செயற்பாடுகள் (?) ''பகல் தூக்கம்'' (குட்டித்தூக்கம்/ கோழித் தூக்கம்) என்ற அற்ப சுகத்தைத் தந்து ''விரத பலனை'' அர்த்தம் இழக்கச் செய்து விடக் கூடும் என்ற பட்டறிவைப் புரிந்து கொள்ளுங்கள். பல்வேறு ''மாயைகள்''புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின்பாக, எம் மத்தியில் இனங்காணப்பட்டுள்ள நிலையில், ''பொருண்மிய மாயை''யும் அவதானத்துடன் அடையாளம் கண்டு, அதிலிருந்து எம்மை விடுவிக்க இணைந்து புரிந்துணர்வுடன் பணியாற்றுவோம்.

இரு தசாப்த காலத்திற்கும் மேலான போரை நிறுத்திப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண தமிழர் தேசம் பல சந்தர்பங்களிலும் முன் வந்திருந்தது. அவை சிங்கள ஆட்சியாளர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தம் மீது திணிக்கப் பட்ட அநீதியான போரை எதிர் கொள்ள நேரிட்டமையே வரலாறு. கலாசாரத்தின் சுழற்சியும்,வரலாற்றை வழங்குபவ்ரின் வழிகாட்டலும் கொண்டிராத பாரிய சந்தைப் படுத்துனருமான ஜப்பானின் ''திடீர்''கரிசனையும்........ என அவை பட்டியலிடப்படலாம். தற்போது சந்திரிகா அம்மையாராலும் அவரது பரிவாரங்களாலும் பரவலாகக் கண்டிக்கப்படும் ''நோர்வே'' மூன்றாந்தரப்பு அனுசரணைக்கும் மேற்படி சக்திகளுக்குமிடையிலான ''உறவையும்''உரியவாறு உள்ளுணர்ந்து கொள்வது தேவையானதே.

சர்வதேச சக்திகளது புலப்படுத்தப்படாத இலக்கு (INVISIBLE TARGET) ஆக சந்தைமையப் படுத்துவதை சர்வதேச படிப்பினைகளுடன் சிறிதளவேனும் தொடர்புபடுத்திக் காணுங்கள். இவ்வாண்டில் ''தமிழ் அலை''வார வெளியீட்டிலும்,''வீரகேசரி'' வாரவெளியீட்டிலும் வெளிவந்த ஆய்வாளர் டி.சிவராம் அவர்களின் தமிழ் மூலக் கட்டுரைகள் பலவற்றின் மூலமாகவேனும் ''சமாதான முன்னெடுப்பு'' தொடர்பான இவர்களின் தனிப்பட்ட நலன்களை இயன்றவரைத் தேடிப் படித்தறியுங்கள். (இவ்வாறான வேறு காத்திரமான கட்டுரைகள் வந்திருப்பினும், பரவலாக வாசிப்புக்குக் கிடைக்கக் கூடியவை என்பதாலேயே இவ்விரு அச்சு ஊடகங்களை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறேன் என்பதைக் கவனத்தில் கொள்க.)

அண்மைக் காலமாக சர்வதேச அளவில் நடைபெறுகின்ற அழகுராணிப் போட்டிகளின் ''கபடத்தை''காலங்கடந்தேனும் பலர் புரிந்து கொள்ளத் தலைப்பட்டுள்ளதை ஊடகங்கள் ஊடாக அறிய முடிகிறது. பன்னாட்டு வாணிப நிறுவனங்கள் தமது நுகர்வுப் பண்டங்களை வளர்ந்து வரும் நாடுகளில் பெரும்பாலும் நடுத்தர மக்கள் மத்தியில் இலகுவில் விற்றுத் தீர்ப்பதற்காகக் கையாளும் கவர்ச்சிகர சந்தைப்படுத்தல் தந்திரோபாயமே அது என்று பட்டுணர்ந்துள்ளனர். சர்வதேச சக்திகளின் சந்தைமைய சமாதானச் செயற்பாட்டை நாமும் உணர்ச்சிகளில் இருந்து விடு பட்டு அறிவு சார் ரீதியில் புரிந்து கொள்ள முற்பட வேண்டும். சமாதான முன்னெடுப்பில் மேவும் சர்வதேசப் பொருண்மிய நலன் பற்றி நாம் அசட்டையாக இருந்து விட முடியாது. ''ஒப்புக்குப் போர்த்திய அமைதித் திரையின் அரங்கள் பற்றி எரிகின்றன'' என்று மீளவும் நாம் பாடாமல் இருக்க, பயனுறுதியான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அரசியல் விழிப்புணர்வு நிரம்பவே மீளவும் இன்று தேவைப்படுகிறது. இவ் விடயத்தில் தமிழ் பல்கலைக் கழகங்களின் துறைசார் அமைப்புக்கள் ஆக்கபூர்வமாக விரைவாகச் செயற்பட முன்வர

> **தற்போது சந்திரிக்கா அம்மையாராலும் அவரது பரிவாரங்களாலும் பரவலாகக் கண்டிக்கப்படும் ''நோர்வே'' மூன்றாந்தரப்பு அனுசரணைக்கும் மேற் படி சக்திகளுக்குமிடையிலான ''உறவையும்''உரியவாறு உள்ளுணர்ந்து கொள்வது தேவையானதே.**

இவ்விடயத்தில் ''பொருண்மிய மேம்பாடு'' பொருண்மிய வளர்ச்சி'' என்ற இரு பெயர்களிடையேயான வேறுபாட்டைப் புரிவதும் அவசியமாகிறது. பணரீதியான வருமான மட்ட உயர்வை மட்டும் ''பொருண்மிய வளர்ச்சி ''குறித்து நிற்க ,''பொருண்மிய மேம்பாடு''என்பது விரிவான சிந்தனையாக ,முழுமையான சமூகக் கட்டமைப்பின் மேல் நோக்கிய உயர்வைக் குறிப்பதாகப் பொருளியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். பொருண்மியம் மேம்பாடு நிலைத்து நிற்பதாக (SUSTAINABLE) அமைவதே வரவேற்கத் தக்கது என்பதையும் கவனத்தில் கொள்ளுவோம்.

**துரை மேகநாதன்**

இச் சுருக்க விளக்கத்துடன்,எமது தாயகப் பரப்பில் பன்னாட்டு நிதி வழங்கலுடன் மேற்கொள்ளப்படும் சில கருத்திட்டங்களை நோக்கி எம்மை நாமே சுய சோதனை செய்து கொள்வோம். தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவன அமைப்புக்களும் ,அண்மைக்கால அபிவிருத்திக் குழுக்களும் திறம்பட அதிக வினைத்திறனுடன் செயற்படுவது பாராட்டத்தக்கது. தென் தமிழீழத்தில் குறிப்பாக மட்டு- அம்பாறையில் அண்மைக் காலமாகப் பிரதேச செயலக (கோட்டம்) ரீதியில் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வுகள் உரிய நெறிப்படுத்தலும் நடைபெற்று வருவது நல்லடையாளம், வரவேற்கத்தக்கது. அரசியல் விழிப்புணர்வைப் பரவலாக எம்மிடையே வேண்டுகின்ற வேளையில் பொருண்மியம் பற்றிய புரிந்துணர்வும் பெரிதாகத் தேவைப்படுவதை அன்புக் குரியவர்களே அக்கறையுடன் அறிந்து கொள்ளுங்கள். ''போர் நிறுத்த உடன்படிக்கை'' மூலம் கிடைத்துள்ள இந்த வேளையில், ,பொருண்மிய ரீதியிலும் எமது தாயகத்தை வலுவூட்டிக் கொள்வோம். சமாதான முன்னெடுப்பில் மேவும் சர்வதேசப் பொருண்மிய நலனைத் தக்கவாறு கையாண்டு எமது தாயகத்தை வளமூட்டுவோம். பூகோள மயமாக்கலில் புறந்தள்ளப்பட முடியாததாய் புலப்படும் பொருண்மிய நலனைத் தமிழீழத் தாயகத்துக்குச் சாதகமாக்கப் புடம் போட்டுப் புதுமை புனைவோம்!



# தமிழ், சிங்கள கலைக்கூடலில் இரத்தக்கறை படியவைத்த சிகல உறுமய

"முகிழ்ந்து மலர்வோம் நம் சோதர உறவுடன்" எனும் சிங்கள- தமிழ் கலைஞர்கள் ஒன்று கூடலில் சிங்களப் பேரின வாதிகள் நன்கு திட்டமிட்டு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த இருபது வருடகாலப் போர் அரக்கனால் தமிழினம் வேறு, சிங்கள இனம் வேறு என்ற இனமுரண்பாடுகள் வேரூன்றி விருட்சமாகி இனவாதக் காடாக பரந்திருக்கும் ஒரு சூழலில் இரு இனக்கலைஞர்களின் சங்கமம் இன ஐக்கியம், புரிந்துணர்வு என்பவற்றைப் பேணிவளர்க்கும் என்பது அனைவரதும் நம்பிக்கை.

இரு இனங்களின் எழுத்தாளர்கள், கவிஞர்கள், புத்திஜீவிகள் எனப் பல்வேறு கலைஞர்கள் ஒன்றிணைவதால் இரு இனங்களுக்கிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும். கருத்துக்களை மிக ஆழமாகப் பரிமாறுவதன் மூலம் ஒருவரது எண்ணக்கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இதனை மையமாகக் கொண்டே மாற்றுக் கொள்கைகளுக்கான பத்திரிகையாளர் அமைப்பு சிங்கள தமிழ் கலைஞர்கள் கூடலை தலைநகரில் ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வாறான ஒரு நிகழ்வு கொழும்பில் நடைபெறுவதற்கான அடித்தளமிடப்பட்ட போதே இனவாதப் பரப்புரை செய்யும் சில ஊடகங்கள் விமர்சிக்கத் தொடங்கின. "ஹிறு" குழுவினர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு புலிகள் நடாத்தும் "பொங்கு தமிழ் நிகழ்வு"இதற்கு எவரும் இடமளிக்கக் கூடாது. இவ்வாறான பிரசாரங்கள் தென்னிலங்கையில் பரப்பப்பட்டன. எனினும் ஏற்பாட்டாளர்களின் அயராத முயற்சியால் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் இரு நாள் கலைக்கூடலை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது. தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்தும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள் எனப் பெரியதொரு தமிழ்க்குழாம் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வைக் குழப்ப வேண்டும் என்ற நோக்கில் திட்டமிடப்பட்ட 20 சிகல உறுமய கட்சியினரும், ஜே.வி.பி கட்சியின் மாணவர் அமைப்பினரும் நிகழ்வு நடைபெறும் கலைக்கூடல் மண்டபத்தினுள் 29ம் திகதி புதன்கிழமை வந்து அமர்ந்திருந்தனர்.

நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மு.ப.11.30 மணியளவில் புனைக்கதை நிகழ்வு இடம் பெற்றது. கலாநிதி செ.யோகநாதன் உரையாற்றிக் கொண்டிருந்த போது சிகல உறுமய குண்டர்கள் பிதண்டவாதப் பேச்சுக்களைத் தொடுத்து குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், கலைஞர்கள் மீதும் தாக்குதல் நடத்த முயற்சித்தனர்.

" பேச்சை நிறுத்து பொங்கு தமிழ் விழாவா? உங்களைப் பேசவிடமாட்டோம் " என்று ஒரே கூச்சலில் கோசமிட்டனர்.

சிலர் மேடையில் பேசிக்கொண்டிருந்த யோகநாதனை தாக்குவதற்காக மேடையை நோக்கி போகமுயற்சி செய்தனர். அச்சமயம் ஏற்பாட்டாளர்களும் விழா மண்டபத்தின் முன் அமர்வுகளில் இருந்தவர்களும் அந்த நபர்களைத் தடுத்தனர். அமளி துமளி ஏற்பட்டது. இந்நிலையில் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தமிழ் கலைஞர்களைப் பயப்பட வேண்டாம் எனக் கூறியதுடன் குழப்பக்காரர்களை சிறிலங்காப் பொலீசாரின் துணையுடன் வாசலுக்கு வெளியே அப்புறப்படுத்தினர். அந்தச் சந்தர்ப்பத்தில் வெளியே அகற்றிய ஏற்பாட்டாளர்கள் மீது இனவாதக் கும்பல் தாக்கியதுடன் ஏற்கனவே திட்டமிடப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த குண்டர்படையும் தாக்குதலில் ஈடுபட்டது. புதிய நகர சபை மண்டபத்தின் வாயிலைப் பொலீசார் மூடிய போதும் முட்டி மோதி உள்ளே நுளைந்து அங்கிருக்கும் தமிழ் கலைஞர்கள் மீது தாக்குதல் நடத்துவது இவர்களது நோக்காக இருந்தது.

அவ்வாறன ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தால் எண்ணிப் பார்க்கவே நெஞ்சு வேதனை கொள்கிறது. தமிழ்த் தேசத்தின் கலைஞர்கள் சிங்கள இனவாதிகளால் அழிக்கப்படுவதுடன் மீண்டும் கறுப்பு யூலைக்கு இச்சம்பவம் வழிவகுத்திருக்கும். அத்தகைய சூழ் நிலையில் இருந்து மயிரிழையில் தப்பிப் பிழைத்து விட்டது இலங்கைத் தேசம்.

எனினும் ஊடகவியலாளர்கள் உட்பட நான்கு சிங்களக் கலைஞர்கள் படுகாயமடைந்து கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் பலர் காயமடைந்துள்ளனர். தமிழ்க்கலைஞர்களைச் சிங்கள இன வெறியாளர்களிடமிருந்து காப்பற்றுவதற்காக சிங்களக் கலைஞர்கள் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசத்திலிருந்து சென்ற கலைஞர் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒலிநாடாக்களின் உதவியுடன் கலவரத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டியது சிறிலங்கா அரசின் தலையாய கடமையாகும்.

கடந்த வருடம் யாழ் நகரில் மானிடத்தின் தமிழ் கூடல் மூவினக் கலைஞர்கள் சங்கமாகிய நிகழ்வு நடைபெற்றது. தென்னிலங்கையில் இருந்து கணிசமான கலைஞர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்து இந்த மானுடத்தின் தமிழ் கூடலில் கலந்து கொண்டனர். மூவினக் கலைஞர்களுக்கிடையேயும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தவும் கடந்த இருபது வருட கோரயுத்தத்தினால் தமிழ்த் தேசியம் சந்தித்திருக்கும் இழப்புக்களையும் வேதனைகளையும் அங்கே சிங்களச் சகோதரர்கள் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

யாழ்நிகழ்வில் சிங்களக் கலைஞர்கள் கலந்து கொண்ட போது தமிழர்கள் அவர்களைப் பொல்லுகள் தடிகள் கொண்டு தாக்க வரவில்லை. அவதூறான நடவடிக்கையிலோ ஈடுபட வில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியது ஒன்றாகும். இவைதவிர புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின்னர் வடக்குக் கிழக்கின் பலபாகங்களுக்கும் சிங்கள மக்கள் சென்று வருகிறார்கள். இவர்கள் தமிழ் மக்களாலோ அல்லது விடுதலைப் புலிகளாலோ எவ்விதத் துன்புறுத்தலுக்குமிலக்காகவில்லை.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் புரையோடிப்போய் கிடக்கும் இன முரண்பாடுகளைக் களைந்து நல்லுறவைக் கட்டியெழுப்ப மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தீமை விளைவிக்கும் கர்த்தாக்களாக சிகல உறுமய வின் சிங்களக் காடையர்களும், ஜே.வி.பி குண்டர்களும் இணைந்து செயற்பட்டமை வரலாற்றில் ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாடு துண்டாகக் கூடாது. ஐக்கிய இலங்கைக்குள் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணப்போவதாகப் பேரினவாதக் கட்சிகளின் தலைவர்கள் கூக்குரல் இடுகின்றனர். அரசுக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிராக வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். இவர்களின் வர்க்கத்தினர் கலைஞர்கள் கூடல்களைத் துவசம் செய்ய முற்படுவது இந்த சிறிலங்காத் தேசத்தில் இரு இனங்களும் பிரிந்து வாழ்வதைத்தான் உறுதிப்படுத்துகிறது.

அதனைத் தவிர தமிழினத்திற்கு வேறு வழியில்லை என்பது தற்போது உறுதியாகிவிட்டது.


~வேணிதன் ~

**கொழும்பில் பொங்கு தமிழ் விழா என்ற புரளியை இரண்டு வாரங்களுக்கு முன்னமே சில சக்திகள் கிளப்பி விட்டன. இவ்வாறான பொய் புரளிகளைக் கிளப்புவதற்கு தெற்கில் சில பத்திரிகைகள் துணைபோயுள்ளன.**

-ஊடகவியலாளர் .டி.சிவராம்.

**தமிழர்களைப் புலிகள் எனக் கூறி சிலர் சங்காரம் செய்கின்றனர். இவர்களின் இந்த மிலேசத்தனமான செயலுக்கு இடமளித்தால் நாடு இருகூறாகிவிடும். எனவே நாம் எல்லோரும் விழிப்புடன் ஒன்றிணைந்து ஐக்கியத்தைக் காப்பாற்ற வேண்டும்.**

*-திரைப்படக் கலைஞர் தர்மசிறி பண்டார நாயக்கா*





## சொன்னாலும் குற்றம்



சிறிலங்கா அரசினால் வருடா வருடம் இடம் பெறும் வழமையான சாகித்திய விழாவில் இம் முறையும் பல தமிழ் எழுத்தாளர்கள் தமது நூல்களைத் தெரிவுக்காக அனுப்பிவிட்டு பரிசு கிடைக்கும் என பகல் கனவு கண்டார்கள்.

ஆனால் நம்பியிருந்தவர்கள் எவருக்கும் பரிசு கிடைக்கவில்லை. நம்பாமல் இருந்தவர்களுக்கு அதிஷ்டம் கிடைப்பது போன்று பரிசினைத் தட்டிக் கொண்டார்கள்.

தமிழ் நூல்களைத் தெரிவுசெய்யும் குழுவினர் நூல்களை வாசித்து சுவைத்து புள்ளிகள் போட்டு தெரிவு செய்வதை விட்டு முகஷ்துதி, அறிமுகம், செல்வாக்கு, பிரபல்யம், என்பவைகளை வைத்து நூல்களைத் தெரிந்ததாக பல இலக்கிய வான்கள் புறு புறுக்கின்றனர்.

இவர்கள் இப்படிச் செய்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. இந்தக் குழுவினர் கொழும்பிலுள்ள பென்னாம் பெரிய ஆசிரியர் ஒருவரிடம் "அட்வைஸ் "கேட்டார்களாம். அந்த சிவனின் தம்பி ஒருவர் நூல் எழுதிய நூலாசிரியர்களின் பெயர்களை வாசிக்கும் படி கூறிவிட்டு அதில் இருந்து பரிசுக்குரிய நூல்களை தெரிந்து கொடுத்தாராம்.

இந்தத் தெரிவால் பல நூலாசிரியர்களின் கதைகள் பாராட்டுக்கு வராமல் போனதாம் இந்த அதிஷ்ட தெரிவில் மட்டக்களப்பு எழுத்தாளர்களுக்கு "சாண்ஸ்"கிடையாமல் போனது எண்டு மனம் நொந்து சில எழுத்தாளர்கள் கதைக்கின்றனர். சிறிலங்கா அரசின் சாகித்திய விழா தானே இப்படித்தான் இருக்கும் என்ற கொழுத்த இலக்கிய வாதிகள் கதைப்பதிலும் வெளிச்சம் இருக்கவே செய்கிறது.

# மட்டு மாவட்ட மீன்பிடித்துறை அபிவிருத்தி அடையவேண்டியது அவசியம்



விவசாயத் தொழிலுக்கு அடுத்த படியாக மட்டக்களப்பு மாவட்டம் மீன் பிடித்துறையில் சுமார் பதினையாயிரம் குடும்பங்கள் ஜீவனோபாயத் தொழிலாகச் செய்து வருகின்றனர்.

கடந்த இருதசாப்தங்களாக எமது தாயகத்தில் இடம் பெற்ற போர் காரணமாக அனைத்து தொழிலாளர்களும் சிறிலங்காப் படைகளின் நெருக்குவாரங்களினால் சொல்லொண்ணாக் கொடுமைகளைச் சந்தித்தனர். அதிலும் மீன் பிடித் தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களுடன் ஒப்பு நோக்கும் போதுஅதிகளவில் பாதிக்கப் பட்டதை எல்லோரும் அறிந்த ஒன்று தான்.

எமது தாயகத்தில் பொருளாதரத்தை ஈட்டித் தரக்கூடிய முக்கிய வளமாகக் கருதக் கூடியது கடல் வள மீன்பிடியாகும். வடக்குக்கிழக்கு மாகாணத்தில் கூடிய பிரதேசங்கள் கடல் வளம் சார்ந்துள்ளமையால் இவ்வாறன ஒரு இடத்தை முக்கியம் வாய்ந்த ஒன்றாக மீன்பிடித்துறை விளங்குகிறது. கடந்த இருதசாப்த யுத்தம் காரணமாக சிறிலங்கா அரசினால் கொண்டுவரப்பட்ட கடல் வலயப் பாதுகாப்புச் சட்டமானது தமிழ் மீனவர்களுக்குக் கையில் விலங்கிட்டு அவர்களின் வாழ்வியல் ,மற்றும் பொருளாதாரத்தைக் கீழ் மட்டத்தில் கொண்டுவருவதற்காகவே அச்சட்டம் நடைமுறையில் இருந்தது.

கடல் வலயப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் மீனவர்களுக்குக் கதவடைப்பு இச் சட்டத்தால் இடம் பெற்றமையினால் எமது மீனவர்கள் முன்னேற முடியாமல் பின்தள்ளப் பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மீனவர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள் இல்லை. மீன் பிடிக்கச் செல்வதற்கு முன் தமது அடையாள அட்டைகளை சிறிலங்காப் படைகளின் முகாமில் அடகு வைத்துவிட்டு அதற்கான ஒரு பதிவேட்டில் கையொப்பம் இட்ட பின்புதான் கடலிலும் சரி,வாவியிலும் சரி அன்றாடம் மீன்பிடிக்க அனுமதிக்கப் பட்டனர்.

கடலில் இரவு முழுவதும் மீன் பிடித்து விட்டு கரையை நோக்கி வரும் போது கரையில். இதற்காகக் காத்து நிற்கும் சிறிலங்காப் படைகளின் வயிற்றை நிரப்புவதற்காகக் கைக்கூலியாக மீன்களைக் கொட்டிக் கொடுத்த பின்புதான் அவர்களின் அடையாள அட்டைகள் படையினரால் திருப்பி ஒப்படைக்கப்படும். இது கடந்த யுத்த காலத்தில் சாதாரணமாக மட்டக்கள்ப்பு மாவட்டத்தில் நடைமுறையில் இருந்த விடயமாகும்.

> மட்டக்களப்பு நாவலடியில் மீனவர்கள் பயிற்சிநிலையம் ஒன்று பல இலட்சம் செலவில் கட்டப்பட்ட போதிலும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எவருக்கும் அங்கு நவீன தொழிநுட்பப் பயிற்சிகள் வழங்கியதாக சரித்திரம் இல்லை.

கஷ்டப்பட்டு கடலிலும், வாவியிலும் அலைந்து அன்றாட வாழ்க்கைக்காக ஒரு மீன்பிடித் தொழிலாளி மீன்களைப் பிடித்து வீட்டிற்கு வந்தாலும் வீட்டிலும் படையினரால் பல சுற்றிவளைப்புக் களிலும் கெடுபிடிகளிலும் முகம் கொடுத்த வரலாறுகளையும் இன்றும் மறப்பதற்கில்லை .

ஆனால் எவ்வளவுதான் மீன்பிடியினால் வருமானத்தை ஈட்டிய போதும் மட்டக்களப்பு மீனவர்களில் பெரும்பாலானவர்கள் பழைய முறைப்படி தான் மீன் பிடிக்கின்றனர்.

பல தொழில் நுட்பங்கள் நவீன வசதிகள் இருந்தும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களுக்கு அவ்வாறான பயிற்சிகள் இது வரைவழங்கப் படவில்லை. மட்டக்களப்பு நாவலடியில் மீனவர் பயிற்சிநிலையம் ஒன்று பல இலட்சம் செலவில் கட்டப்பட்ட போதிலும் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்கள் எவருக்கும் அங்கு நவீன தொழிநுட்பப் பயிற்சிகள் வழங்கியதாகச் சரித்திரம் இல்லை. இக் கல்லூரியில் வெறும் கட்டடம் மட்டுமே உள்ளது போதிய பௌதீக வளங்களோ, ஆளனிகளோ, இல்லை என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். ஏன் இவ்வாறு வழங்கப்படவில்லை என்று கேட்டால் கடந்த யுத்தம் காரணமாக இப்பயிற்சி கல்லூரியில் நவீன கருவிகள் வழங்கப்படவில்லையென பதில் சொல்லித் தப்பிக்கொள்கிறார்கள்.

அப்படியானால் தற்போது போர் ஓய்ந்து கிட்டத்தட்ட இருபது மாதங்களாகின்ற போதும் கூட இன்றும் வசதிகள் இங்கு தரப்படவில்லை.

இது ஒரு புறம் இருக்க மட்டக்களப்பு மாவட்ட மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மக்களிடம் சேமிப்புப் பழக்கம் அறவே இல்லையெனவும், மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர் பார்த்த நோக்கை எட்டவில்லை யெனவும் கிழக்குப் பல்கலைக் கழக பொருளாதாரத்துறை ஆய்வாளர் கே. தம்பையா மட்டக்களப்பில் கடந்த வாரம் இடம் பெற்ற மீனவர்களுக்கான கருத்தரங்கொன்றில் சுட்டிக் காட்டியிருந்தார். அவரின் இந்தக் கருத்துமுற்றிலும் உண்மை. எமது மக்கள் சொந்தக் காலில் சுயமாக நிற்கக் கூடிய மனப்பக்குவம் ஏற்படும் போதுதான். சேமிப்புக் பழக்கமும், சமூகசேவை மனப்பாங்கும் ஏற்படும். பொதுவாக கூட்டுறவுச்சங்கம் அல்லது பொது அமைப்புக்கள் ஆரம்பிக்கப்படும் போது அதன் நோக்கம் நிவாரணத்தையும், ஜீவனோபாயக்கடன் திட்டத்தையும், எதிர் பார்த்து ஆரம்பிக்கப் படுவதை முழுமையாக மாற்றி நாமும் எமது சமூகமும், சூழலும் எவ்வாறு சங்கத்தின் ஊடாக முன்னேற்ற முடியும் என்ற சிந்தனையை அடிப்படையாக வைத்தே இவ்வாறான சங்கங்கள் கட்டி எழுப்பப் பட வேண்டும். அப்போது தான் சேமிப்புப் பழக்கமும், ஏனைய நல்ல நோக்கங்களும் இது தனியாக மீன்பிடிச் சங்கங்களுக்கு மட்டுமின்றி எல்லா அமைப்புக்களுக்கும் பொருந்தும்.

மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை உடனடியாகச் செயல் வடிவம் கொடுக்கும் போது மீன் பிடித் தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.





-பாத்திரன்-

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## ஆனந்த சங்கரிக்கு தலைகுனிய வேண்டாம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கி. துரைராசசிங்கம் அவர்களுக்கு அலைமகன் எழுதும் பகிரங்க மடல்.

இந்த வாரம் இந்த மடல் உங்களுக்கு எழுதுவேன் என்று கனவிலும் நான் நினைத்திருக்க வில்லை. தமிழ் அலையில் உங்களுக்கு ஒரு பகிரங்க மடல் வரையப் பட்டிருக்கும் என நீங்களும் நினைத் திருக்க மாட்டீர்கள்.

என்ன செய்வது தமிழர் விடுதலைக் கூட்டணியின் சகல உறுப்புரிமையையும் தருணம் பார்த்து துறக்க எடுத்திருக்கும் முடிவு என்னை மட்டுமல்ல மட்டக்களப்பு தமிழர்களையும் அதிசயிக்க வைத்து விட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி தமிழினத் துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கோணத்தில் தனது காய் நகர்த்தலை மேற்கொண்டு வருகிறார். அன்நிய நாடுகளின் உளவாளிகள் நயவஞ்சகச் சூழ்ச்சிக்கு இரையாகி ஈழவிடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் ஒரு துரோகத் தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார். இதனைக் காலம் கடந்தாவது புரிந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டக் குழு சங்கரி பதவி விலக வேண்டும் எனும் தீர்மானத்தைக் கொண்டு வந்த மறு கணமே நீங்கள் கட்சியின் உறுப்புரிமையை துறப்பதாக எடுத்தி ருக்கும் முடிவின் மர்மமென்ன.

நீங்கள் ஆனந்த சங்கரியின் ஆதரவா ளனா? அப்படியானால் ஆனந்தசங் கரியின் போக்கு சரியானதா? இவ் வளவு காலமும் உறுப்புரிமை வகுத்த நீங்கள் ஏன் ஆனந்தசங்கரியைப் பதவி விலக்கும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டவுடன் நீங்கள் உறுப்புரிமையில் இருந்து விலக வேண்டும்.

நீங்கள் இதற்கு மாறாக எந்த நியாயத் தையும் ஒரு சட்டத் தரணி என்ற முறையில் வாதிடலாம். ஆனால் அதனை எந்த மட்டக்களப்புத் தமிழனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஆனந்த சங்கரியின் அடிவருடிதான் இந்த துரைராச சிங்கமும் இப்படித்தான் கூற முற்படுவார்கள் மட்டக்களப்பு தமிழினம். துரைராசசிங்கமா முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர். கவிஞர் அண்ணா தாஸன், சட்டத்தரணி, பகுத்தறிவுச் சிந்தனையாளன். இப்படித்தான் மட்டக்களப்பில் தமிழ் மக்கள் உங்களை இது வரையும் உற்று நோக்கினார்கள். தற்போது ஆனந்த சங்கரிக்கு தலை வணங்கும் துரைராசசிங்கமாக தூற்ற முற்படுகிறார்கள்.

தமிழினத்திற்குத் துரோகமிழைக்கும் ஆனந்த சங்கரிக்கு ஒரு ஆதரவாளனாக இருக்காது. தமிழ்த் தேசியத்தின் விடு தலைக்காக தமிழினத்தின் உரிமையை வென்றெடுக்கும் போராட்டத்துக்கு துரைராசசிங்கம் துணை போக வேண்டும் என்பதே எனது அவா.

மாறாக இரட்டை வேடம் பூணும் வேடதாரிகளாகக் காட்டிக் கொள்ள முற்பட்டால் அது தமிழினத்திற்கு நீங்கள் செய்யும் பாரதூரமான செயலாகவே தமிழினம் கருத இடமுண்டு.

எனவே இனிமேலாவது துரை ராசசிங்கம் , ஆனந்த சங்கரியின் அடி வருடியாக ஆதரவாளனாக செயற் படாது பகிரங்கமாக தமிழினத்தின் பால் குரல் கொடுக்கும் ஒரு மனிதனாக முன் வர வேண்டும்.

இங்ஙனம்
அலைமகன்.

## இந்தியாவும் ஈழத்தமிழரும்

# "மகாத்மா காந்தியைவிட திலீபன் மேலானவன்

**துரோகங்களின் அத்தியாயங்கள் - 31**

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசாங்கம் மிக மோசமாக நடந்து கொண்டதற்கும், அதனைத் தொடர்ந்து இந்தியா மூக்குடைபட்டுக் கொண்டதற்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அக்காலத்தில் கடமையாற்றிய ஜே.என் தீக்ஷித் அவர்களே பிரதான காரணம் என்று, பின்நாட்களில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பல அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறை பற்றிய கொள்கை வகுப்பாளராக இருந்த ஒரு முக்கிய இராஜ தந்திரியான ஜே.என் தீக்ஷித் அவர்கள், புலிகள் விடயத்தில் கடைப்பிடித்திருந்த பிழையான அணுகுமுறைகளே, இலங்கையில் இந்தியா மிகப் பெரியதும், அவமானதுமான தோல்வியை அடைந்து திரும்பக் காரணம் என்று பல இந்திய



அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அரசியல் விடயங்களில் போதிய அனுபவமற்ற ஒருவராகவே இருந்தார். வெளிநாடுகள் தொடர்பான விடயங்கள் அனைத்திற்கும் அவர் பெரும்பாலும் இராஜதந்திரிகளையும், ஆலோசகர்களையுமே நம்பியிருந்தார். அந்தவகையில் இலங்கைப் பிரச்சினையில் ஜே.என்.தீக்ஷித் அவர்களைப் பெரிதும் நம்பிச் செயற்பட்ட ராஜீவ் காந்தியை, புலிகள் விடயத்தில் தீக்ஷித் பிழையாக வழிநடத்திவிட்டதாகவே இந்தியப் படைகளின் தளபதிகள் பலர் குற்றம் சுமத்துகின்றார்கள்.

### திலீபனை சந்திக்கத் தயங்கிய தீட்ஷித்:

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில்



நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் மேஜர் ஜெனரல் ஹரிகிரத் சிங் என்ற உயரதிகாரி.

திலீபனின் உண்ணாவிரதத்தை இந்தியா அணுகியது தொடர்பாக இணையத் தளம் ஒன்றிற்கு அவர் வழங்கியிருந்த செவ்வியில், 'ஈழத் தமிழர் பிரச்சினை இத்தனை மோசமாகுவதற்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தீக்ஷித்தே காரணம்' என்று குற்றம் சுமத்தியிருந்தார்.

> "எமது போராளிகளின் தனிப்பட்ட நேர்மை - ஒழுக்கம் - வழிகாட்டும் வகையில் அவர்கள் வாழும் வாழ்க்கை - இவையே மக்கள் எம்மீது மரியாதை வைக்கக் காரணங்கள் ஆகும்."
>
> *- தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்*

### ஹரிகிரத் சிங் தனது செவ்வியில், மேலும் இவ்வாறு தெரிவித்திருந்தார்:

"திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தை சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்கு எங்களாலான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டிருந்தோம். திலீபனைச் சந்திப்பதற்கு நான் விரும்பினேன். அதற்கான முயற்சியையும் எடுத்திருந்தேன். ஆனால் சில புலிப் போராளிகள் என்னிடம், 'ஜெனரல், மக்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள்; இந்த நிலையில் நீங்கள் மக்களின் முன்னால் செல்வது உங்களுக்கு சில அசௌகரியங்களை ஏற்படுத்திவிடும்' என்று கூறி, உண்ணாவிரத மேடைக்குச் செல்ல என்னை அனுமதிக்கவில்லை. நான் திலீபனிடம் சென்று, உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி அவரிடம் கோர இருந்தேன்.

ஆனால் திலீபனால் எப்படி உண்ணாவிரதத்தைக் கைவிட முடியும்? இந்தியப் பிரதமரால் புலிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரையில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட முடியாது என்று திலீபன் ஏற்கனவே உறுதியாகத் தெரிவித்திருந்தார். இந்தியப் பிரதமர் தரப்பில் இருந்து புலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பது எனக்கு நன்றாகவே விளங்கியிருந்தது.

திலீபனை வந்து சந்திக்கும்படி நான் இந்திய தூதுவரை பல தடவைகள் கேட்டிருந்தேன். 'வந்து சந்தியுங்கள்...', 'வந்து சந்தியுங்கள்...', 'வந்து சந்தியுங்கள்...' என்று தொடர்ந்து அவரிடம் கோரியபடியே இருந்தேன். ஆனால், அவர் அங்கு வர மிகுந்த தயக்கம் காண்பித்தார். அங்கு வருவதற்கு அவர் விரும்பவும் இல்லை. கடைசியாக இந்தியத் தூதுவர் அங்கு வந்தபோது, எல்லாமே முடிந்துபோயிருந்தது. அந்த இளைஞன் அநியாயமாக இறந்துவிட்டிருந்தான். இந்தியத் தூதுவர் திலீபனின் உயிரை நிச்சயம் காப்பாற்றி இருக்கவேண்டும். இலங்கையில் பின்நாட்களில் இந்தியாவிற்குப் பல சங்கடங்கள் நிகழ்வதற்கு இந்தச் சம்பவமே முதற் காரணமாக அமைந்திருந்தது."

### தீக்ஷித்தின் ஆணவத்திற்கு வைகோ கொடுத்த அடி:

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஸ்தாபகரான திரு.வை.கோபால்சாமி (வைக்கோ) அவர்கள், தி.மு.கா.வின் ஒரு 'போர் வாளாக' இருந்த காலத்தில், மகாத்மா காந்தியை திலீபனுடன் ஒப்பிட்டு, தெரிவித்திருந்த கருத்தை, இந்த இடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

திலீபன் பற்றி தீக்ஷித் வெளியிட்டிருந்த ஒரு கருத்திற்குப் பதிலாகவே, திரு.வைகோ இதனைத் தெரிவித்திருந்தார். திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, இந்தியத் தூதுவர் தீக்ஷித் இடம் திலிபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், "திலீபன் என்ன மகாத்மாகாந்தியா?" என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

தீட்சித்தின் இந்தக் கூற்றுப் பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த திரு.வை.கோபால்சாமி அவர்கள், "திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன்" என்று அடித்துக் கூறியிருந்தார். திரு வைக்கோ, தனது இந்த வாதத்திற்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான 'சத்தியசோதனை'யில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார்.

மகாத்மா காந்தியின் இளமைப்பருவத்தின்போது அவரது தந்தை காலமாகிவிட்டார். தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமையின் பாலியல் உணர்ச்சிகளைக் காந்தியால் கட்டுப்படுத்தமுடியாமல் மறைவில் சென்று




அதனை தீர்த்துக்கொண்டதாக 'சத்திய சோதனை'யில் காந்தி தெரிவித்திருந்தார். இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவினாலேயே அடக்கமுடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில்கூட மகாத்மாவினால் தனது பாலியல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தமுடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.

ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதிற்கான அனைத்து உணர்ச்சிகளையும் உதறித்தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்ய முன்வந்திருந்தான். அந்த வகையில் "திலீபன் மகாத்மா காந்தியை விடச் சிறந்தவன்" என்று திரு.வை.கோபால்சாமி, தீக்ஷித்தின் கருத்துக்குப் பதில் அளித்திருந்தார்.

### பிரபா-தீட்ஷித் சந்திப்பு:

1987ம் ஆண்டு, செப்டெம்பர் 22ம் திகதி, இந்தியத் தூதுவர் ஜே.என்.தீட்ஷித் பலாலி விமானத் தளத்தை வந்தடைந்தார். தீட்ஷித்தை சந்திப்பதற்காக, புலிகளின் தலைவர் பிரபாரகரன் அவர்களும், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் அவர்களும்



அங்கு சென்றிருந்தார்கள்.

(இந்தியாவில் தங்கியிருந்து அரசியல் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த திரு.அன்டன் பாலசிங்கம் அவர்கள், திலீபனின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து ஈழத்தில் ஏற்பட ஆரம்பித்திருந்த அரசியல் குழப்பங்களின் நிமிர்த்தமே தலைவரால் யாழ்ப்பாணத்திற்கு அவசரஅவசரமாக அழைக்கப்பட்டிருந்தார்.)

புலிகளின் தலைவர்களைச் சந்தித்த தீக்ஷித் பெருஞ் செருக்கோடும், கடும் சினத்தோடும் காணப்பட்டதாக, புலிகளின் அரசியல் ஆலோசகர் பின்னாளில் நினைவு கூர்ந்திருந்தார்.

'திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் இந்திய அரசுக்கு எதிராக தமிழ் மக்களைத் தூண்டிவிடும் செயல்' என்றும், தன்னைப் பொறுத்தவரையில் 'இது ஆத்திரமூட்டும் ஒரு செயல்' என்றும்

**- நிராஜ் டேவிட் -**

தீக்ஷித் கண்டனம் தெரிவித்தார். புலிகளை மிகவும் மோசமாக விமர்சித்த தீக்ஷித், புலிகள் அமைப்புக்கு எதிராகப் பலவித மிரட்டல்களையும் விடுத்தார்.

பிரபாகரன் அவர்கள் அங்கே நிறையப் பொறுமையைக் கடைப்பிடித்திருக்கின்றார். தீக்ஷித்தின் ஆத்திரமூட்டும் வார்த்தைகளைப் பொறுமையாக செவிமடுத்த திரு. பிரபாகரன், தீக்ஷித்திடம் ஒரு வேண்டுகோளை வினயமாக விடுத்தார். தீக்ஷித் நல்லூர் சென்று, மரணப் படுக்கையில் இருக்கும் திலீபனுடன் பேசி, இந்தியா ஏற்கனவே வழங்கியிருந்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்தி, உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு திலீபனிடம் கோரிக்கைவிடவேண்டும்' என்று திரு.பிரபாகரன் தீக்ஷித்திடம் பரிந்து கேட்டுக்கொண்டார்.

ஆனால், தீக்ஷித் தனக்கே உரித்தான செருக்குடனும், மமதையுடனும், புலிகளின் தலைவர் விடுத்த வேண்டுகோளை நிராகரித்தார்.

தனது பயணத்திட்டத்தில் திலீபனைச் சந்திக்கும் விடயம் உள்ளடக்கப்படவில்லை என்று கூறி, தலைவரின் வேண்டுகோளை உதறித்தள்ளினார். அன்றைய தினம், தீக்ஷித் மட்டும் சிறிது கருணை காண்பித்திருந்தால், தமிழ் மக்கள் மிகவும் நேசித்த ஒரு இளைஞனின் உயிரைக் காப்பாற்றி இருக்கமுடியும்.

தமிழை நேசித்த பல உயிர்களைக் காப்பாற்றி இருக்க முடியும். தமிழர் தாயகத்திற்கு அழையா விருந்தாளிகளாக வந்திருந்த பல இந்தியப் படை வீரர்களின் உயிர்களையும் காப்பாற்றி இருக்க முடியும். ஆனால் தீக்ஷித்தின் ஆணவம், ஈழ மண்ணில் ஒரு மிகப் பெரிய அவலத்தை நிகழ்த்தும் ஒரு முடிவை நோக்கி அனைத்தையும் இட்டுச் சென்றது.

**ஈழ தேசம் முழுவதும் பரவ ஆரம்பித்த**

### உண்ணா விரதங்கள்:

இதற்கிடையில், திலீபனுக்கு ஆதரவாகவும், அவர் முன்வைத்த கோரிக்கைகளை முன்வைத்தும், ஈழ தேசம் முழுவதும் பல இளைஞர்கள் உண்ணாவிரதத்தில் குதித்திருந்தார்கள். மட்டக்களப்பில் மதன் என்ற போராளி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

அதேபோன்று முல்லைத்தீவில் திருச்செல்வம் என்ற போராளி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித் திருந்தார். திருகோணமலையிலும் கிருபா என்ற விடுதலைப் புலி உறுப்பினர் சாகும்வரையிலான உண்ணாநோன்பை ஆரம்பித்திருந்தார். தமிழ்த் தேசம் முழுவதுமே உணர்ச்சியின் உச்சத்திற்குச் சென்றிருந்தது. மறுநாள், அதாவது 26ம் திகதி முதல் யாழ்குடா முழுவதிலுமுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவைகளும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணாவிரதமும், மறியலும் செய்து வேலைப் பகிஷ்கரிப்பை மேற்கொள்ளப்போவதாக அறிவித்திருந்தார்கள்.

### திலீபன் மரணம்:

26.09.1987 காலை 10.48 மணிக்கு, திலீபன் என்ற மாவீரன் தனது உயிரை தமிழுக்காக, தான் நேசித்த தமிழ் மக்களுக்காக தியாகம் செய்திருந்தான். இந்தியாவின் வரலாற்றில் இரத்தத்தால் பொறிக்கப்பட்ட ஒரு 'ஆச்சரியக் குறி'யாக - திலீபனின் உண்ணாவிரதப் போராட்டமும், அவனது மரணமும் அமைந்திருந்தது.

(துரோகம் தொடரும்.....)

# முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் சாத்தியமா?

**'முஸ்லிம் இளைஞர்கள் மட்டும் ஆயுதப் போராட்டத்தில் குதித்துவிட்டால் அரபு நாடுகள் அனைத்தும் போட்டிபோட்டுக்கொண்டு ஆயுதங்களையும், இன்னோரன்ன உதவிகளையும் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றன'**

"வடக்குக் கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்பட்டால் முஸ்லிம்களும் தமது உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் நிலை ஏற்படும்" என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், அண்மையில் இலங்கை வந்திருந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹமிடம் தெரிவித்திருந்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான காலம் முதல், ரவூப் ஹக்கிம் முதற்கொண்டு பல முஸ்லிம் தலைவர்களும், முஸ்லிம் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பாகக் கருத்துக்களை அடிக்கடி



வெளியிட்டு வருகின்றார்கள்.

அண்மையில் என்னைச் சந்தித்த ஒரு முஸ்லிம் ஊடகவியலாளரும், அதற்கான சாத்தியத்தைத் தெரிவித்திருந்தார். 'முஸ்லிம் இளைஞர்கள் மட்டும் ஆயுதப் போராட்டத்தில் குதித்துவிட்டால் அரபு நாடுகள் அனைத்தும் போட்டி போட்டுக்கொண்டு ஆயுதங்களையும், இன்னோரன்ன உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன' என்று அந்த அன்பர் குறிப்பிட்டார். 'முஸ்லிம்களுக்கு இயல்பாகவே அவர்களின் மார்க்கத்தில் உள்ள போர் அங்கீகாரமும், ஜிகாத்தை கொண்டு நடத்துவதற்காக அவர்களது மார்க்க நூல்களிலேயே வழங்கப்பட்டிருக்கின்ற அறிவுரைகளும், முஸ்லிம்களுக்கு பாரிய வெற்றியை நிச்சயம் பெற்றுத்தந்து விடும் என்பதில் சந்தேகமில்லை' என்றும் அந்த அன்பர் மேலும் தெரிவித்தார். இலங்கையைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் என்பது அந்த முஸ்லிம் அன்பர் கூறியது போன்று அவ்வளவு இலகுவான ஒரு விடயமல்ல.

நிறைய விடயங்களைக் கருத்தில் எடுத்துத்தான் எந்த ஒரு தரப்பும் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கவேண்டும். இன்றைய கள நிலவரத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் ஒன்றிற்கான சாத்தியம் என்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. உணர்ச்சிவசப்பட்ட சில முஸ்லிம் இளைஞர்கள் வேண்டுமானால் ஒரு சில ஆயுதங்களை வைத்துக் கொண்டு வன்முறை நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபடமுடியும். ஒரு சில தாக்குதல்களை மேற்கொள்ள முடியும். ஆனால் தமிழ் சமூகம் போன்று பாரிய ஆயுதப் புரட்சி ஒன்றை நீண்ட காலத்திற்கு முன்னெடுக்கக்கூடிய களச் சாதகம் தற்பொழுது முஸ்லிம்களுக்கு நிச்சயம் கிடையாது என்றே கூறவேண்டும்.

01. முதலாவதாக முஸ்லிம்கள் ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு அடிப்படையான தேவைகள் எதுவும் இலங்கையில் கிடையாது. ஆயுதப் போராட்டத்தை எதற்காக மேற்கொள்ளவேண்டும் என்ற குறிக்கோளும் போதுமான அளவிற்கு அவர்களுக்குக் கிடையாது. ஆயுதப் போராட்டம் ஒன்றைத் தொடருவதை அவர்கள் சமூகத்தின் முன்நிலையில் அவர்களால் சரியான முறையில் நியாயப்படுத்தவும் முடியாது. முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாக அவர்கள் அரசியல் பேச முடியும். ஆனால் முஸ்லிம் என்ற காரணத்தினால் மட்டுமே உரிமை எதுவும் மறுக்கப்பட்ட எவரும் இங்கு இல்லை என்றுதான் கூறவேண்டும். கடந்த காலத்தில்



ஏற்பட்ட சில கசப்பான நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் தலைமையினால் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டுள்ள நிலையில், 'தனி முஸ்லிம் அலகு' 'பேச்சுவார்த்தையில் சமபங்கு' என்ற கோரிக்கைகளை மட்டுமே முன்வைத்து ஒரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதை எவருமே ஏற்க மாட்டார்கள். அது நீண்ட கால நோக்கில் நடைமுறைச் சாத்தியமும் அற்றது. (தமிழ் மக்களின் போராட்டம் அவ்வாறு அல்ல. அவர்கள் தமிழ் மக்கள் என்ற ஒரே காரணத்திற்காகப் பலவற்றை இழந்திருந்தார்கள். தமிழ் மொழியை அழித்துவிடும் நடவடிக்கையில் சிங்களப் பேரினவாதிகள் சட்டரீதியாகவே பல காரியங்களைச் செய்தார்கள். தமிழ் மக்களை இல்லாதொழிக்கும் பல நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமையில்லை என்று கூறப்பட்டது. ஆனால் முஸ்லிம்களுக்கு அவ்வாறானதொரு நிலை தமிழர் தரப்பால் ஏற்படவில்லை. யாழ்ப்பாணத்தில் 1990 இல் ஏற்பட்ட நிலை தற்பொழுது முற்றாகவே மாறிவிட்டது. 90 இல் இடம்பெற்ற பள்ளிவாசல் சம்பவம் போன்றதொரு சம்பவம் அதன் பின்னர் நடைபெறவேயில்லை. இன்று ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தமிழ் பகுதிகளில், குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விவசாயம் மற்றும் வியாபாரம் செய்து வரும் நிலையில், முஸ்லிம்கள் - மதத்தின் அடிப்படையில் எந்தவித ஒடுக்குமுறைக்கும் உள்ளாகாத நிலையில், முஸ்லிம் தரப்பினால் தொடரப்பட இ[illegible]க் கூறப்படும் ஆயுதப் போராட்டம் என்பது எந்தவித அடிப்படை நோக்கத்தையும் கொண்டதாக இருக்கமாட்டாது. அதனால் அது நின்று நிலைக்கவும் சந்தர்ப்பம் இல்லை.)

02. எந்த ஒரு ஆயுதப் போராட்டத்திற்கும் இரகசியமானதும், பாதுகாப்பானதுமான ஒரு தளம் இருப்பது அவசியம். ஆயுதப் பயிற்சி பெறுவதற்கும், அந்த ஆயுதப் போராட்டத்தின் தலைமை பாதுகாப்பாகத் தங்கியிருந்து போராட்டத்தை நெறிப்படுத்துவதற்கும், ஆயுதப் போராட்டத்திற்கான வளங்கல்களைத் தடையில்லாமல் வழங்கிக்கொண்டே இருப்பதற்கும் பாதுகாப்பானதும், இரகசியமானதுமான ஒரு நிரந்தரத் தளம் நிச்சயம் அவசியம். விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் இந்தியாவைத் தமது தளமாகப் பயன்படுத்தினார்கள். பின்னர் ஓரளவு வளர்ச்சி அடைந்ததும், யாழ்ப்பாணத்தைத் தமது தளமாகப் பயன்படுத்தி வந்தார்கள். அதன் பின்னர் முல்லைக் காடுகளையும், வன்னிப் பெருநிலப்பரப்பையும் தமது தளங்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

முஸ்லிம்கள் தமது ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு ஒரு பாதுகாப்பான தளத்தைத் தக்கவைத்திருப்பது இலங்கையைப் பொறுத்தவரையில் சாத்தியம் இல்லை. வடக்கு கிழக்கில் காடுகள் அனைத்துமே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஊருக்குள், மக்கள் மத்தியில் தளம் அமைத்துப் போராடும் வசதி நீண்ட கால நோக்கில் நிச்சயம் முஸ்லிம் இளைஞர்களுக்குக் கிடைக்கச் சாத்தியமில்லை.

**- சாத்வீகன் -**

03. முக்கியமாக முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் என்பது சர்வதேச சமுகத்தை எதிர்கொள்வது என்ற விடயத்தில் பாரிய பின்னடைவைச் சந்தித்துவிடும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் அமெரிக்கா தலைமையில் கோதாவில் குதித்துள்ள சர்வதேச சமூகம், உண்மையிலேயே முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு போரைத்தான் நடாத்திக்கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சி 19ம் பக்கம்

# மொழியுரிமைப் போராட்டங்கள் மூலம் தமிழ் மொழி பெற்ற சட்ட அந்தஸ்த்து என்ன?

**மொ**ழி என்பது மொழியப்படுவதால் மொழியெனப்பட்டது. மொழி வெறுமனவே கருத்துக்களைப் பரிமாறும்.கருவிமட்டுமல்ல, இனத்தின் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரிக விழுமியங்கள், கருத்துக் குவியல்கள் கற்பனை வளங்களின் செறிவு மிக்க இனத்துவத்தின் அடையாளமாகும். இதனால் மொழி இனத்தின் விழி என்பார்கள். மனித வாழ்வுக்கு விழி எவ்வளவு அவசியமோ அது போல் இனத்துக்கு மொழி அவசியமாகும். இதனால்தான் இனத்தை அழிக்க முயன்ற சர்வாதிகாரிகள் எல்லாம் அந்த இனத்தின் மொழியை அழிக்க முற்பட்டார்கள் - முற்படுகின்றார்கள்.

பண்டைய நாட்களில் உயர்ந்த சிறந்த நாகரீகச் சிறப்போடு பேரு- மெக்சிக்கோவில் வாழ்ந்த நாகரிக் மயோரிஸ் மக்களை அழிக்க முயன்ற ஸ்பானிய பாதிரிமார்கள் முதலில் அம்மக்களின் மொழியையே அழிக்க முற்பட்டார்கள். அவர்களின் விலை மதிப்பு மிக்க கலைச் செல்வங்களையும் கட்டிடக் கலையும் அவர்கள் கட்டிக்காத்து வந்த வான சாத்திரம், வைத்தியம், கலைகலாசாரப் பொக்கிசங்களையும் தேடிச்சூறையாடி தீயிட்டு எரித்தார்கள் என்பதை மொடேன் என் சைகிலோ பிடியா ஓப் பிரிட்டானிக்கா என்ற கலைக்களஞ்சியம் கூறுகிறது. மொழியை மட்டுமல்ல உலகிலே மிகச்சிறந்த நாகரீகத்தையே நாசமாக்கினார்கள். மொழி அழிவதென்றால் அது கட்டிக்காத்த கலாசாரம் அழிக்கப்படுகிறது - ஒழிக்கப்படுகிறது. அதுபோல் சிந்து வெளி எழுத்துக்களையும் நூல்களையும் ஆரியர்கள் தீயிட்டு அழித்ததால் - இன்று சிந்து வெளி எழுத்துக்களை உலக மேதைகளால் கூட வாசிக்க முடியவில்லை. அந்த மொழியோடு அந்த மொழி வளர்த்தெடுத்த நாகரிக விழுமியங்களைக் கூட நாம் காண முடியாது கஸ்ரப்படுகின்றோம். இவற்றையெல்லாம் கண்டு கேட்டு கற்றுணர்ந்த பேரின வாதிகள் - இலங்கை சுதந்திரம் அடைந்த பின் மொழியை அரசியல் ஆயுதமாக்க முயன்றார்கள். மொழியை அரசியலாகவும், பாராளுமன்ற அதிகாரத்தைப் பிடிக்க ஆயுதமாக்கவும் முதலில் முயன்றவர் அமரர் ஜே.ஆர் ஜெயவர்த்தன வாகும்.

ஆனால் அவரைக் முந்திக்கொண்டு ஆயுதமாக்கி ஆட்சியைப் பிடித்தவர் அமரர் பண்டார நாயக்கவாகும். மொழியின் அழிவு இனத்தின் தொழில் வாய்ப்பை இழக்கச் செய்கிறது. இலங்கையின் மொழிப்போராட்டத்தை ஆராயும் போது அது தமிழரசுக் கட்சியின் போராட்டமாகவே அமையும் - அதைத்தவிர்த்து மொழிப்போராட்ட வரலாறு வரலாறாக அமையாது. தமிழ் காங்கிரஸ் செய்த இமாலயத்தவறால் அதாவது- இந்திய - பாகிஸ்தானிய பிரசாரவுரிமைச் சட்டத்தை ஆதரித்து - மலைநாட்டுத் தமிழர்களில் வாக்குரிமையையும் அதன் மூலம் அவர்களின் பாராளுமன்ற பிரதி நிதித்துவத்தை இழக்க உதவியதால் சீற்றம் கொண்ட தந்தை செல்வா - கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம் - மூதவை உறுப்பினரும் இரும்பு மனிதனான நாகநாதன் ஆகியோர் இந்திய - பாகிஸ்தானிய சட்டத்தை எதிர்த்து வாக்களித்து விட்டு - தழிழ்க் காங்கிரஷை விட்டு வெ்ளியேறி 1949ம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி மருதானை அரசாங்க லிகிதர் சேவை மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்கள். இதுவரை வட மாகாணத்தை மட்டுமே மையமாகக் கொண்டிருந்த தமிழர்களின் அரசியல் எல்லை மாகாண மட்டத்தைக் கடந்து - பிரதேச நிலையை மாற்றி வன்னி மலை நாடு - மட்டக்களப்பு என்ற பேதங்களை மறந்து - மறைத்து - இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்களே எனக்கொண்டு - தமிழரசுக் கொடியின் கீழ் ஒன்றிணைந்த கட்சி தமிழரசுக் கட்சியாகும். தமிழர்களிடையே இந்து - கிறிஸ்து - இஸ்லாம் என்ற மத பேதங்களைக் கடந்து தமிழ் பேசுமினம் என்ற மகிடத்திற்குள் வாங்கிய கட்சி. தந்தை செல்வாவும் தமிழரசுக் கட்சியும் மட்டுமே இலங்கைத் தமிழர்களை ஒன்று படுத்தி தலைமை தாங்கிய பெருமைக் குரியவர்கள். அதன் பின் தமிழீழ விடுதலைப் புலிகளே ஈழத்தமிழர்களின் தனித்துவமான தலமையைப் பாதுகாத்து - வருகிறார்கள். அவர்கள் ஈழத்தைக்கடந்து - உலகலாவிய தமிழர்களின் தலைமையையும் பாதுகாக்கிறார்கள் என்றால் உண்மை அது மிகையல்ல. இலங்கையின் ஒற்றையாட்சித் திட்டத்தை முழுமையாக எதிர்த்ததோடு இலங்கை ஒரு இனம் வாழும் நாடல்ல - பல்லினம் வாழும் ஒரு நாடு அதற்கு ஒற்றையாட்சித்திட்டம் சரிவராது- இணைப்பாட்சியே சிறந்த வழி உகந்த பாதை என திட்ட வட்டமாகக் கூறி - அதற்காக வாதாடிப் போராடிய கட்சி தமிழரசுக் கட்சி.

**பூ. மா. செல்லத்துரை**

தொடரும்........

# கந்தப்பேரடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர் :- என்ன மச்சான் ஜனாதிபதிக்கு இருந்தாப்ப உசார் கிழம்பி இருக்கு............

கலந்தர் :- ஒரு உசாரும் இல்ல சமாதானத்த எப்படி குழப்பலாம் எண்டு ஓத்திக பாக்கிறாவு.........

கந்தர் :- அதுதான் மச்சான் கண்காணிப்பு குழுவில சீறிப்பாயிறாவு.........

கலந்தர் :- வெண்ண திரண்டு வரக்குள்ள தாழிய உடச்ச மாதிரி எலுவா இவட கூத்து.......

கந்தர் :- நாலாம் கட்ட ஈழப் போருக்கு அம்மாக்கு ஆசை போல.........

கலந்தர் :- அம்மா... சும்மா கிடந்த சங்க ஊதிக் கெடுக்கப்பாக்கிறாவு அல்லாவுக்குத்தான் வெளிச்சம்......

கந்தர் :- கொஞ்சம் பொறன் வெளிச்சமா? இருட்டா எண்டு பாப்பம்.

# விதவைகளிடமும் அனாதைகளிடமும் அன்பு செலுத்துவோம்.



விதவைகள் அனாதைகள் இவ்விரு தரப்பினரும் சமூகத்தின்ரால் ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்கள். சமூகத்திலே வாழும் ஒவ்வொருவரும் மனிதர்களே. மனிதனாகப் பிறந்த நமக்கு அன்பு ,பாசம், இரக்கம் என்பன இருக்க வேண்டும். இந்த அன்பு ,பாசம், இரக்கத்தினை இப்போது பணத்தின் மேல் தான் காட்டுகிறார்கள். குறிப்பாகப் பணக்காரர்கள் என்றால் அவர்களுக்காக யாரும் எதுவும் செய்யத் துணிவார்கள். அதே வேளை ஒரு விதவையாக இருக்கட்டும் கணவனை இழந்து தனிமரமாக வேதனையுடன் வாழும் பெண்களைக் கண்டாலே ஏய் அந்தச் சனியன் முன்னால வருது. இன்றைய காரியம் எல்லாம் நல்லா நடந்த மாதிரித் தான் என்பார்கள். அதே போல் ஒர் அநாதையாக இருக்கட்டும். அவன் என்ன சாதிசனமே இல்லாத ஒண்டிக் கட்டை அவனிடம் எதையும் எதிர் பார்க்க முடியாது. என்று ஒதுக்கி விடுகிறார்கள். ஆக மொத்தம் இவ் விருவருக்குமே சமூகத்தில் எந்த மதிப்பும் இல்லை. ஒரு பெண் என்பவள் வாழ்வில் எந்தச் சொந்தங்களை இழந்தாலும் கணவனை மாத்திரம் இழந்துவிடக் கூடாது. காரணம் அவளுக்கு அவளது வாழ்வின் அத்திவாரமே அவளது கணவன் தான். அந்த உறவை இழந்து விதவை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டால் அவளது வாழ்விலே அது ஈடு செய்யமுடியாத ஒரு பெரிய இழப்பு. அதனால் அவளுக்கு ஆறுதல் கூற அன்பு காட்ட அரவணைப்பு இல்லாமல் மனதால் மிகவும் பாதிக்கப்பட்டு துன்பங்களுக்குள்ளே தள்ளப்பட்டு சோகமான ஒரு நிலைக்கு ஆளாகிறாள். இந் நிலையிலே உற்றார் உறவினரும் கூடவே சமூகம் நல்ல காரியங்கள் கெட்டகாரியங்களுக்கு அவளை ஒரு பொருட்டாக நினையாமல் அவளைத் தள்ளி வைக்கின்றனர். இதனால் அவளது மனம் பாதிக்கப்பட்டு இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இதனால் மனநோயாளியாகக் கூட ஆக முடியும். விதவை ஆனாலும் அவளும் ஒரு பெண்தானே. சமூகமே இவளை விதவை என்று ஒதுக்கித் தள்ளும் போது அவளது மனம் எவ்வளவு துன்பத்தினை அனுபவிக்க நேரிடுகிறது. என்பதனை யாருமே சிறிதளவு கூட எண்ணிப் பார்ப்பதில்லை.

விதவைகளைத் துன்புறுத்தினால் அது நாம் செய்யும் மகா பாவமாகும். எனவே கூடிய அளவு விதவைகளின் மனம் நோகாமல் அவர்களையும் ஒரு உயிரும் உணர்ச்சியும் உள்ள பெண்ணாக மதித்து அன்பு காட்டுவோம்.

அநாதைகள் காலத்தின் கொடுமையான யுத்தம் என்ற அரக்கனால் உறவுகளையும் ,உற்றார்களையும் இழந்து அநாதைகளாக்கப்பட்டவர்கள். இவர்கள் மீது அன்பும் பாசமும் காட்டினால் உலகிலே இவர்களும் நீண்ட காலம் வாழ்வார்கள். இல்லையேல், சமூகமே இவர்களை ஒதுக்கும் போது மனம் பேதலிக்கப்பட்டு சமூகத் துரோகிகளாகவும் ,நாட்டிலே உலாவும் தீயசக்திகளாகவும் மாற வாய்ப்பு நிறையவே இருக்கிறது. ஆங்காங்கே தற்கொலைகளும் கூடவே நிகழ்கிறது. இவர்கள் மீது சமூகம் சிறிதளவேனும் அக்கறையும் அன்பும் காட்டும் போது நாமும் வாழ வேண்டும் என்ற ஆசை பிறந்து விடும். ஒரு அநாதையை சமூகம் நல்ல முறையில் நடத்தினால் அந்த அநாதையால் சமூகம் சில நல்லவைகளைப் பெறும் வாய்ப்புண்டு. அதே வேளை தீங்கிழைக்கும் போது அச் சமூகத்திற்கு அவளால் தீமையே விளையும். ''ஒரு குழந்தை நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்பது போல ஒரு அநாதை ''நல்லவனாவதும் தீயவனாவதும் அந்தச் சமூகம் அவனை அணுகும் முறையினிலே'' என்பது நன்றாகப் பொருந்தி விடும். எனவே நாம் வாழும் சமூகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் விதவைகளையும், அநாதைகளையும் நம் நடைமுறைகளாலும் சொல்லாலும் துன்புறுத்தாமல் அவர்கள் மீதும் கருணை காட்டுவோம். இறைவன் நம் மீது கருணை காட்டுவார்.

*திருமதி சங்கர், ஸ்ரீதேவி*
*வேலூர்- கல்லடி*

## அரிவையர்அலை



## வீணாசை வேண்டாம்

**பெண்ணே என் பொன் மணியே**
**மண்ணில் நாம் வாழும் முறையினை**
**கண்ணே நான் கூறுகிறேன்**
**கருத்துடன் கேட்பாயா?**

**நாகரிகம் என்னும் நரகத்தில் விழுந்து**
**நங்கையர் நாம் நசிபடாமல்**
**பண்புள்ள மங்கையாக**
**பாரில் நாம் நடை பயில்வோம்!**

**சினிமாவின் மோகத்தால் வாழ்வை**
**சீரழிக்க நினைக்க வேண்டாம்**
**செந்தமிழ் பெண்ணாக**
**சீரும் சிறப்பாய் நீ வாழு**

**பண் பாட்டை மதிக்கின்ற பத்தினிப்**
**பெண் நீ யென்று**
**பாரெல்லாம் உன் புகழ்**
**பறை சாற்ற வைப்பாயே.**

**வெளி நாட்டு மோகத்தால்**
**வேண்டாத பெஷனெல்லாம்**
**அடிபெண்ணே உனக் கெதற்கு - வீண்**
**ஆசையற்று வாழப் பார்.**

*திருமதி நிர்மலா யுவராஜ்*
*கொத்தியாபுலை.*

## மருத்துவக் குறிப்புக்கள்



***. இளமையோடு இருக்க..**

நீங்கள் எப்பொழுதும் இளமையோடு இருக்க விற்றமின் ''சி''சத்து அதிகம்- உணவோடு சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தச் சத்து நெல்லிக்காயிலும் ,எலுமிச்சை, தோடம்பழம், தக்காளிப்பழம் ஆகியவைகளில் அதிகளவு உள்ளது. இவைகளை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளுதல் நல்லது.

***. கர்ப்பச் சிதைவை நிறுத்தல்**

இக்காலப் பெண்களுக்கு கர்ப்பச் சிதைவு ஏற்படுவது பெரும் பிரச்சினையாகி விட்டது. இப்படி கர்ப்பச் சிதைவுக்கு அடிக்கடி ஆளாகுபவர்கள் அசோக மரப்பட்டை, மாதுளம் பழத்தோல், மாதுள வேர்ப்பட்டை சம அளவெடுத்து உலர்த்தி தூள் செய்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை ஒரு சிட்டிகை அளவு சாப்பிட்டு வெந்நீர் குடித்து வரவும். இரண்டரை வாரங்களுக்குச் சாப்பிட்டு வந்தால் போதும் கர்ப்பச் சிதைவு ஏற்படாது.

## கனவுகளே கனவுகளே நிஜம் தானா?

**தியாகம்:-** நீங்கள் எதையும் தியாகம் செய்வதாகக் கனவு கண்டால் மிக விரைவில் ஒரு கொண்டாட்டத்தில் ஈடுபடுவீர்கள்.

**துக்கம்:-** மனவேதனை தரக்கூடிய கனவாயின் உங்கள் கவலைகள் வெகு விரைவில் தீரும்.

**உப்பு:-** உப்பைக் கனவில் கண்டால் தற்காலப் பிரச்சினைகள் உடனடியாகத்தீரும்.

**மணல்:-** இது எச்சரிக்கையைக் குறிக்கும் எவ்விதமான மணலாக இருந்தாலும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எச்சமயத்திலும் பிறரால் தீங்கு வரலாம்.


**வால்:-** வீட்டு மிருகங்களின் வாலைக் கனவில் கண்டால் குடும்ப வாழ்க்கை சிறப்பாகும். காட்டு மிருகங்களின் வாலானால் கஸ்ரத்திலிருந்து மீள்வீர்கள். மீனின் வாலானால் தொழில் முன்னேற்றம் உண்டாகும்.

**பல்:-** சூத்தைப் பல்லைக் கனவில் கண்டால் ஆபத்தான சூழலில் எதிர் பாராத உதவி கிடைக்கும். உடைந்த பல்லாக இருந்தால் நெருங்கிய உதவிக்கும் துன்பங்களும் நோயும் உண்டாகும். பல் வலியானால் குடும்பப் பிரச்சினையால் மன அழுத்தம் உண்டாகும். பல் அடைப்பதாக இருந்தால் நற் செய்திகள் கிடைக்கும். பல் பிடுங்குவதாக இருந்தால் நோய் மரணம் ஆபத்து. அழகான வெள்ளைப் பற்கள் சந்தோசத்தையும் பணவருவாயையும் கொடுக்கும். நீளமான பற்கள் சட்டவாதங்களில் வெற்றி அளிக்கும். பல் துலக்குவதைக் கனவில் கண்டால் தடைகளும் துன்பங்களும் அகலும்.

**அவலட்சணம்:-** நீங்கள் அவலட்சணமான மனிதனையோ அல்லது நீங்கள் அவலட்சமாக கனவில் காணப்பட்டால் துக்கமும் கவலையும் உண்டாகும்.

**குடை:-** குடையைக் கனவில் கண்டால் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும்.

## கோழி சூப்



*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| குஞ்சுக் கோழி | - 1 |
| வெங்காயம் | - 1/4kg |
| உள்ளி | - 5பல் |
| மிளகு | -1 மேசைக்கரண்டி |
| மல்லி | -1 மேசைக் கரண்டி |
| வெந்தயம் | -1 மேசைக்கரண்டி |
| நற்சீரகம் | -1 மேசைக் கரண்டி |
| கறுவா | -3அங்குலத் துண்டு |
| மஞ்சள் | -1 துண்டு |
| கராம்பு | -10 |
| தேசிப் பழம் | -2 |
| உப்பு | -அளவிற்கு |
| தண்ணீர் | -12 டம்ளர் |

**செய்முறை**

மிளகு,மல்லி,வெந்தயம், கராம்பு,நற்சீரகம்,கறுவா,மஞ்சள் என்பவற்றை ஓரளவாக வறுத்து உரலில் இட்டு நன்றாக இடித்து எடுத்து பொட்டலமாக கட்டி வைத்துக் கொள்க. (மெல்லியதுணியில் தளர்வாகக் கட்டப்பட வேண்டும்.) உள்ளியைத் சுத்தமாக்கி அளவான துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்க. கோழியின் எலும்போடு உள்ள தசைப் பகுதியை இயலுமான அளவு வெட்டி நீக்கிவிட்டு எலும்பை சிறு சிறு துண்டுகளாக நொருக்கிக் கொள்க. பின்பு பானையில் 12டம்ளர் தண்ணீரை விட்டு கொதிக்கவிட்டு கொதித்த பின்பு வெட்டிய வெங்காயம்,உள்ளி ,நொருக்கிய எலும்பு என்பவற்றைப் போட்டு அவிய விடவும். இவை அரைப் பதமாக அவிந்த பின்பு கட்டி வைத்துள்ள பொட்டலத்தை அளவிற்கு உப்பு என்பவற்றை இட்டு இறக்கிப் பரிமாறலாம்.

## சருமம் காக்கும் காய் கறிகள்



பழங்களைப் போன்றே நாம் அன்றாடம் பயன் படுத்தம் காய் கறிகளையும் கூட நாம் சருமத்திற்குப் பயன் படுத்தலாம்.

*. வெள்ளரிக்காய் சாற்றை முகத்தில் தடவி வர கருமை நிறம் மாறும். சருமத்தை குளிரவைக்கும். வெயிலில் அலைவதால் குறைந்து போன நிறம் பழைய நிலையை அடையும். இதை வட்டமான வில்லைகளாய் அரிந்து கண்களைச் சுற்றியும் கண்களின் மீது வைக்க சோர்ந்த கண்கள் புத்துணர்ச்சி பெறும். இந்த வெள்ளரிக் காய் எல்லாச் சருமத்திற்கும் ஏற்றது.

*. கரட் உலர் சருமத்திற்கு உகந்தது. இதைப் பச்சையாக அரைத்து முகத்தில் பூசிவர உலர் தன்மை நீங்கும்.

*. உருளைக் கிழங்கை நன்கு கழுவி தோல் சீவாது பச்சையாக அரைத்து சாறு எடுத்து முகத்தில் தடவி வர முகம் மேம்படுவதோடு கண்ணின் கீழ் உள்ள கரு வளையம் நீங்கும்.

*. வல்லாரையை அரைத்து முகத்தில் பூசி வர பருக்கள் மட்டுமல்ல பருக்களினால் உண்டான தழும்புகள் மற்றும் அம்மைத் தழும்புகள் மறையும்.

*. வெள்ளைப் பூசனி உலர்ந்த சருமத்திற்குப் போதுமான நீர்ச் சத்து தரக்கூடியது. இதனை அரைத்துப் பூசி வரப் பயன் தரும்

*. கசகசாவை பால் விட்டு அரைத்து முகத்தில் பூசினால் சுருங்கல்களை நீக்கி இளமை காக்கும். வயது வந்தவர்களும் இதைச் செய்யலாம்.

*க.வதனி, மட்டக்களப்பு*

## வீட்டுக் குறிப்புக்கள்

1). பல் துலக்கும் முன் டூத் பிரஷ்ஷில் பேஸ்ட்டை வைத்து அதன் மேலே சிறிது பொடி உப்பைத் தூவி பல்துலக்க ,பற்கள் வெண்மையாக பளிச்சிடும்.

2). நெயில் பாலீஷ் போடுவதற்கு முன் ,கை கால்களை இளஞ்சூட்டு நீரில் கழுவித் துடைத்து பிறகு பாலீஷ் போட்டால் நகம் மின்னும்.

3). முந்திரிப்பருப்பு வைக்கும் டப்பாவில் சிறிது பச்சைக் கற்பூரத்தைப் போட்டு வைத்தால் எறும்பு வராது..


4). வாயில் நீர் ஊறி ஜீரணக் குறைவாகவும்.,குமுட்டல் வருவது போலவும் இருந்தால் ஒரு கரண்டி சீரகத்தை வாயில் போட்டு நன்கு மென்று பின் ஒரு டம்ளர் சூடான நீரைக் குடித்தால் உடனே ஏப்பம் வந்து நல்ல நிவாரணம் கிடைக்கும்.

5). அவரைக்காய் வைக்கும் கவரில் 2 பச்சை மிளகாயையும் சேர்த்து வைத்தால் எறும்பு வராமல் இருக்கும்.

## திரை பிம்பங்கள்

# ரசிகர்களுக்கு கையசைத்தார் தனுஷ்

# வந்தது ஆபத்து!



துள்ளுவதோ இளமை, காதல் கொண்டேன் தற்போது வெற்றிகரமாக ஓடிக்கொணடிருக்கும் திருடா திருடி ஆகிய படங்களின் கதாநாயகனாக நடித்திருப்பவர் நடிகர் தனுஷ் திருடா திருடி படத்தில் தனுஷ் மின்னல் வேகத்தில் ஆடிப்பாடி நடித்த மன்மதராசா பாடல் பட்டிதொட்டி எங்கும் பிரபலம் ஆனது. இவர் கடந்த மாதம் மலேசியாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு நடந்த புதுக்கோட்டையிலிருந்து சரவணன் என்ற படத்தின் படப்பிடிப்பில் 40 நாட்கள் கலந்துகொண்டு நடித்தார்.

நேற்று முன்தினம் அவர் சென்னை திரும்பினார். இதையறிந்த ரசிகர்கள் விமான நிலையத்தில் அவரை வரவேற்கத் திரண்டனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் தனுஷால் அங்கிருந்து வெளியில் வர முடியவில்லை. உடனடியாக பொலீசாரும், பாதுகாவல் அதிகாரிகளும் தனுஷை சுற்றி வளையம் அமைத்து அவரைக் காரில் ஏற்றி அனுப்பினார்கள். ரசிகர்களை தனுஷ் அலுவலகத்தில் சந்திப்பதாகக் கூறி விட்டு சென்றார்.

**ரத்தம் பீறிட்டது**

இதையடுத்து ரசிகர்கள் தி.நகர் தெருவில் உள்ள அலுவலகத்துக்கு வந்தனர். அலுவலகத்தில் இடம் போதாததால் எதிரில் உள்ள மைதானத்தில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்த கலரி மீது தனுஷ் ஏறி நின்று ரசிகர்களைப் பார்த்து கை அசைத்தார். ஆர்வமிகுதியால ரசிகர்கள் அவருக்குக் கைகுலுக்க முண்டியடித்துச் சென்றனர். அப்போது தனுஷ்: மீது கூட்டம் மோதித் தள்ளியது. நிலை தடுமாறிய தனுஷ் கலரியிலிருந்து பின்பக்கமாகத் தவறி கீழே விழுந்தார். அவர் மீது ரசிகர்களும் விழுந்தனர். இதில் தனுஷின் இடது கையிலிருந்து ரத்தம் பீறிட்டது. அவர் வலியால் துடித்தார். உடனடியாக அவரை முதலுதவி சிகிச்சைக்காக அப்பல்லோ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் சிகிச்சைக்காக ராமச்சந்திரா மருத்துவமனைக்கு தனுஷை அழைத்துச் சென்றனர். எலும்பு நிபுணர் தனுஷைப் பரிசோதித்து இடதுகையில் எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் கட்டுப் போட்டார்.

# சிகாகோ திரைஅரங்கில் பிதாமகன்



தமிழகம் முழுவதும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் பிதாமகன் திரைப்படம் அமெரிக்காவின் முக்கிய நகர்களில் திரையிடப்பட்டுள்ளது.

இமாலய வெற்றி பெற்ற சேது நந்தாவுக்குப் பிறகு பாலா இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் பிதாமகன். இந்தப் படத்தில் விக்ரம் சூர்யா, லைலா ஆகியோர் நடித்து உள்ளனர். எவர்கிரீன் மூவி இன்டர்நேஷனல் சார்பில் வி.ஏ.துரை தயாரித்து இருக்கும் இந்தப் படத்துக்கு இசைஞானி இளையராஜா இசை அமைத்து இருக்கிறார்.

தீபாவளிப் பண்டிகைக்கு வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் படங்களில் பிதாமகன் முதலிடத்தில் இருக்கிறது. வித்தியாசமான கதை அமைப்புக்கொண்ட இந்தப் படத்தில் விக்ரம் மற்றும் சூர்யா இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நடித்து இருக்கிறார்கள். படம் முழுவதும் வெட்டியான் ஒருவரின் மகன் வேடத்தில் வரும் விக்ரம் வித்தியாசமான கெட்டப்பில் வெளுத்துக் கட்டுகிறார். இளம் தலைமுறை நடிகர்களுடன் மேட்ரோவின் இசையும் சேர்ந்து நடிக்கிறது.

தமிழகம் முழுவதும் பல்வேறு திரையரங்குகளில் அரங்கம் நிறைந்த காட்சிகளாக வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் பிதாமகன் வெளிநாடுகளிலும் திரையிடப்பட்டுள்ளது.

# வாசகர் இதயம்

குறுகிய காலத்தில் தோன்றி என் இதயத்தில் இடம் பிடித்த தமிழ் அலையே ! நீ வாரந்தோறும் வருகின்ற வேளையில் எப்போது நாளிதழாக வருவாய் என எதிர் பார்த்தேன். வந்து விட்டாய் நன்றி உன்னில் வரும் இந்தியாவும் ஈழத் தமிழரும் ,என்ற வரலாறு என்னை மிகவும் கவர்ந்தவை அத்தோடு சிறுவர் சிகரம்,குறுக்கெழுத்துப் போட்டி மற்றும் அனைத்து விடயங்களும் சூப்பர்..... இத்துடன் பேனா நண்பர் பகுதியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறுகிறேன்.

பி.நத்தபாலு, திருக்கோயில

அன்பின் தமிழ் அலைக்கு வணக்கம்.
வாரா வாரம் நீ வரும்வரை எதிர் பார்த்து வாங்கிப் படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். நீ சுமந்து வரும் அனைத்து விடயங்களும் தமிழரை உணர வைக்கும் படி அமைகின்றது மட்டுமின்றி என் இதயத்தையும் உணரவைக்கும் படி செய்கிறாய். நீ சுமந்து வரும் ஆக்கங்களில் சிறுவர் சிகரம்,கவிதைக் களம் ,மாவீரர் வரலாறு சூப்பரோ சூப்பர். உன் பணி தமிழகத்தில் மேலும் தொடர என் வாழ்த்துக்கள்.

கே.சங்கர்,
அம்பிளாந்துறை

என் அன்பின் தமிழ் அலைக்கு ஆயிரம் கோடி வணக்கம்.
அஞ்சா நெஞ்சம் கொண்டு உண்மையினை உண்மையாக வெளிப்படுத்தும் ஒரே பத்திரிகை நீதான். உன்னில் சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் நிகரற்ற செல்வம். அதிலும் அரிவையர் அலை பெண்களின் திறமையினை வெளிக் கொணரக் கிடைத்த சந்தர்ப்பம் என்றுதான் கூறவேண்டும். சிறுவர் சிகரமோ வளர்ந்து வரும் இளம் சமூதாயத்திற்குக் கல்விச் சிகரமாக விளங்குகிறது.தொடர் கதையோ மறு கதையை எதிர்பார்க்க வைக்கிறது. நகைச்சுவை முற்றம் மனம் விட்டுச் சிரிக்க வைக்கிறது. மாவீரர் வரலாறு மனம் நிறைகிறது. கவிதைகள் மனதைக் கவர்கிறது. மொத்தத்தில் நீ அழியாப் பொக்கிசம். உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

*எஸ்.மேரி அன்ரனீற்றா,கல்லடி.*

அலையே! நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் என்னைக் கவர்ந்தவை. அலை மகனின் பகிரங்க மடல், தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம், ஈழத்தை வென்றெடுக்க தன்னுயிரை மாய்த்து விதைக்கப்பட்ட மாவீரர்களின் காலத்தால் அழியாத வரலாறு என்பன அற்புதமானவை நீ மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள்.

தமிழ் மகன்,
ஜே.கே.ஜெயா, பாண்டிருப்பு-2


என் அபிமான தமிழ் அலையே!
நீ வாரா வாரம் என் கையில் தவழ்வதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். நீ சுமந்து வரும் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தனித் தனி சுவையுடையது. அதிலும் மாவீரர் வரலாறு, கவிதைக்களம், சிறுகதை என்பவை மிகவும் சுவாரசியமாக உள்ளது. மேலும் உன் சேவை தொடர என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

Y.நந்தினி, கிரான்.

# தந்தையின் பிரிவை தாளாது தன்னையே மாய்த்துக்கொண்ட தனயன்

தனது தந்தையின் திடீர் இழப்பை தாங்கமுடியாத 18 வயது மகன் ஒருவன் தந்தையின் கல்லறைக்கு முன்னால் இருந்த மரத்தில் கழுத்தில் சுருக்கிட்டு மரணமானான். கொக்கரல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் உயர் தரம் படிக்கும் சுதேஷ் சம்பத் எனும் மாணவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவனாவான்.மூன்று பேரைக் கொண்ட குடும்பத்தில் இவன்தான் கடைசிப் பிள்ளை. இவனது மூத்த சகோதரர் இராணுவத்தில் கடமையாற்றுகிறார். சகோதரியும் படிக்கிறார். இவனது தந்தை அண்மையில் திடீரென இறந்து போனார்.தந்தைமீது அலாதிப் பிரியம் கொண்ட சுதேஷ் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டான். தினமும் பாடசாலை முடிந்து வீடு திரும்பியதும் தந்தையின் கல்லறைக்குப் போய்விட்டு வருவான். நாட்குறிப்பில் தனது தந்தையின் இழப்பை எவராலும் ஈடு செய்ய முடியாது என்பதையும் கவலையுடன் குறிப்பிட்டிருந்தான். வழமைபோல் கடந்த வாரமும் தந்தையின் கல்லறைக்குப் போய் வந்தவன் அங்கிருந்த மரத்தில் சுருக்கிட்டு மரணமானான். பெற்றோரின் இழப்பைப் பிள்ளைகளாலும், பிள்ளைகளின் இழப்பை பெற்றோராலும் தாங்கிக் கொள்ள முடியாது என்பத்து உண்மைதான். இருந்தாலும் கவலையை மறக்க தற்கொலை தான் ஒரே வழி என்பதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.தாங்க முடியாத வேதனைக்காகத் தன்னைத் தானே அழித்துக்கொள்வது எவ்வளவு முட்டாள் தனம் என்பதை இந்த மாணவன் நிரூபித்து விட்டான் என்பது மட்டுமே உண்மை.

## வியப்பூட்டும் உண்மைகள்



படத்தில் இருப்பது ஒரு புதியரகத் துப்பாக்கி. இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. முன் பகுதி குழல் பகுதியாகும். இது பக்கச்சார்பாக திரும்பக்கூடியது. இதன் மேற் பகுதியில் ஒரு சிறிய கமெரா பொருத்தப்பட்டுள்ளது. பின் பகுதி துப்பாக்கியின் ஏனைய பகுதிகளைக் கொண்டதாகும். இதன் விசேட அம்சம் ஒருவர் தன்னை மறைத்துக்கொண்டு துப்பாக்கியின் முனையை மாத்திரம் வெளியில் நீட்டிய படி கமராவின் உதவியுடன் எதிரியைத் தாக்கலாம். இது தற்போது உலகின் பல பாகங்களிலும் வெகு வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத் துறை வளர்ச்சி எங்கு கொண்டுபோய்விடுமோ....

# பொன் மொழிகள்

* கல்விக்கழகு அடங்கியிருத்தல்.

*பணியப்பணிய பாவம் அகலும்.

* செயல் புரிவதற்கே உனக்கு உரிமை இருக்கிறது. பலன்களில் பற்று வைக்காதே.

* பயந்து ஓடுவதால் பிரச்சினை தீராது எதிர்த்து நில்.

* உன்னையே நீ உணர்.

* நாவை அடக்கினால் நாலும் அடங்கும்.

* உணர்வுகள் ரொம்ப புனிதமானது. ஆனால் உணர்ச்சி வசப்படக் கூடாது.

* மனம் கலந்து ஈடு பட்ட பணியில் தான் சாதனைகளை நிகழ்த்த முடியும்.

* தெளிவான இலட்சியத் தீர்மானமே வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.

* அன்பைக் கொடு இறைவனைப் போல் கொடு. அன்பிற்காக ஏங்காதே.

வி. கேதீஸ், கன்னன் குடா- .02

## நிலவு

நெடுந்தொலைவில் நின்றிடுவாய்
நேருக்கு நேர் வருவாய்!
திடீரென்று சில நாட்கள்
தெரியாமல் போய் விடுவாய்!


வளர்ந்தாலும் தேய்ந்தாலும்
வடிவாக நீயிருப்பாய்!
அழகான பெண்களுக்கு
உவமானம் ஆகிடுவாய் !

பகலவனின் நன் கொடையில்
பட்டொளி வீசிடுவாய்!
விளக்கில்லாத ஏழைகட்கு
விளக்காக நீயிருப்பாய் !

அ.குலாம்பிகை, ஆண்டு - 7
மட்/வின்சன்ட் மகளிர் தேசியக்கல்லூரி.




# அறிவின் விலை என்ன?



முரளி பத்திரிக்கை நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் ஒரு படித்த இளைஞன்.

இவனுக்கு ஒரு நாள் டெட்ரோன் கலந்த பருத்திப் புடவை வாங்க வேண்டி இருந்தது. தனது நண்பன் ஒருவன் புடவைக் கடை வைத்திருப்பது அவனுக்கு நினைவு வந்தது. அவனிடம் சென்றால் இலாபமாகப் புடவையை வாங்கிக் கொள்ளலாம் என நினைத்தான்.

எனவே புறக்கோட்டையில் உள்ள தனது நண்பனின் கடைக்குச் சென்றான். அங்கு தனது நண்பனைச் சந்தித்து தனது தேவையினைக் கூறினான். நண்பனும் தனது கடையின் வேலையாளிடம் கலந்தாலோசித்து விட்டு நண்பனிடம் வந்தான். அப்புடவை தனது களஞ்சிய அறையில் உள்ளதாகவும், ஐந்து நிமிடங்களில் கொண்டு வந்து தருவதாகவும் கூறினான். பின் தனது உதவியாளனிடம் சில கட்டளைகளை பிறப்பித்தான். அவன் பேசியதில் இருந்து அடுத்த கடையில் அப்புடவை இருப்பதனையும் அதனைக் கொள்வனவு செய்து பத்து வீத இலாபத்துடன் தனக்கு அதனை விற்கப் போவதனையும் முரளி அறிந்து கொண்டான்.

புடவை வந்து சேர்ந்தது. புடவையின் விலை ஐந்நூற்றி ஐம்பது ரூபாவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்பணத்தைச் செலுத்தி முரளி புடவையை வாங்கிக் கொண்டான். ஒரு நாள் புடவைக் கடை நண்பனுக்கு, வங்கியிலிருந்து ஆங்கிலத்தில் ஒரு கடிதம் வந்தது. அதற்கு ஆங்கிலத்தில் பதில் எழுத நண்பனுக்குத் தெரியாது. எனவே முரளியை அழைத்து வந்து விடயத்தைக் கூறினான்.

முரளியும் கடிதத்தை அழகுற எழுதிக் கொடுத்து விட்டு கடிதம் எழுதியமைக்குக் கட்டணமாக நூறு ரூபாய் தரும்படி கேட்டான். நண்பனோ இது ஒரு சின்ன வேலை. இதற்குப் போய் என்னிடம் பணம் கேட்கிறாயே என்றான்.

அதற்கு முரளி "நீ அடுத்த கடையிலிருந்த புடைவையைக் கொண்டு வந்து தருவதற்கு 50 ரூபாய் தரகுப் பணம் வசூல் செய்து கொண்டாய். நானோ இந்த அறிவினை வகுப்பறையிலிருந்து பெற்று பல காலம் பாதுகாத்து, உனது கடை வரை கொண்டு வந்து தந்துள்ளேன். எனவே 100 ரூபாய் கட்டணம் நியாயமானதே என்றான்.

## சிந்தனைத் துளிகள் சில.....

1) ஒரு நாட்டை அடிமைப்படுத்த விரும்புவோர் அந்த இனத்தையும் அதன் மொழியையும் நசிக்க முற்படுகிறார்கள்.

2) ஒரு நாட்டின் உரிமையை இழக்கலாம். அதற்காக அந்த நாட்டு மொழியை இழந்து விடக் கூடாது.

3) ஒரு மொழி என்பது ஒருவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடிய கருத்துச் சாதனம்.

4) ஒரு நாட்டின் மொழியைக் காப்பாற்றினால் அந்த நாடு அடிமையுற்றால் ஒரு நாள் மீட்க முடியும்.

5) மொழி என்பது ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டுக் கருவூலம்.

6) ஓர் இனமாகத் தம்மை உயர்த்தி தம் உரிமை வாழ்வைப் போற்றி வாழ மொழியே முக்கியமாகும்.

7) ஓர் இனத்தின் மொழி அழிந்திடுமானால் அம் மக்கள் எழுச்சிக் குன்றில் உருக்குலைந்து ஒடுங்கி விடுவார்கள்.

8) ஒருவன் தன் வழி வழியாக வாழ்ந்து வரும் நிலப்பகுதியானது தனக்குப் பிறப்பிலேயே உரிமைப்பட்ட வாழ்விடமாகும்.

கே.பாரதி மீனகம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1) தினசரிப் பத்திரிகைகளே இல்லாத நாடு எது?
காம்பியா, ஆபிரிக்காவில் உள்ள மிகச்சிறிய குடியரசு நாடு.

2) கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ஜின் கப்பல் முதன்முதலாக எங்கே விடப்பட்டது?
தூத்துக்குடியில்

3) அமெரிக்காவில் குழந்தைகள் தினம் எப்போது கொண்டாடப்பட்டது?
ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட் கிழமை.

4) பூச்சிகளைப் பற்றி ஆராயும் துறைக்கு என்ன பெயர்?
எஸ். டொ. மாலஜி

5) முதல் உலகப் போர் ஆரம்பமான திகதி என்ன?
4 - 8 - 1914ம் திகதி.

6) குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் முதன்முதலாக எங்கே நடந்தது?
சாமாநிக்கல்(பிரான்ஸ்)1924

7) "பூமராங்" என்னும் ஆயுதத்தைக் கண்டு பிடித்தவர்கள் யார்?
ஆஸ்த்திரேலிய பழங்குடியினர்

8) பித்த நீர்ப்பை இல்லாத ஒரே மிருகம் எது?
ஒட்டகம்.

9) இந்தியாவின் பரப்பளவு எவ்வளவு?
12,20,099சதுரமைல்

10) நோபல் பரிசு பெற்ற முதல் பெண் யார்?
மேரி கியூரி (1903 ம் ஆண்டு)

வி.யசோதரன், தரம்-11s மட்/மகாஜனக்கல்லூரி.

## டைனோசர் (Dinosaur)



புவியியல் பண்டைக் காலத்தில் இராட்சத நகருயிர்கள் அதாவது டைனோசர்கள் (Dinosaurs) வாழ்ந்தமை பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த இராட்சத நகருயிர்கள் ஏறத்தாழ 225 மில்லியன் வருடங்களுக்கு முற்பட்ட காலம் தொட்டு புவியில் வாழ்ந்து வந்துள்ளன என்பதும், அவை கிட்டத்தட்ட 65 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் புவியில் இருந்து முற்றாக அழிந்து விட்டன என்பதற்குமான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.


டைனோசர்கள் அழிந்து போனமைக்கான காரணங்கள் பல விஞ்ஞானிகளால் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

*. பெரியதொரு ஆகாயக்கல் அல்லது குறுங்கோள் பூமியில் விழுந்து மோதியதால் டைனோசர்கள் அழிந்தன.

*. ஆகாயக்கல் பூமியில் மோதியதால் ஏற்பட்ட தூசுகள் வளிமண்டலத்தில் படிந்து சூரியக்கதிர்கள் பூமிக்கு வராது தடுத்தது. அதனால் பூமியில் கடும் குளிர் நிலவியது அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் அழிந்தன.

*. அகன்ற இலைகளைக் கொண்ட தாவரங்கள் தோன்றிய போது காற்றில் ஒட்சிசனின் அளவு அதிகரித்தது. அதன் காரணமாக டைனோசர்களின் உடலில் உணவு வேகமாகச் சமிபாடடைந்தது. எனவே போதுமான உணவின்றி அழிந்து போயின.

*. எலி போன்ற சிறிய பிராணிகள் தைனோசர்களின் முட்டைகளை உடைத்து தின்று விட்டன. அதனால் இனம் பெருக முடியாமல் டைனோசர்கள் அழிந்து



போயின. இது போன்ற காரணங்கள் டைனோசர்கள் அழிவதற்கு ஆதாரம் எனும் கருத்துக்கள் குறிப்பிட்டுள்ளன.

நா. நிஷாந்தினி,தரம்- 6A
மட்/ புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

## பன்னாட்டுப் பழ மொழிகள்

1) "ஒருவர் அறிவாளியாக இருந்தால் இருவர் இன்பமாக இருக்கலாம்.
(இங்கிலாந்து)

2) "பெண்ணில்லாத வீடு வாளியில்லாத கிணறு ம்ாதிரி."
(பல்கேரியா)

3) "மோகம் செய்யாத நண்பன் புத்தகம் மட்டுமே"
(பிரான்ஸ்)

4) "கெட்ட புத்தகங்கள் திருடர்களை விட மோசமானவை"
(இத்தாலி)

5) "தானும் கட்டளையிடமாட்டான், பிறரின் கட்டளைக்கும் கீழ் படியான் அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன்"
(ஜேர்மனி)

இ.கிசோத்திரி, 10ம் வட்டாரம்,
கொக்கட்டிச் சோலை.

## பொது அறிவுகள்

1) தீப்பெட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
ஜான்வாக்கர்.

2) மின் குமிழைக் கண்டு பிடித்தவர் யார்?
தோமஸ் அல்வா எடிசன்.

3) புவியீர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தவர் யார்?



சேர்.ஐசாக் நியூட்டன்.

4) விமானத்தைக் கண்டு பிடித்தவர்கள் யாவர்?
ரைட் சகோதரர்கள்

5) நத்தையின் முட்டை என்ன நிறம்?
மஞ்சள் நிறம்.

6) மிகவும் சிறிய கோள் எது?
புதன்.

7) எமது நாட்டில் நாணயங்களை வெளியிடும் வங்கி எது? மத்திய வங்கி

8) மிக வேகமாக நீந்தும் மீன் எது? சுறா



பு. சிவப்பிரியன், தரம்-5
மட்/ இராம கிருஷ்ணமிசன் ம. வி
ஆரையம்பதி.

## நாடுகளும் தலை நகரங்களும்

| நாடு | | தலை நகரங்கள் |
|---|---|---|
| 1) இலங்கை | ---- | கொழும்பு |
| 2) இந்தியா | ---- | புது டில்லி |
| 3) பாகிஸ்தான் | ---- | கராச்சி |
| 4) அமெரிக்கா | ---- | வொஷிங்ரன் |
| 5) அவுஸ்ரேலியா | ---- | சிட்னி |
| 6) சீனா | ---- | பீக்கிங் |
| 7) ஜப்பான் | ---- | டோக்கியோ |

வே.வேனுஜன், தரம் - 4M, விஷ்ணுமகா வித்தியாலயம், வந்தாறு மூலை.

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை துரித மீட்டல்-2003
## வினாத் தாள்- 04
### பகுதி-(1)

*.உருவை அவதானித்து எண்களைப் பிரதியீடு செய்து வினாக்களுக்கு விடை தருக.?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | A | C | D | E | D | ............ |
| 02 | B | B | A | B | D | ............ |
| 03 | A | B | C | D | D | ............ |
| 04 | B | A | C | B | D | ............ |
| | A | A | A | D | D | 32 |
| | 36 | 33 | 30 | 23 | 20 | |

*.கீழ் வரும் அட்டவணையை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?

| பெயர் | வயது | உயரம் |
|---|---|---|
| குமார் | 9வருடம் 2மாதம் | 121CM |
| ரவி | 8வருடம் 11மாதம் | 124CM |
| முரளி | 9வருடம் 4மாதம் | 117CM |
| பிரபா | 8வருடம் 7மாதம் | 131CM |

5.மிகக் கூடிய, குறைந்த உயரங்களை M,CM ல் தருக?

6. மிகக் குறைந்த உயரமுடைய பையனின் வயது என்ன?

7. மிகக் கூடிய உயரமுடைய பையனின் பெயர் யாது?

8. பிரபா முரளியை விட எத்தனை வயது இளையவன்?

9. குமார்.ரவி ஆகியோரின் வயதுகளின் கூட்டுத் தொகை யாது?

10. பையன்களின் வயதிற்கு ஏற்ப ஏறுவரிசையில் அவர்களின் பெயர்களை எழுதுக?

*. ஒரு பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியோரின் விபரம் கீழே வரைபில் காட்டப்படுகிறது
*ஆறு மாணவர்களை உரு ஒன்று குறிக்கிறது.

1994
1995
1996
1997
1998



11. இவ் வரைபின் படி 1998ல் எத்தனை மாணவர்கள் தோற்றலாம் என எதிர் பார்க்கப்படுகிறது என்பதை வரைபில் வரைந்து காட்டுக?

12. 1995ல் தோற்றிய மாணவர்கள் எத்தனை பேர்?

13. 1994, 1995, 1996, 1997ஆம் ஆண்டுகளில் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

14. 1995, 1997ஆகிய இரு ஆண்டுகளிலும் தோற்றிய பரீட்சாத்திகளுக் கிடையேயான வித்தியாசம் எத்தனை?

15. அதன் படி 2003ல் பரீட்சைக்கு எத்தனை மாணவர்கள் தோற்றுவார் என எதிர்பார்க்கிறீர்?

*. சரியான விடையின் கீழ் கோடிடுக.
16. நிழற்றப்படாத பகுதியின் பின்னம் முழு உருவின் என்ன பின்னமாகும்?




$\frac{1}{5}$, $\frac{8}{7}$, $\frac{1}{4}$, $\frac{7}{8}$

17. கடகம் என்னும் சொல்லைக் குறியீடாக எழுதினால்
4369, 4849, 4766, 4487

*.கரம் 223
வரம் 423
அம்பு 536
அருவி 578இவற்றைப் பயன்படுத்தி கீழ் தரப்பட்ட சொற்களுக்குக் குறியீடான இலக்கங்களை எழுதுக?

18. கரும்பு -
அரம் -
வரம்பு -
அரவம் -

19.



இக் குறியீடு குறிப்பது

(1).இங்கு கோல்லீப் விற்கப்படும்.
(11). இங்கே புகையுங்கள்.
(111). இங்கு புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

*.கீழே தரப்பட்டுள்ள கவிதை அடிகளை வாசித்து வினாக்களுக்கு விடை தருக?
''வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான் ''

20.
(1). வரப்பு என்பது யாது?
(11). இக் கவிதையைப் பாடியவர் யார்?
(111). குடி என்பதன் கருத்து யாது?

21. ராமுவின் பண்ணையில் கோழிகளும்,மாடுகளுமாகச் சேர்த்து 10 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 32. அங்குள்ள மாடுகள் எத்தனை?

22. ஒரு பண்ணையில் 12மாடுகள் உண்டு. அதில் ஒரு மாட்டிற்கு 3கால்கள். அங்குள்ள 12 மாடுகளுக்கும் எத்தனை கால்கள்?

23. தேங்காய் ஒன்று வாங்கும் பணத்திற்கு மூன்று மாம்பழங்கள் வாங்கலாம். இரண்டு மாம்பழங்கள் வாங்கும் பணத்திற்கு மூன்று வாழைப் பழங்கள் வாங்கலாம். மூன்று வாழைப் பழங்கள் வாங்கும் பணத்திற்கு ஒரு அப்பிள் பழம் வாங்கலாம். அப்பிள் பழம் 4.50சதம் எனின் தேங்காயின் விலை யாது?

*.கீழே நிகழ்வுகளும் அதனுடன் தொடர்புடைய பழமொழிகளும் தரப்படுகிறது. நிகழ்வுகளுக்கப் பொருத்தமான பழ மொழியின் இலக்கத்தை எதிரே எழுதுக.

நிகழ்வுகள

24. மலையில் ஏற முயன்ற கமல் சறுக்கிவிழுந்த போது அவன் நண்பன் கார்த்திக் ஓடிச் சென்று காப்பாற்றினான்.(........)

25. முகுந்தன் ''தானும் உண்ணான் பிறருக்கும் கொடான்''இவனது நடத்தைக்குப் பொருத்தமானது (........)

26. மாலினி ஒரு பிச்சைக்காரி. அவளுக்கு ஒரு குழந்தை உண்டு. அவளுக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொடுப்பது அவளது பண்பு (........)

27. எனக்கு ஆகாரம் அழித்தவரை மறக்க மாட்டேன் (........)

28. விமலா ஒரு ஏழை. அவளுக்கு ஒரு சட்டை மட்டும் தான் உண்டு. பாடசாலைக்கு வரும் போது அவளது ஆடை எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கும். (........)

பழ மொழிகள்

1. வைக்கோற் பட்டறைநாய்
2. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
3. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
4. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
5. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

*. பின்வரும் வாக்கியங்களில் அடிக் கோடிடப் பட்டவை ஒரு காரியத்திற்கான காரணம் எனின் நேரே(*) அடையாளத்தினையும் காரணமல்ல எனின் (X)அடையாளத்தையும் இடுக.

29. நீர் வேகமாக ஓடியதால மண்ணரிப்பு ஏற்படுகிறது. (.....)

30. திருமணம் சுப வேளையில் நடந்தது (.......)

31. மானின் அழகில் சீதை மயங்கினாள் (.......)

32. வீடு முற்றாக எரிந்து சாம்பலானது (.......)

33. பாகற்காயில் கறி சமைக்கலாம் (.......)

*. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு படுத்தினால் வரும் விடையின் கீழ் கோடிடுக.
34.
A - உன் பாதுக்கைகளை எனக்குத் தந்துதவவேண்டும்.
B -பரதன் ஒருவாறாக அயோத்தியை ஆளுவதற்கு ஒத்துக் கொண்டு அண்ணா...
C -அதன் பின் வந்து ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும்
D -நீயே என் தந்தை, தெய்வம், நீசொல்கிற படியே செய்கிறேன் ஆதலால்
E -உனக்குப் பதிலாக அவற்றை சிம்மாசனத்தில் வைத்து ஆட்சி செய்வேன்.

(1).A, C, D, B, E
(11).B, D, A, E, C
(111)B, A, D, E, C


35. ஒரு பாடசாலையில் விளையாட்டுப் போட்டி சம்பந்தமான பொறுப்புக்கள் சரியாகப் பங்கிடப் பட்ட ஒழுங்கு முறை
(1). இல்ல ஆசிரியர்- அதிபர்- விளையாட்டுப் பொறுப்பாசிரியர்- இல்லத் தலைவர்- மாணவர்கள்

(11). அதிபர்- விளையாட்டுப் பொறுப்பாசிரியர்- இல்ல ஆசிரியர்- இல்லத் தலைவர்- மாணவர்கள்

(111) அதிபர்- இல்ல ஆசிரியர்- விளையாட்டுப் பொறுப்பாசிரியர்- இல்லத் தலைவர்- மாணவர்கள்

*.விடுபட்ட பகுதிகளை நிரப்ப பொருத்தமான பகுதி எது என இனங்கண்டு கீறிடுக.


36.
37.
38.



*.எழுத்துப் பிழை இல்லாத சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.
39. முனநூறு, முண்ணூறு
முந்னூறு, முந்நூறு

40. உயர்ச்சி, உயற்சி
உசத்தி, ஓசத்தி

### விடைகள்

1. 24
2. 30
3. 27
4. 29
5. கூடிய உயரம்-1m 31cm
குறைந்த உயரம்-1m17cm
6. 9வயது 4மாதம்
7. பிரபா
8. 9 மாதம்
9. 18 வயது 1மாதம்
10. பிரபா, ரவி, குமார், முரளி
11. 
12. 18
13. 84
14. 12
15. 66
16. $\frac{7}{8}$
17. 4849
18. (I.) 2736
(II) 523
(III) 4236
(IV) 5243
19. (III)
20. வரம்பு (II) ஔவையார் (III)
21. 6
22.47கால்கள்
23. 6.75
24. 3
25. 1
26. 2
27. 5
28. 4
29. *
30. x
31. *
32. x
33. x
34. II
35. II
36. III
37. I
38. II
39. முந்நூறு
40. உயர்ச்சி

ச. ஜெயாகரன்
மட்/ திருப்பழுகாமம் விபு. வித்

தொடரும்.....

# கண்டியின் கடைசி மன்னன்
# ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனின் அந்தியகாலம்



(சென்ற வாரத் தொடர்ச்சி....)

மன்னர் தன்னைத் தரிசிக்கும் ஆங்கிலேயருடன் சினேக பூர்வமாகவே நடந்து கொண்டார். அவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டார். ஒருமுறை தனது இராணிமாரைப்பார்க்க விரும்புகிறீர்களா என்று ஆங்கிலேயன் ஒருவரைக் கேட்டார். ''அவர்களைச் சந்திப்பது மகிழ்ச்சியைத்தரும்'' என அவர் கூறினார். ''அரசிகளை எந்தமுறையில் வரவேற்க வேண்டும்.?'' என்று கேட்டபோது, ''நீங்கள் விரும்பியவாறு வரவேற்கலாம்; கைகுலுக்கலாம், அல்லது கட்டித்தழுவலாம். தற்போது அவர்கள் அழுக்கடைந்த உடையில் இருக்கிறார்கள். ஆடைகள் கண்டியிலிருந்து கொண்டுவரப்பட வேண்டும்' என்று சொன்னார்.

அரசரின் சிம்மாசனமும் செங்கோலும் கைது செய்யப்பட்ட போதே கைப்பற்றப்பட்டன. சிம்மாசனம் மிகவும் பழைய பாணியிலான கதிரையாகும். பின்புறம் 5அடி உயரமானது அகலம் 3அடி, கதிரை மரத்தால் செய்யப்பட்டு தங்கத் தகடு போர்த்தப்பட்டுள்ளது. ஆங்காங்கு விலைமதிப்பற்ற இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. சிம்மாசனத்தின் இருபுறமும் யாளிகள். கதிரையின் சாயும் பக்கத்தின் உச்சியில் தங்கச் சூரியன். இது மன்னர் சூரிய வம்சவத்தவர் என்பதன் குறியீடாகும். பின்புறத்தின் இருபக்கத்திலும் இலக்குமி உருவங்கள். சிம்மாசனத்தின் இருக்கும் பகுதியும், சாயும் பின்புறமும் வெல்வெற்றினால் போர்த்தப்பட்ட குஷன்கள். கால்பதிக்கும் பீடமும் அழகாகச் செய்யப்பட்டுள்ளது. குஷனாலானது. சுற்றிவர இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. செங்கோல் இரும்பினால் செய்யப்பட்டு தங்கத் தகடு போர்த்தப்பட்டுள்ளது. அதன் அந்தங்களில் தங்கப் பூண் போடப்பட்டுள்ளது. இது அரசரின் அடையாளச் சின்னமாகும்.

1816 ஜனவரி 24இல் மன்னரும் குடும்பத்தினரும் ஒபிறெயினைக் கப்டனாகக் கொண்ட எச்.எம் கோண் வாலிஸ் கப்பலில் ஏற்றப்பட்டனர். ஏராளமான மக்கள் பதவியிழந்த மன்னரை வழியனுப்பக் குழுமியிருந்தனர். சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்ட மன்னர் குடும்பத்தினர் மிகக் கௌரவமான முறையில் வரவேற்கப்பட்டனர்.

அரசர் சிறைப்பிடிக்கப்பட்ட பின்னர் விரோத உணர்வு எதுவுமின்றி அவரின் விருப்பங்கள் அனைத்தும் கூடியவரை நிறைவேற்றப்பட்டன. தேசாதிபதியின் வண்டியில் மன்னர் அழைத்துச் செல்லப்பட்டார். அரசிகள் பல்லக்கில் அழைத்துச் செல்லப்பட்டனர். அரச குடும்பத்துடன் கிறன் வில்லவும் சென்றார்.

மன்னரும் குடும்பத்தினரும் பெப்ரவரி 22இல் வடகரையை அடைந்தனர். வசதியான கூடாரத்தில் முதலில் தங்கவைக்கப்பட்டனர். இங்கு அவர்கள் பட்டின மேஜர், கப்டன் மக் டொனால்ட், திரு. மரியற் ஆகியோருக்கு அறிமுகப் படுத்தப்பட்டனர். மாட்சிமை தங்கிய தேசாதிபதியால் அனுப்பப்பட்ட கிரன் வில்லெ அறிமுகப் படுத்தினார். உடமைகள் கூலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. அடுத்தநாள் காலை 5மணியளவில் அவர்கள் திரும்பவும் வேறொரு கூடாரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் வேலூருக்கு அனுப்பப்பட்டனர்.

அரச குடும்பத்தினர் விரும்பியது அனைத்தும் வழங்கப் பட்டன. 1817-18 காலப்பகுதியில் அரச குடும்பத்துக்கான செலவு 9917ஸ்ரார் பகோடாஸ் என மதிப்பிடப்பட்டுள்ளது.(ஒரு பகோடா 3ரூபா-ஐம்பது சதம்) அரசனுக்கு பொறுப்பாக இருந்த அலுவலருக்கான நிலுவைச் சம்பளமாக மேலும் 100பகோடாஸ் வழங்கப்பட்டது. அரச குடும்பத்திற்கான தினசரி செலவு விபரம் வெளியிடப்பட்டுள்ளது. தினசரி செலவு 30 ரூபா, படுக்கைஅறை வாசனைப் பொருட்களுக்கான செலவு ரூபா 10. சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்கான வேதனம் 126ஸ்ரார் பகோடாஸ்.

இவற்றுக்கு மேலாக அரசு உடைகளையும் ஆபரணங்களையும் ஆபரணம் செய்யும் தொழிலாளர்களையும் வழங்கியது. 1874ல் இலங்கையில் இருந்த ஆங்கில நிர்வாகம் மன்னனின் மூன்றாவது மனைவி கடன் பட்டிருந்த ரூபா எண்ணாயிரத்தைச் செலுத்தி இருந்தது.

மன்னர் தடுப்புக்காவலில் 17ஆண்டு வாழ்ந்தார். 1832ம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி 52வது வயதில் மன்னர் மரணமானார்.

ஆட்சியில் இருக்கும் போது மன்னர் தனது பிரஜைகள் மீது அவநம்பிக்கை கொண்டிருந்தார். தனது பாதுகாப்புக்காகக் கொடுமைப்படுத்துவதை விட வேறு மார்க்கம் இல்லையென்று அவர் கருதியிருக்க வேண்டும். தடுப்புக் காவலில் இருந்தபோது அவர் குணஇயல்புகள் மாற்றம் அடைந்திருந்தன. மரணிக்கும்போது திருந்திய நல்ல மனிதராகத் தோற்றமளித்தார்.

மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் திருமதி.எச்.எச்.டல்லிங் எனும் ஆங்கில அம்மையாரால் தரப்பட்டவை ஆங்கிலேயரின் ஆவணங்களிலிருந்தே இவை திரட்டப்பட்டிருக்க வேண்டும். சுதேச ஆவணங்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. இதனால் உண்மையான நிலவரத்தைஅறிய வாய்ப்பில்லை. ஆக்கிரமிப்பாளர் தனது ஆட்சியை நியாயப் படுத்தும் விதத்திலேயே தம் அறிக்கைகளைத் தயாரித்திருப்பார் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**- முல்லைமணி -**


---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 08-11-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-18**
**தமிழ் அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 18




### இடமிருந்து வலம்

1) வெளிப்படுத்துதல், காண்பித்தல் என்னும் பொருள் தரும் வினைச் சொல்.
4) வேலை தேடி நம்மவர் அதிகமாகச் செல்லும் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று (திரும்பியுள்ளது)
6) கண்ணன் இக் குலத்திலேயே பிறந்தான்.
8) ஆணை (குழம்பியுள்ளது)
9) இதைக் கேட்பது எப்போதும் இலகுவானது.
10) வேண்டுமென்றே அடம்பிடிக்கும் தன்மை.
12) ரசனை மிக்கவன். சுவைஞன் என்றும் கூறலாம்(திரும்பியுள்ளது)
14) மேன்மை (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1) தமிழ் மாதங்களில் ஒன்றுடன் தொடர்புடைய முருகனின் நாமம்.
2) உடலுக்கு வலுச் சேர்க்க இது அவசியம் என்பார்கள் (தலை கீழ்)
3) உலோகங்கள் மின்னுவதை விபரிக்கும் இரட்டைக் கிளவிச் சொல் ஒன்று
5) துன்பம் (குழம்பியுள்ளது)
7) புள்ளி ஒன்றைச் சுற்றி மாறாத தூரத்தில் அசையும் பொருளின் ஒழுக்கு (பாதை) இப்படி அழைக்கப்படும்.
10) தமிழரின் உதிரத்துடன் கூடவே இதுவும் உறைந்துள்ளதாகக் கூறுவர்.
11) அறிவு.
13) களங்கம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 16ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. மாரீசன்
05. பாலகன்
06. திருமால்
08. வனம் (ட-ம்)
09. யாகம்
10. பனை
11. அத்(தி)
12. டும்

**மேலிருந்து கீழ்**

01. மாலதி
02. சன்மானம்
03. கருடன்
04. தீபாராதனை
07. அகவல்
09. யாத்திரை
10. பங்கம்
12. காடு
13. முடி
14. அறி

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**திரு. க. சண்முகராஜா,**
பழைய பொலிஸ் நிலைய வீதி,
எருவில், களுவாஞ்சிக்குடி.

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

**கே. அரசேஸ்வரன்,**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

**நா. சிவலிங்கம்,**
எம். ஓ.ஏச். விடுதி ஒழுங்கை,
கல்முனை.

**மாணிக்கன் இளங்கோ,**
விவசாயப்பிரிவு,2ம் வருடம்,
அரசினர் ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு.

**ஜெயம் அரவிந்தன்,**
கதிர்காமர் வீதி, திருக்கோவில்.

**பா. ரகுதரன்,**
C/o. P.பாலசுப்பிரமணியம்,
பிரதான வீதி, தம்பிலுவில்- 01

**தாமோதரம் வடிவேல்,**
5, ஏறாவூர்,செங்கலடி.

**த. தனுஷ்காந்த்,**
பிரதான வீதி, செல்வாநகர்,
ஆரையம்பதி.

**மா. செந்தூரன்,**
கன்னன்குடா,மட்டக்களப்பு.

**செல்வி. சு. தனுஷியா,**
1ம் பிரிவு,மண்டூர்.

**திருமதி. யோ. கலைச்செல்வி,**
பாடசாலை வீதி,
முனைத்தீவு.

விறுவிறுப்பான தொடர் நாவல்

# 20 என் கணவன் எனக்கு மட்டும் தான்

சுகுமாரின் மனைவி பூங்கோதை மூத்த மகன் முரளி வீட்டுக்குப் போய் கிட்டத்தட்ட ஒரு மாதம் முடிந்து விட்டது.

மருமகள் கோமதியோடு சேர்ந்து வீட்டு வேலைகளில் ஈடுபட்டாலும், அடிக்கடி சிந்தித்துப் பெருமூச்சி விடுவதையும், ஏதோ பேயறைந்தவளைப் போல மோட்டுக் கூரையைப் பார்ப்பதையும், பச பசவென்று தன்பாட்டுக்கு மாறாட்டக் கதைகள் கதைப் பதையும் கோமதி அவதானித்தே வந்தாள்.

''மாமி, நீங்க காலமெல்லாம் எங்களோட இருந்தாலும் நாங்க அதப்பத்திக் கவலைப்படப் போறல்ல. ஆனா உங்களுக்கு இன்னும் இரண்டு பிள்ளைகள் இருக்கு, அதுவும் இளையவள் இந்திரா வாசிற்றிக்குப் போப்புறாள். நிறையப் படிக்க வேண்டியிருக்கும். நாங்க பக்கத்தில இருந்தாலும் காரியமில்ல, சுதனும் இளந்தாரிப்பிள்ள, இந்த நேரத்தில தாய் பக்கத்தில இருந்து அதுகளப் பராமரிக்கிறதப் போல வராது. நீங்க இப்படியே இருந்தா அதுகளுக்கு உங்க மேல இருக்கிற தாய்ப்பாசமும் குறஞ்சி பொயித்திரும்.

செத்துப்போன மாணிக்கண்ணன் வந்து எல்லாத்தையும் சொல்லியிருந்தவர் தானே! அது மெய்யோ பொய்யோ நீங்களும் அங்கபோய் வாழ்ந்தாத்தானே தெரியும்!'' என்று கோமதி பூங்கோதையிடம் மிக அமைதியாக ஆதரவாகச் சொன்ன போது பூங்கோதை கோமதியை வெறிக்கப் பார்த்தாள்.

''மாமி, நான் இப்படிச் சொன்னதுக்காக என்ன மன்னியுங்க, நான் உங்களுக்கு மருமகள் மாத்திரமல்ல, நாங்க திருமணம் முடிச்ச அந்த நாளையிலேயே மாமா என்னக் கூப்பிட்டு வச்சி ''நீயும் இண்டையிலயிருந்து எனக்கு ஒரு மகள் தானெண்டு சொன்னவர். அந்த உரிமையோடதான் நான் இதச் சொல்லுறன். உங்களுக்கு விருப்பமில்லாட்டி உங்க பாட்டுக்கு இருங்க. ஏதோ இப்படி சொல்ல வேணுமெண்டு என் மனதில தோன்றிச்சி. சொல்லிப் போட்டன் அவளவுதான்''

இதைக்கேட்டதும் குசினிக்குள்ளிருந்து கத்தரிக்காயைநறுக்கிக் கொண்டிருந்த பூங்கோதை அதை அப்படியே வைத்து விட்டு திடீரென எழுந்து மண்டபத்திற்குள் வந்து கதிரையில் இருந்து கொண்டாள்.

மருமகள் கோமதிக்குச் சங்கடமாகப் போய் விட்டது.

''மாமியிடம் இதை ஏன் சொன்னேன்! அவர் வேலையால வந்த பிறகு மாமி முறைபட்டாவென்றால் பிறகு அவர் என்னோட சண்டை பிடிப்பார்!'' என்று தலையில் அடித்துக் கொண்டு சமையல் வேலையில் ஈடுபடத் தொடங்கினாள்.

மண்டபத்திற்குள் போயிருந்த பூங்கோதை பலவாறாகச் சிந்திக்கத் தொடங்கினாள்.

அந்த நாளில் இந்தியன் ஆமி சமாதானப் படையாக இலங்கைக்கு வந்ததும், எல்லாச் சனங்களும் அவர்களை முற்று முழுதாக நம்பி மனம் விட்டு அவர்களோடு பேசியதும் குங்குமப் பொட்டு வைத்து அவர்களை வரவேற்றதும், பிறகு சமாதானம் செய்ய வந்தவர்களே அழிமதிகள் செய்யும் கொடியவர்களாக மாறியதும் பூங்கோதையின் கண் முன்னால் திரைப் படமாக விரிந்தது.

விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப் படைக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு நாடு மீண்டும் குழம்பிக் கொண்டது.

இலங்கைப் படையினர் பார்த்துக் கொண்டிருக்கவே இந்தியப் படைகள் 'றவுண்டப்' செய்து தமிழ் பேசும் மக்களையெல்லாம் கொடுமைப்படுத்த தொடங்கினர்.

ஒருநாள் விடியற் காலையில் வந்த இந்தியப் படையினர் வீட்டிலிருந்த ஆண்களையெல்லாம் வயது வித்தியாசமின்றிக் கோவிலடியில் போய் இருக்குமாறு கட்டளை பிறப்பித்தார்கள்.

அதன்படி எல்லோரும் போய் விட்டார்கள்.

வீடுகளில் பெண்களைத் தவிர வேறு ஆண்கள் எவருமில்லை.

வீடுகளில் சிலவேளை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது ஒளிந்து கொண்டிருக்கலாம் அல்லது ஏதாவது குண்டுகள், ஆயுதங்களை ஒளித்து வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்திலும் வீடு வீடாகச் சல்லடை போட்டுத் தேடுவதற்காக திக்குத் திக்காகப் பட்டாளக் காரரை அனுப்பி விட்டார்கள்.

இந்தியன் ஆமி வீடுகளைச் சோதிக்க வருகிறான் என்பதை அறிந்ததும் வீட்டுக் கதவுகளைத் திறந்து விட்டபடி பெண்களெல்லாம் பீதியில் வெளியே வந்து நின்று கொண்டார்கள்.

இப்படிப் பூங்கோதையின் வீட்டுக்கும் வந்தார்கள்.

தாய்க்கிழவியும், பூங்கோதையும் தான் வீட்டில் இருந்தார்கள். பூங்கோதை அப்போது குமராய் இருந்தாள். வட இந்திய ஆமிக்காரர்களில் ஒருவனுக்கு பூங்கோதையின் அழகான கவர்ச்சி தோற்றம் பிடித்து விட்டது. சுற்றும் முற்றும் பார்த்தான். தாய்க் கிழவியைத் தவிர அங்கு எவரையும் காணவில்லை.

வீட்டுக்குள் போய் அங்குமிங்கும் தட்டிக் கொட்டி புரட்டிப் பார்த்து விட்டு வெளியே வந்தவன், பூங்கோதையைப் பார்த்து, வீட்டிற்குள் அலமாரியைத் திறந்து விடுமாறு கேட்டான். இவன் இப்படி சொல்லிக் கொண்டு நிற்க வெளியே இரண்டு ஆமிக்காரர்கள் கிழவிக்கு முன்னால் துப்பாக்கியை நீட்டிய படி நின்றார்கள்.

பூங்கோதை ஓட்டத்தில் சென்று பெரிய வீட்டிற்குள் இருந்த அலமாரியைத் திறக்க முயன்றாள்.

அவ்வளவுதான் தெரியும். அந்தப்பட்டாளக் காரன் ஓடிச் சென்று பூங்கோதையைக் கட்டிப் பிடித்தான்.

பூங்கோதை திமிறினாள். அவன் பிடியில் இருந்து தப்பித்துக் கொண்டு அழுதபடி வெளியே ஓடி வந்து தாயின் பக்கத்தில் நின்று கொண்டாள்.

பூங்கோதை போட்ட சத்தம் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் கேட்டது. அவர்கள் எதுவோ, என்னவோ! என்று வேலிக்கு மேலால் எட்டியெட்டிப் பார்த்தார்கள்.

இதையெல்லாம் அவதானித்த பட்டாளக் காரர் மூவரும் ''மிச்சம் ஜாக்கிரதை'' என்று சொல்வதைப் போல பூங்கோதையையும், தாயையும் முறைத்து பார்த்து விட்டு வளவை விட்டுப் போனார்கள்.

பூங்கோதை தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவளைச் சமாதானப் படுத்தவே தாய்க்கிழவிக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.



இச்சம்பவம் ஊரெங்கும் வேறு விதமாகப் பரவிக் கொண்டது.

ஒருவன் கறுப்பாக சத்தி எடுத்தான் என்பதை இன்னொருவர் காகத்தைக் சத்தி எடுத்தானென்று கதை கட்டியதைப் போல ''பூங்கோதையை இந்தியன் ஆமி கற்பழித்து விட்டான்'' என்று முட்டாள் தனமாக ஊரவர்கள் கதை பரப்பினார்கள்.

இதன் காரணமாகப் பூங்கோதையை திருமணம் செய்ய எவருமே முன் வரவில்லை.

கடைசியில் இதன் உண்மை நிலையைப் புரிந்து கொண்ட சுகுமார் தான் துணிந்து இவளைத் திருமணம் செய்து கொண்டான்.

இந்த பழைய சம்பவங்களையெல்லாம் பூங்கோதை இப்போது நினைத்துப் பார்த்தாள். அப்போது சுகுமார் மேல் அவளுக்கு இரக்கம் உண்டா னது.

''கற்பிழந்தவள் இவளை யார் திருமணம் செய்யப் போகிறார்கள்?'' என்று ஊரே கழித்து ஒதுக்கிய ஒருத்தியை துணிந்து வந்து ஏற்றுக் கொண்ட சுகுமாரை, அவன் ஆயிரம்தான் ஏசினாலும், பேசினாலும் எதையும் தாங்கிக் கொள்ள முடியாமல் இப்படி ஆத்திரத்தில் நான் பிரிந்து வந்திருக்கவே கூடாது.'' என்று அவளது மனம் அவளையே திட்டியது.

''உண்மையிலேயே அவள் கற்பை இழந்திருக்கவில்லை. ஊர்தான் தேவையில்லாமல் நஞ்சைக் கக்கியது.

இதை நன்றாகத் தெரிந்த பின்புதானே அவர் என்னைத் திருமணம் செய்து கொண்டவர். அப்படிப்பட்டவர் ஏன் என்னைப் பற்றி அவதூறாகக் கதைத்தார்?

இதுதான் பூங்கோதையின் அடி மனதில் பற்றிப் பிடித்திருந்த தீ! அதை அணைக்க அவள் பட்டபாடு அது எவருக்குமே தெரியாது.

இப்போதுதான் அந்தச் சூடு அவளுக்குள்ளிருந்து; மெல்ல மெல்ல ஆறிக் கொண்டிருந்தது.

தன் பக்கமும், கணவனின் பக்கமும் நின்று எல்லாச் சம்பவங்களைப் பற்றியும் அலசி ஆராய்ந்த போது அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அந்த முடிவு பிள்ளைகளுக்காக வாழ வேண்டும் என்பதுதான். தான் வரும் போது கொண்டு வந்த உடு பிடவைகளை மடித்து 'பேக்'கினுள் திணித்துக் கொண்டிருந்த போது மூத்த மகன் முரளி வேலை விட்டு வீட்டுக்கு வந்தான்.

அவன் வரவும், அவர்களது எதிர் வீட்டில் முரளிக்கொரு அவசர 'ரெலிபோன் கோல்' வரவும் நேரம் சரியாகவே இருந்தது.

''ஹெலோ!''

''ஆர் அண்ணாவா...!'' என்று சொல்லும் போதே இந்திரா அழ ஆரம்பித்தாள்.

'றிசீவரைப் பிடித்துக் கொண்டிருந்த முரளியின் கை அவனையுமறியாமல் நடுங்கியது.

''இந்திரா ஏன் அழுறா? என்ன நடந்தது?''

''சுதனுக்கு வெடிப் பட்டு.....!''

''வெடிப்பட்டு...! எங்க வச்சி?''

''காத்தான்குடியிலையாம்! அப்பாக்கு ரெலிபோன் பண்ணிச் சொல்லிப் போட்டன்! நீங்களும் அம்மாவக் கூட்டித்துக் கெதியா வாங்கண்ணா!''

''இப்ப சுதன் எங்க?''

''ஆசுபத்திரியில''

''வெடி அவனுக்கு எவடத்த பட்டதாம்?''

''எனக்குத் தெரியாண்ணா''

முரளி கன்னங்களில் நீர் வடிய ஓட்டத்தில் வந்து தங்கை இந்திரா சொன்னதை எல்லாம் சொன்னான். அதைக் கேட்டதும் பூங்கோதை துடித்துப் போனாள்.

(தொடரும்)

## வாசகர்களின் கவனத்திற்கு!

*''என் கணவன் எனக்கு மட்டும்தான்'' தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்

பெயர்.....................................................................

அனுப்புவரின் பெயர்.....................................................

விலாசம்.................................................................

கையொப்பம்..........................................

சிறுகதை

# ஆணிவேர்கள்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் முற்பகுதியில் ஒரு நாள்! பட்டிருப்பில் இருந்து பேரூந்தில் ஏறிப் பழுகாமம், போரதீவு, வெல்லாவெளி, பாலையடிவட்டை தாண்டி ''வக்கியெல்ல'' யல்ல'' சந்தி போய் இறங்கும் வரை பரந்து விரிந்த வயற்பரப்புக்களையும், பசிய இளந் தென்னைகள் சூழ்ந்த குடியிருப்புக்களையும் பார்த்துக் கொண்டே இருந்தேன். எனது விழிகள் சலிப்படையவே இல்லை. மாறாக மனம் களிப்படைந்தது. சே! எவ்வளவு பசுமையான காட்சிகள்...!

நானும் பேரூந்தில் போய் இறங்க அங்கே துவிச்சக்கர வண்டியுடன் காத்துக் கொண்டு நின்றான் எனது மச்சான் சிகாமணி"!

''வாமச்சான்! சொன்ன நேரத்திற்கு வந்து சேந்திற்றாய்!'' உள்ளம் நிறைந்த மகிழ்வோடு வரவேற்றான்.

''நான் மட்டுமா நீயும் சொன்னபடி வண்டியோடு வந்து நிற்கிறாய் தானே?'' என்று அவனின் தோளில் கைபோட்டேன். அன்போடு ஆரத்தழுவி அவனென்னை அணைத்துக் கொண்டான்.

வக்கிலச் சந்தியில் இருந்து சிகாமணி வசிக்கும் சின்னவத்தைக் கிராமத்தை அடைய சுமார் மூன்று மைல்தூரம் கரடுமுரடான செம்மண் வீதியையும், வயல் வரப்புக்கள், வாய்க்கால் ஓடைகள் எனக் கடந்து செல்ல வேண்டும்.

எல்லாவற்றையும் கடந்து ஒருபடியாக வீடுசென்ற போது கமலம் மகிழ்ச்சி ததும்ப தனது மக்களுக்கு ''மாமா வந்திற்றாரா! தம்பி சிறி! குமார்! பிரியா ஓடிவாங்க'' என்று பலா நிழலில் விளையாடிக் கொண்டிருந்தவர்களை ஆர்வத்துடன் அழைத்து அறிமுகப்படுத்த, அவர்கள் ஆவலுடன் ஓடிவந்து என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

சிறீதான் சிகாமணியுடைய மூத்த மகன். அவனுக்கு அப்போது ஆறுவயது ஆகியிருந்தது. இருபது வயதிலேயே திருமணத்தை முடித்துக் கொண்ட சிகாமணி, எனக்கு ஒரு வயது இளையவன், இருபத்தேழு வயதிலேயே மூன்று மக்களுக்கு அப்பா்வாய் நிற்கும் அவனைப்பார்க்க பிரமச்சரியான எனக்கு பரிதாபமாயும், இரக்கமாகவும் இருந்தது.

''ஏன்ரா அவசரப்பட்ட நீ'' என்று ஒரு முறை கேட்ட போது சொன்னான்,'' ''என்ன மச்சான் செய்யிறது அண்ணனும் கலியாணம் முடிச்சிற்றுப் போய்க் கொஞ்சநாளயால அம்மா செத்திற்றாவு. அப்ப நானும், தம்பியும், தங்கச்சியும் அப்பாவோட இருந்தம். அந்த நேரத்திலதான் வயலுக்குத் தண்ணி பாய்ச்சிற பிரச்சினையில எங்கட வயலுக்கு மேல் வயல்கார ''பண்டா'' வோட சண்டை புடிச்சி அப்பா அவனுக்கு அடிச்சிப் போட்டார்! பொறுத்தகதிர் குடல நேரத்தில தண்ணிய மறிச்சா ஆருக்கு ஆத்திரம் வராது? பொறகு அவன் தங்கட ஆக்களோட கூடிவந்து ஒரு நாள் ராவுல தண்ணி பாய்ச்சப்போன அப்பாவ வெட்டிப்போட்டான். அதுக்குப் பிறகு தம்பி தங்கச்சிக்கு என்னால ஒழுங்காச் சமைச்சிக் குடுக்க முடியாமல்தான் கமலத்த எடுத்த நான் மச்சான்'' என்று விளக்கிய போது நான் மனம் நெகிழ்ந்து போனேன்.

இவர்களின் வயல் எல்லையோடு பண்டாவின் வயல் தொடங்கி அவர்களின் வயல், ஊர், பிரதேசமென விரிவடைந்து செல்கின்றது.கல்லோயா குடியேற்றத்திட்டத்தினால், தமிழரின் பாரம்பரிய வளமான பிரதேசத்தின் பெரும்பகுதி சிங்களவர் வசமாக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுகளே இவை.

எந்தப் பகுதியிலும் பிரதான நீர்ப்பாசன வாய்க்கால்கள் ''அவர்களின்'' கைகளுடாகத்தான் தமிழர் நிலத்துக்குப் பாயும். வாய்க்கால் நீரை எப்போது வேண்டுமானாலும் அவர்கள் தடுக்கலாம். அந்த வேளைகளில் தமிழ் மக்களின் பயிர்கள் கிடந்து காயும். எவ்வளவு கவனமான, கபடத்தனமான திட்டமிடலை டி.எஸ். சேனநாயக்காவின் மூளை அந்த நாளிலேயே செய்திருக்கின்றதை எண்ணி என்னுள் வியப்படைந்ததுடன் ஆத்திரமுமடைந்திருக்கின்றேன்.

''குளிச்சிற்று வந்து சாப்பிடுங்கண்ண! காலமையும் சாப்பீட்டிங்களோ தெரியா'' சிந்தனை வயப்பட்டிருந்த என்னைக் கமலத்தின் குரல் மீட்டெடுத்தது.

கழுத்தளவு ஆழத்தில் சுழித்தபடி பாய்ந்து கொண்டிருந்த வாய்க்கால் நீரில் ஆசை தீரக் குளித்தேன். என்னோடு குளித்த சிகாமணி எனக்கு முதுகு தேய்த்துவிட்டான்.


''மச்சான் போன வரிசம் உன்னச் சுட்டு வீட்டோட பத்த வச்சிப் போட்டானுகள் எண்டு ஒரு வதந்தியக் கேட்டு நான் அண்ணன், தம்பி, எல்லோரும் சேர்ந்து எத்தினநாள் அழுது குழறினம் மச்சான், காணுற சனங்களிட்டயெல்லாம் சொல்லிச் சொல்லித் துன்பப் பட்டம். பிறகுதான் ஒண்ட பதில் கிடைச்சி ஒழுங்காச் சாப்பாடு தண்ணி இறங்கி மனமும் ஆறுதலடஞ்சிது..''

சிகாமணியின் கதையைக் கேட்ட போது அவர்கள் என்மீது வைத்திருக்கும் உண்மையான அன்பின் ஆழத்தை எண்ணி வியந்ததுடன், உண்மையான அன்பு செலுத்த எனக்கும் சில உறவுகள் இருப்பதை எண்ணிப் பெருமையுமடைந்தேன்.

''குளிச்ச போதுமா மச்சான்?'' சிகாமணி கேட்டான்.

''ஓம் மச்சான் போதும்'' என்று சொன்னபடி இருவரும் கரையேறினோம்.

வீட்டிற்குச் சென்றதும் கமலம் சுடச்சுட உணவு பரிமாறினாள். கோழி இறைச்சிக் குழம்பு, பலாக்காய் வெள்ளைக்கறி, மரவள்ளிக் கிழங்கு ஆணம் எனச் சுவையாகவே இருந்தது சாப்பாடு.



''இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கண்ண'' என்று கமலமும், சாப்பிடு மச்சான்! சாப்பிடு மச்சான்! என்று சிகாமணியும் அன்புரிமையுடன் உபசரித்ததில் சாப்பாட்டு விடயத்தில் மித வாதியான நான் அன்று சற்று மிதமிஞ்சியே சாப்பிட்டேன்.

இப்படியே சில நாட்கள் விருந்தோம்பலும் பொழுதுபோக்கும் என முடிந்ததுடன் மண்டூர் திருவிழாவிற்குப் போய் சில தினங்கள் தங்கி திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கண்டு கழித்தோம்.

முழுக்க முழுக்க வியசாயத்தையே நம்பி அதையே தமது தொழில் பொழுதுபோக்கு வாழ்க்கையென வரித்துக் கொண்டு இரவும் பகலும் வயல் நினைவோடேயே உழலும் அந்தக் கிராமத்து மக்கள் கல்வி வாசனை அற்றவர்களாகவே காணப்பட்டனர்.

சூறாவழியின் போது அழிவுற்ற பாடசாலை மண்மேடாகக் கிடக்க புளியமரத்தின் நிழலில், தூர இடத்தில் இருந்து துவிச்சக்கர வண்டியில் மூச்சிரைக்க வந்து சேரும் அதிபர் முதல் அனைத்துமேயான அந்த ஒரே வாத்தியார் தனது சம்பளத்தைக் காப்பாற்றிக் கொள்ள தினமும் டாப்புப் பதிவை நடாத்தி விட்டுப் போவார். சிறிது நாட்கள் பெற்றோர் தம் பிள்ளைகளை எதிர்பார்ப்புடன் அனுப்பி ஏமாற்றம் முற்றியவுடன் ''போதும் படிச்ச வயலுக்க போய் அப்பாவோட என்னவும் வேலையப் பாரு'' என்று கூறி நிறுத்தி விடுவார்கள்.

அயலிலுள்ள சிங்களக் கிராமங்களின் நிலையோ வேறு. அங்கு கல்வி, போக்குரத்து, மின்சாரம் போன்ற சகல வசதிகளும் தாராளம். இது பற்றி சிகாமணி என்னிடம் அடிக்கடி கூறி, ''எப்ப மச்சான் நமக்கு விடிவுகாலம் பிறந்து நம்மட பிள்ளைகள் தலை நிமிர்ந்து வாழ்கின்ற காலம் வரும்?'' என்று ஏக்கத்துடன் கேட்பான்.

சிகாமணி ஓரளவு எழுத வாசிக்கக் கற்றிருந்தான். ஒழுங்காகத் தன் பிள்ளைகளையாவது படிக்க வைக்க வேண்டும் என்று தன் மனதில் பெரும் தாகத்தைக் கொண்டிருந்தான். அவனது ஆசைக்கு ஏற்றபடி அவனது மகன் சிறி மிகவும் புத்தி சாதுரியமானவனாகக் காணப்பட்டான்.

நான் சிகாமணியிடம் சொல்வேன் ''நீ கவலைப்படாத மச்சான் உன்ர ஆசையை சிறி நிச்சயம் நிறைவேற்றித் தருவான். விளையும் பயிரை முளையில தெரியும் என்ற மாதிரி அவனுடைய ஆர்வமும், துடிப்பும், செயற்பாடுகளும் அவனது எதிர்காலச் சிறப்புக்கு முன்னுரையாக நிற்குதடா!'' என்று அப்போது சிகாமணியின் மனதின் நிறைவை முகம் பிரதிபலிக்கும்.

''மச்சான் ஒரு ஐந்தாம் தரம் படிச்ச பிறகு சிறியை நீதான் திருகோணமலைக்கு கொண்டுபோய் படிப்பிக்க வேண்டும்.'' என்று என்னிடம் கூறுவான். கடைசியாக நான் போயிருந்த போது கூட சிகாமணியும் கமலமும் இதை ஞாபகப்படுத்தினர்.

அங்கு போயிருந்த சில தினங்களுக்குள்ளேயே ''மாமா மாமா என்று என்னுடன் நெருக்கமாகி விட்ட'' சிறியுடன் கேட்டேன் ''மருமகன் நீ படிச்சு என்ன உத்தியோகம் பார்ப்பாய்''? ''நான் மாமா பெரிய'' வாத்தியாராவருவன் வந்து, ''எங்கட ஊரில் பெரிய பள்ளிக் குடம்கட்டி எல்லாரையும் படிப்பிப்பன்'' என்றான்.

கடைசியாக நான் அங்கிருந்து புறப்படும் போது சிகாமணியும், கமலமும் அடுத்த முறை நான்வரும் போது சிறியைக் கூட்டிப்போகக் கூடிய முறையில் வரும் படி வழி அனுப்பி வைத்தனர்.

சில வருடங்கள் கழிந்து விட்டன... பயணங்கள் பயங்கரமாக இருந்தமையினால் சென்று வர வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சிகாமணிக்கும் எனக்கும் இடையில் கடிதத்தொடர்புகள் இருந்தமையால் சிகாமணியின் தமையன் பாக்கியராசாவும், தம்பி மேகநாதனும் ரி.வி படம் பார்த்துக் கொண்டிருந்தபோது இராணுவம் சுட்டதில் இறந்துபோனதாக எழுதியிருந்தான்.

நான் போகவில்லை வேதனைப்பட மட்டுமே என்னால் முடிந்தது. காலம் கடந்தது... மீண்டும் 1990 யூனில் போர் தொடங்கியது. மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் இன அழிப்பு எல்லையைத் தாண்டியது. எங்கும் தமிழர் குருதி, பிணம்....! சிறிலங்காப் படையினரின் நரவேட்டையும் நாசகாரத்தனங்களும் பற்றிய செய்திகள் இதயத்தை ஸ்தம்பிக்கச் செய்தன. நானும் பாதிக்கப்பட்டு அகதி

> **''மச்சான் போன வரிசம் உன்னச் சுட்டு வீட்டோட பத்த வச்சிப் போட்டானுகள் எண்டு ஒரு வதந்தியக் கேட்டு நான்......''**

முகாமில் இருந்த போதும் சிகாமணியின் குடும்பத்தை, உறவுகளை, அவனின் பிள்ளைகளை ஆசைக்கனவுகளை எல்லாம் எண்ணிப் பார்த்தேன்.

சிகாமணியின் குடும்பத்தின் விபரம் அறிய முயற்சித்தேன் முடியவில்லை. சில மாதங்களின் பின் எதிர் பாராத விதமாக ஓர் கடிதம் கிடைத்தது. அது சிகாமணியின் மகன் சிறீதான் எழுதியிருந்தான்.

''அன்பின் மாமாவுக்கு! நான் நலம் உங்கள் நலனுக்கும் எனது பிரார்த்தனைகள், நீங்கள் யாவரும் சுகமாக இருக்கிறீர்களா? எங்களைப் பற்றியும் அறிய நீங்கள் அவதிப்படுவீர்கள் என்பது எனக்குத் தெரியும், ஆனால் நான் எப்படி எழுதுவதென்று தான் தெரியவில்லை மாமா, யூன் மாதத்தில் சண்டை தொடங்கியபோது ஆயிரக்கணக்கில் பீரங்கி கவச வாகனங்களுடன் வந்த இராணுவத்தினரால் எங்களுடைய கிராமம் முற்றாக அழிக்கப்பட்டது. ஓடி உயிர் தப்பியோர் போக கண்ணில் பட்ட யாவரும் சுட்டும், வெட்டியும் அடித்தும் கொல்லப்பட்டனர். நாங்களும் ஓட முயற்சித்தோம் முடியவில்லை. நான் மட்டும் வளவுப்பற்றைக்குள் பதுங்கிக் கொண்டேன். என்னை அவர்கள் காணவில்லை. ஆனால் அப்பா, அம்மா, தம்பி, தங்கை எல்லோருமே அவர்களிடம் அகப்பட்டுவிட்டனர். எவ்வளவோ கெஞ்சி அழுதும் அவர்கள் ஒருவரையும் விட்டு வைக்கவில்லை. அப்பா, அம்மா, தம்பி, தங்கை ஆகியோரின் அவலக்குரல் கேட்டு அடங்கியது. இப்படியே அடுத்தடுத்து வீடுகளிலும் நடந்தது.

அவர்கள் போன பின் வந்து பார்த்தேன்...! என்னவென்று நான் விபரிப்பேன் மாமா...! அழுது கொண்டு கிடந்த என்னை இயக்க அண்ணாக்கள் கண்டு சாப்பாடு, தண்ணீர் தந்து தேற்றியதுடன், அப்பா, அம்மா, தம்பி, தங்கை ஆகியோரின் உடல்களையும் எடுத்து நீங்கள் அப்பாவுடன் பாய்போட்டுக் கதைத்துக் கொண்டிருந்த எங்கள் பலாமரத்தடியிலேயே புதைத்தனர். இப்போது நான் அண்ணாக்களின் ஆதரவில்தான் இருந்து படிக்கிறேன். படித்து முடிந்ததும் அப்பா, அம்மாவின் ஆசைப்படி எங்களுடைய சொந்த ஊருக்குப் போய் வாழ வேண்டுமென்பதுடன், எங்களுடைய ஊர் முன்னேறப்பாடு பட வேண்டு மென்பதிலும் உறுதியாக இருக்கின்றேன்..'' என்று எழுதியிருந்தான்.

கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த போது என் நெஞ்சு துடித்தது, கைகள் நடுங்கின, கண்கள் பனித்தன, இறுதியில் வாய்விட்டு அழுது தீர்த்தேன்.

இப்படி எத்தனை சிகாமணியின் குடும்பங்கள் அழிக்கப்பட்டன...! இப்படி எத்தனை சிறீகள் தவித்துக் கொண்டிருப்பார்கள்...! எண்ணிப்பார்த்தேன். ஆனால்,இந்தச் சிறியின் உள்ளத்தில் உள்ள தெளிவும், உறுதியும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. ஆம்! வெட்டப்பட்டவைகள் மீண்டும் விழுதெறிந்து தழைக்கும். ஏனெனில் இவர்கள் அறுபடாத ஆணிவேர்கள்....!

-நிலா தமிழின் தாசன்-



# ஈராக்கில் வேட்டையாடப்படும் அமெரிக்கப் படைகள்



## சூத்திரதாரி சதாமா, பின்லேடனா?

தற்போது ஈராக்கின் பாக்தாத் நகரில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் குண்டுத் தாக்குதல்களையடுத்து ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்க பிரிட்டன் கூட்டுப் படைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி விட்டது.

இதுவரை தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் குண்டுத் தாக்குதல் காரணமாக நூற்றுக்கணக்கான அமெரிக்கப்படைகள் பலியாகியுள்ளனர். கடந்த திங்களன்று இடம் பெற்ற கார் குண்டுத்தாக்குதல் மேலும் அமெரிக்காவுக்கு அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

திங்களன்று முதலாவது தாக்குதல் பக்தாத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்கக் கட்டிடத்திற்கு அருகாமையில் இடம் பெற்றது. இத்தாக்குதலில் இருபதிற்கும் மேற்பட்ட ஈராக்கியர்கள் உயிரிழந்தனர்.

முதலாவது தாக்குதலில் 10 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 15 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டாவது தாக்குதல் பாக்தாத்தின் வடகிழக்குப் பகுதியில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம் பெற்றது. இதில் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

மற்றுமொரு தாக்குதல் பாக்தாத்தின் தென் மேற்குப் பகுதியில் பாயா மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கக் கட்டிடத்தை நோக்கி மிக வேகமாக வந்த அம்புலன்ஸ் வண்டி ஒன்று கட்டிடத்தில் மோதி வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இக் குண்டு வெடிப்பில் செஞ்சிலுவைச் சங்கத்தில் பணிபுரியும் 15 ஈராக்கிய ஊழியர்கள் காயமடைந்தனர்.

இதே வேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை பாக்தாத்தில் அமெரிக்க பிரதிப் பாதுகாப்பமைச்சர் போல்வூல் போவிற்ஸ் தங்கியிருந்த ஹோட்டல் ஹெரில்லாக்களது ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.



இத்தாக்குதலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உயிர் தப்பிய போதும் அமெரிக்கர் உட்பட 15பேர் காயமடைந்தனர்.

இதேவேளை ஞாயிறு இரவு பாக்தாத்தின் மேற்குப் புறத்தில் அபூகிராப் சிறைச்சாலையில் அமெரிக்கப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு அமெரிக்க சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் தாக்குதல் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கட்டிடம் மீது இடம் பெற்ற தாக்குதலையடுத்து செஞ்சிலுவைச் சங்கம் ஈராக்கில் இருந்து வெளியேறுவது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆராய்ந்து வருகிறது.

இவை ஒருபுறமிருக்க ஈராக்கில் மீள்கட்டமைப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க நாட்டு ஒப்பந்தக் காரர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். ஈராக்கில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களில் தாமும் இலக்காக நேரிடலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

தொடராக இடம் பெற்று வரும் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் ஒசா்மா பில்லேடனின் அல்-ஹைடா அமைப்பும், சதாம் ஹுசெய்னின் ஆதரவாளர்களுமே இத்தாக்குதலுக்குக் காரணமாகும் என பிரான்ஸிக்கான ஈரான் துாதுவர் தெரிவித்துள்ளார். இவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் கடந்த ஒக்டோபர் 18ம் திகதி பின்லேடனால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் இரண்டு ஒலிநாடாக்களை C.N.N தொலைக்காட்சி நிலையம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டது.

அதில் அமெரிக்காவையும் ஈராக் விவகாரத்தில் அமெரிக்காவுக்கு உதவும் நேச நாடுகளையும் பின்லேடன் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். அமெரிக்காவிலும் அதன் வெளியேயும் தற்கொலைத் தாக்குதல்கள் எந்த நேரத்திலும் நடத்தப்படலாம் என்றும் ஈராக் யுத்தத்தில் பங்கேற்ற பிரிட்டன், ஸ்பெயின், போலந்து, ய்ப்பான், இத்தாலி, ஆகிய நாடுகள் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு தாம் நேரத்தையும் காலத்தையும் எதிர்பார்த்திருப்பதாக இந்த ஒலி நாடாவில் குறிப்பிடப் பட்டிருந்தது.

**வேணு**

இந்த ஒலிநாடாக்கள் வெளியாகி சில நாட்களின் பின்னர் ஈராக்கில் தொடர்ந்து குண்டுத் தாக்குதல் இடம் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. சதாம் ஹுசையின் உயிருடன் இருக்கிறாரா அல்லது போரில் உயிரிழந்து விட்டாரா என்பதை உறுதிப்படுத்த அமெரிக்காவினால் முடியவில்லை. அதே சமயம் அவரது இரு புதல்வர்களும் இறந்து விட்டதாகவும் இறந்த உடலங்களையும் பகிரங்கப்படுத்தியிருந்தது. தற்போது பின்லேடன், சதாம் அல்லது சதாமின் ஆதரவாளர்கள் அமெரிக்கப் படைகளைத் தொடர்ச்சியாக வேட்டையாடத் தொடங்கிவிட்டனர். எதிர் காலத்தில் இத்தகைய தாக்குதல் இன்னும் வலிமையடையலாம் என உலக அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

---

தெ. கிருபாகரன்

# பன்முக ஆற்றல் படைத்த பண்பாளன் / ஒரு அஞ்சலிக் குறிப்பு

"வான் வெளியில் வந்த செய்தி
பொய்யாகிப் போகாதோ
மாண்டவன் நீ என்ற செய்தி
கனவாகிப் போகாதோ" என்ற பாடல் வரிகளே அக்கணம் நினைவில் முட்டி மோதிற்று. ஆம்; அன்று 21.10.2003 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியிருக்கும். மட்டக்களப்பு போதான வைத்தியசாலைக்கு வைத்திய நிபுணர் ஒருவரை அவசரப்பணி காரணமாகச் சந்திக்கச் சென்றவிடத்து, சந்தித்த நன்கு அறிமுகமான உயர் நிலைத் தாதி ஒருவர் அந்த செய்தியைக் கூறினார். "...... தம்பி உங்கட கெம்பஸ் இங்கிலீஸ் லெக்ஷரர் இறந்து போனாராமே தெரியாதா?..... அவர் காரைதீவாம். நம்மட மகனோட அவரிட மகனும் படிக்கிறவனாம். இப்பதான் அறிஞ்சனான்...." என்றார் அவர். அண்மைய ஆண்டொன்றில் இராமன் சேரை இழந்த எங்களது பல்கலைக்கழகம் இன்னுமொரு ஆங்கிலப் புலமையாளரைக் காலனிற்குப் பறிகொடுத்த துயரம் நெஞ்சை நிறையவே அழுத்திற்று. ஆஸ்துமா மீது ஆத்திரம் அதிகமாயிற்று.

"நெஞ்சிலே இரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும்" அந்த அமைதியான அமரத்துவத்தை அடைந்தவர் அமரர் தெய்வநாயகம் கிருபாகரன் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கில மொழி போதனாப் பிரிவின் (ENGLISH LANGUAGE TEACHING UNIT- ELTU) தலைவராகத் திறம்படப் பணியாற்றியவர் அன்னார். அகவைகள் ஐம்பத்து நான்கை அவனியிலே கண்டாலும் மிக மிடுக்கான கம்பீரமான தோற்றத்தைக் கொண்டவர் அவர். ஆங்கிலத் துறைத் தலைவராக இருப்பினும், ஆங்கிலம் படித்த மேட்டுக்குடி வர்க்க மமதை அவரிடம் கிஞ்சித்தும் கண்டதில்லை. வாழ்க்கையில் வென்றவர்களின் வேதவாக்கான "உயர்வில் பணிவு" என்ற உன்னதத்தையே கிருபா சேரிடம் நாம் கண்டோம். காணுமிடங்களி லெல்லாம் ஒரு புன் சிரிப்பு; மரியாதை நிமித்தமான மாணவர்களின் வணக்கங்களுக்குப் பதில் வணக்கம் சொல்லும் பண்பான விரிவுரையாளராக அவர் விளங்கினார் என்பதும் குறிப்பிடப்பட்ட வேண்டியதாகிறது.

கிட்டத்தட்ட முதல் இரு அரையாண்டுகளை (SEMESTERS) எமது கற்கை நெறியில் கிருபா சேரிடம் கற்ற அனுபவம் எமக்குண்டு. விடயதானங்களைச் சிறப்பாகக் கற்பிக்கும் திறமையைத் தரிசித்துள்ளோம். அவர் மிக மென்மையாக ஆனால் தெளிவாகச் சொற்களை உபசரிப்பதே தனியழகுதான். ஆத்திரத்துடன் அநாவசியமாகக் கத்திக் கதைத்ததையோ, அதட்டிக் கற்பித்ததையோ அவரிடம் நாம் கண்டதேயில்லை. எமக்கு என்ன என்ன விடயங்கள், எவ்வாறு கற்பிக்கப்பட வேண்டுமென்பதை எங்களிடமும் கலந்து பேசித் தீர்மானிக்கும் நல்லாசிரியப் பண்பை அவரிடமும், அவரது சக ஆங்கில விரிவுரையாளர்களிடமும் கண்டிருக்கிறோம். கிழக்குப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறையின் சிறப்பான செயற்பாட்டிற்கு கிருபா சேரின் தலைமைத்துவமும் (LEADERSHIP), முகாமைத்துவமும் கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளன என்பது நினைவூட்டப்படத் தக்கது.

கிருபா சேரினது அஞ்சலிக்குறிப்பைத் தனியே பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் என்ற நிலையுடன் நோக்கினால் அது குறுகிய பார்வையாகவே அமைந்துவிடும். கிருபா சேர் பன்முகப்பட்ட ஆளுமையின் கூட்டுவடிவம் என்பதை அவரை நன்கறிந்தோரே சாட்சிகளாவார். அன்னாரின் ஆழமான அடக்கமான பணியாற்றல் சமூகப்பார்வை மிக்கது. தமிழீழத் தாயக விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திய நேர்விளைவுகளில் (POSITIVE EFFECTS) ஒன்றான போராட்ட இலக்கியப் பரப்பில் இவரது வகிபாகம் (ROLE) தனித்துவமானது. போராட்டத்தினதும் அதனோடு இணைந்ததுமான தேவைப்பாடுகளினதும் நியாயத்துவங்களை சர்வதேச சமூகத்திற்கும், எமது பிற இனத்தவர்களுக்கும் "அறிந்து கொள்ளும்" விதமாக அமைதியான பணி புரிந்திருந்தார் அவர். சமகால இலக்கியப் படைப்புக்களில் சிலவற்றை ஆங்கிலத்தில் அவ்வப்போது அண்மைக்காலமாக மொழி பெயர்த்திருந்தார். இவருடைய மொழி பெயர்ப்பு ஆக்கங்கள் பலதையும் "ENGLISH FORUM" என்ற அமைப்பின் வெளியீடான "THIRD EYE" (மூன்றாவது கண்) என்ற சஞ்சிகையின் 7வது, 8வது (அண்மைக்கால) வெளியீடுகளில் அச்சுப்பிரதியாகக் காண முடிந்தது. நாட்டுப்பற்று மிக்க நல்ல மொழி பெயர்ப்பாளரை அமைதிக்கான காலத்தில் காலனிடம் பறிகொடுத்தமை பாரிய சோகம் எமக்கு.

கிருபா சேரின் மொழி பெயர்ப்பால் பெருமை பெற்ற படைப்பாளிகள் சார்பாக சி. ஜெயசங்கர், ம. நிலாந்தன், வி. கௌரிபாலன், ஏ.எம். றியாஸ் அகமட் ஆகியோர் வெளியிட்ட "உன்னதம் மிக்க மொழி பெயர்ப்பாளரே" என்ற இரங்கற்பா அன்னாரின் உயர்வில் பணிவைக் காட்டுவதைக் காண முடிந்தது. அதில் சில வரிகளை நன்றியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

"....................
.....................
காலத்தின் துயரம்
சொன்ன நம்மவர்
படைப்பின் முக்கியத்துவம்
கண்டீர்....
மூலம் சிதையாது
ஆங்கிலத்தில் மொழி
பெயர்த்தும் தந்தீர்.
நம்மவர் படைப்பின்
ஆழம் காட்டினீர்....

நம் படைப்பாளிகள் ஆற்றல் காட்டினீர்
படைப்புகள் வழி
ஈழத்தவர் துயரமும்
காட்டினீர்......" என்று கிருபா சேரின் அர்ப்பணிப்பை உரத்துச் சொல்கிறது அந் நினைவுக் கவிதை.


இவ்விடத்தில் எனது கற்கை நெறி தொடர்பான "வள முகாமைத்துவம்" பற்றிய "குழு சமர்ப்பிப்பு" (GROUP PRESENTATION) ஒன்றுக்காக திரு.சி. ஜெயசங்கர் அவர்களது கவிதையின் தனது மொழி பெயர்ப்பை தட்டச்சுப் பிரதியாகத் தந்து தட்டிக் கொடுத்து ஊக்குவித்தமை கண்களில் நிழலாடுகிறது. "மூன்றாவது மனிதன்" இதழ்-12இல் (ஜுலை- செப்டெம்பர், 2001) "சுத்திகரிக்கப்பட்ட பகுதி அல்லது சிப்பாய்களின் சரணாலயம்" எனும் தலைப்பில் வந்த "சமகால சூழலியல்" கவிதையே அது. "CLEARED AREA OR THE SANCTUARY OF SOLDIERS" என்று கிருபா சேர் தலைப்பிட்ட மொழிபெயர்ப்புக் கவிதை பின்னர் "THIRD EYE" 7வது இதழில் வெளியாகியிருந்தது. அதன் தமிழ் மூல வடிவத்தின் முதல் பகுதியையும், ஆங்கில முதல் பகுதியையும் இங்கு பார்ப்பதும் பொருத்தமானதே.

**கே.ரி.பி**

"காதில் ரீங்கரிக்கும்
துப்பாக்கி சன்னங்கள் பறந்து திரியும்
சத்துருக்கொண்டான் சரணாலயம்
தேசத்தின் குறியீடாய் சிதிலமுற்றுக் கிடக்கிறது."
இது சி.ஜெயசங்கர் அவர்களின் வரிகள்.

அமரர் தெ.கிருபாகரனின் மொழி பெயர்ப்பு வரிகளே பின்வருமாறு பூரண அர்த்தத்தைத் தருகின்றன.

"Chatturukondan
The sanctuary of birds
Both from within and beyond frontiers
Lies naped and destroyed
As a symbol of state'affairs



Haunted by flying bullets
That in the ears "

கிருபா சேர் அறிவுத் தேடல் மிக்கவர் என்பதை அடிக்கடி பல்கலைக்கழக நூலகத்தில் காணமுடிவதில் ஓரளவு அறியலாம். அவரது பணியகத்துக்கு நாம் செல்லும் வேளைகளிலும் அவர் பலதரப்பட்ட நூல்களது வாசிப்பில் ஈடுபட்டிருப்பதை அவதானித்து இருக்கிறோம். அவரது தேடலும் பரந்த வாசிப்பும் அவரது இறுதிக்கணம் வரை இருந்ததை, அமரருக்கு அஞ்சலிசெலுத்த நாம் சென்றபோது, "இரவும் பிள்ளையளுக்கு படிப்பித்துக் கொண்டு வாசித்து கொண்டு இருந்தீர்களே..." அன்னாரின் துணைவியார் அழுதழுது சொன்னது எமது கண்களைப் பனிக்கச் செய்ததை மறக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியரான இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறப்பு கற்கை நெறிகளைத் தொடர்ந்ததன் மூலம் காலப்போக்கில் சிறந்த ஆங்கில விரிவுரையாளராகத் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார் என்பதை அண்மையில் தான் அறிய முடிந்தது. "நாடகமும் அரங்கியலும்" துறையிலும் சிறப்பான தடங்ககளை இவர் பதித்திருக்கத் தவறியிருக்கவில்லை.

ஆக மொத்தத்தில், அமரர் தெய்வநாயகம் கிருபாகரன் அவர்கள் பன்முக ஆற்றல் படைத்த பண்பாளன் ஆக மிளிர்ந்தார் என்பதை நினைவு கூர்ந்து, அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து, கிருபா சேரின் ஆத்மா சாந்தியடைய இறையருளை இறைஞ்சுகிறோம்.

## ஈழத்தாய் சபதம்

தந்தை செல்வா

தீவின் வடக்கும் கிழக்கதும் எங்கள்
தேசமென்றார்த்து முழங்கினான்- துயர்
வேவின் மலையக மக்களும் வந்து
மேன்மையுறட்டு மென்றெண்ணினான்
ஆவின் அமுதைப்பன்றிகள்- என்றும்
ஆசையினோடு பருகுமோ- கொடுஞ்
சாவின் விளிம்பிற் தருமமே- நின்று
தத்தளிப்புற்றது அன்று காண்.

கையிலாகாத அரசியல்- செய்து
காடையர் ஆழ்கிற மன்றிலே- உயர்
மெய்யை உரைத்திடக் கூடுமோ- மறை
வேதத்தைப் பேய்கள் விரும்புமோ
நையப் புடைத்துதைத் தெங்களை- இந்த
நாட்டினை விட்டுத் துரத்தவே- அவர்
பையப்பைய வகை தேடினார்- அதைப்
பார்த்துத் தமிழர்கள் வாடினார்.

சிங்களம் மட்டுமே சட்டமாம்- எங்கள்
செந்தமிழ் என்றுமே மட்டமாம்
எங்கும் சிங்கக் கொடியேற்றுவோம்- ஓர்
ஈர்பத்தினாலு மணிக்குளே
வங்கக் கடலினில் தள்ளுவோம்- இந்த
வந்து இங்கேறு குடிகளை- என்று
பொங்கிப் புரைத்த புண்மீதிலே- அது
பொந்திட வேலினை ஏற்றினார்.

தொடரும்.....

எஸ்- கருணா னந்தராஜா (யுகசாரதி)



# கவிதைக் களம்

## காத்திருக்கிறேன்

மகனே அழாதே!
உனக்குச் சாத்தியமற்ற
எனது உலகத்தில்
நீ வாழப்பழகிக் கொள்
நீ பசியாற
அரைவயிற்றுக் கஞ்சியும்
இந்தக் கந்தல் உடையும்
நான் உனக்கு அளிப்பதில்
இதயம் ரணமாய் வலிக்கிறது
காற்றை நிரப்பிக் கொண்டு
வெம்மை கொட்டும்
வயல்களில்,
வியர்வை குளித்து,
உருகும் என்னை
நீ உணருங் காலத்துக்காய்
காத்திருக்கிறேன்.

ம. மலர்விழி குறுமண்வெளி.

## அழியாது எம் நினைவுகள்

இன்னும் நாங்கள்
கண்ணயர்ந்து
தூங்காது
கனவுகளோடு தான்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்...

எம் தேசத்தை
எமது மக்களை
விடுதலையாக்கி
புதிய உலகினை
உருவாக்கி
எம் தேசவிடுதலைக்காய்
வித்தாகி
விதையாகிப்போன
எத்தனையோ
முத்துக்களினது
நினைவுகளை...

அவை இறுதி மூச்சினை விடும் போது
கண்ட கனவுதனை
உண்மையாக்கி
சாதி இன பேதமற்ற
சமத்துவ சமதர்ம
மனிதத்துவமிக்க
யுகமொன்றினை
புஸ்பிக்கின்ற
அழியாநினைவுகளோடு...



அன்னியனது
அடக்குமுறைக்கு
ஆட்பட்டு
அடிமைப்பட்டு
வாழ்வதிலும் விட
ஆறடி மண்ணறைக்குள்
வீர வித்தாகி
அடங்குவதே மேல்
எனும்
எண்ணமதை சுமந்தபடி..

அக்கரை மாணிக்கவாசகம்.

## எங்கள் தமிழினம்

அலைமோதும் கடல் நடுவே
அவதரித்த ஈழநாடே
விலை மதிப்பு மிகுந்த நல்
வளங்கள் கொண்டாய்!
கலை கொஞ்சும் வனப்புமிகு
அழகைக் கொண்டாய்,

மாங்காயின் வடிவெடுத்து
மணங்கவர்ந்தாய்
மாங்கனியின் சுவைபோல
மக்கள் பெற்றாய்!

இனங்கள் பல இருந்தும்
இனபேதம் பல மடங்கு!
அடக்கியாளும் எண்ணமுடன் பெரிய இனம்
அடங்காத மறவர்களாய் எங்கள் தமிழினம்

மண்டூர் எஸ். சதா.

## உயிரற்ற உடல்

மாலையிலே
கடலுக்குச் சென்றாய்
மனதில் நிம்மதி இல்லை
காத்திருந்தேன் கண்விழித்து!
கடலிலே சமர் என்று
கடல் அலை தூதுவிட
காற்று வந்து ஓதியது!
கண்ணாளன் உன்னைக் காணாது
கடற்கரையில் காத்திருந்தேன்!
தூதுவிட்ட கடலலையோ
உயிரற்ற உனது உடலை
காலையிலே
கரையொதுங்கச் செய்தது

க. துஷ்ஜேந்திரன்.

## படையணி!

அண்ணன் படையணி!
அழியாத படையணி!
சொன்னதை நடத்தும்
சிறப்புப் படையணி
வீரத்தின் விருட்சமாய்

வளரும் படையணி!
வெற்றித் திலகமாய்
விளங்கும் படையணி!
விருட்சமாய் வித்தாகி
வித்திட்டுச் சென்ற
எம் மாவீரர் கனவை
நனவாக்கும் படையணி!

அங்கனி.



## கண்ணீர் நாளல்ல!

கோடி மலர்கள் கார்த்திகையில்
பூப்பது
வாடி விழவல்ல.........
கல்லறைக் கென்றே செடிகள்
கருத்தரிக்கின்றன
தனக்குள் உறங்கும்
சந்தன மேனிக்கு
குளிடுட்டுமென நீரை
உறுஞ்சிக் கொள்கின்றது நிலம்
கார்த்திகை இருபத்தேழு
கண்ணீர்
நாளல்ல....!

ம.வன்னியகுமார்

# தேடலும் பகிர்வும் 13

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்பது தமிழ்மறை. அறிவார்ந்த தேடலைத்தூண்டும், நெறிப்படுத்தும் மறைவாக்கு அது.

"2020ம் ஆண்டு அல்லது அதற்கு முன்னதாகவோ ஒரு வளர்ந்த இந்தியா உருவாகும் என்பது வெறும் கனவு அல்ல. இது இந்தியர் பலரின் உள்ளங்களில் இருக்க வேண்டியதோர் தொலை நோக்குக் (VISION) கூட அல்ல. ஒரு பணி இலக்கு (MISSION). இதனை நோக்கி நாம் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து செயல்படுவோம்; வெற்றி காண்போம்" என்று நாட்டுக்குழைக்கும் நல்லவராக ஏ.பி.ஜே.அப்துல் கலாம் வேண்டுவதை அண்மையில் வாசித்தறியக் கிடைத்தது. இன்றைய இந்திய சனாதிபதியும் ய.சு. ராஜனும் இணைந்து எழுதிய "இந்தியா 2020: புத்தாயிரம் ஆண்டுகளுக்கான ஒரு தொலைநோக்கு" எனும் நூலின் தமிழாக்கத்திலேயே இவ்வாறு அறிய முடிந்தது.

நெல்லை சு.முத்துவின் தமிழாக்கத்திலே இடம் பெற்ற பல வலுவான கருத்துக்களிலே, அத்தியாயம் 1 "இந்தியா ஒரு வளர்ந்த நாடாக முடியுமா?" என்பதில், "பாதுகாப்பு வியூக வலிமைகள்" தொடர்பாகக் குறிப்பிட்டதில் சில வரிகளை இங்கு பகிர்ந்து கொள்வோம்.

"....தேசியப் பாதுகாவல் (NATIONAL SECURITY)பிரச்சினை என்பது வெறுமனே தேசப் பாதுகாப்பு (DEFENCE) நடவடிக்கைகள் மட்டுமல்ல. வர்த்தகம் (TRADE), வணிகம் (COMMERCE), முதலீடு (INVESTMENT) ஆகிய மூன்றின் அம்சங்கள் பின்னிப்பிணைவதுடன் அறிவு அடித்தளம் (KNOWLEDGE BASE) படைத்துப் பயன்படுத்துவதும் ஆகும்.

இதன் வழி புதியதோர் போர் முறை பரிணமிப்பதாகத் தோன்றுகின்றது. இவ்வித புதுப்புது எதார்த்தங்களில் சுய நிபுணத்துவம் பெற ஒரு நாடு கற்றுக் கொள்ளவில்லை என்றால் நம் மக்களுக்கு செழிப்பான வாழ்வை உறுதிப்படுத்தும் இலட்சிய எண்ணங்கள் (ASPIRATIONS) பயனற்றுப் போகும். அதனாலேயே நாம் தனிப்பட்டு இயங்க வேண்டும் என்று பரிந்துரைக்கவோ, அல்லது தன்னிறைவு என்ற பெயரில் பழைய "மரையாணி- திருகாணிகள்" கருத்தாக்கங்களில் மீண்டும் இடறி விழுந்ததாகவோ அர்த்தம் இல்லை.

"....ஒரு நாடு பாதுகாப்புத் துறையிலும் இது சார்ந்த அமைப்புக்களிலும் எந்த ளவு தன்னிறைவு பெற முடிகிறதோ, அதனைப் பொறுத்தே தேசப் பாதுகாப்பினைப் பேணிக்காக்கவலிமை பெறவும், சுதந்திரமான அயல் நாட்டுக் கொள்கையை உருவாக்கவும் முடியும்." பூமிப் பந்தில் புதிய தேசத்தில் புலர்வுக்காக பாடுபடும் நாம் இந்நூலை முழுமையாகக் கற்றறிவதன் மூலம் பாடங்கள் படிக்க உதவும்

"மண்ணில் எம் கலைகளைக் கண்ணென மதிப்போம்" என்ற மகுட வாக்கியத்தோடு மண்முனை வடக்கு கலாசார பேரவையின் "தேனகம்" 11ஆவது ஆண்டு முத்தமிழ் விழாச் சிறப்பு மலர் வெளியாகியிருந்தது. ஒரு மலர் அண்மையில் கிராமசேவை அலுவலர் பார்க்கும் படி தந்தார். காத்திரமான கருத்துக்களை அல்லது ஆக்கங்களைத் தாங்கி வந்த அதில்பின் அட்டையில் இடம் பெற்ற த.மலர் செல்வனின் (பண்பாட்டுப் பணியாளர்) "மல்லுக்கிழுக்கின்ற சுணங்கன்" என்ற கவிதையைக் காலப் பொருத்தம் கருதியும் பகிர்ந்து கொள்வோம். (கடந்த தீபத் திருநாளிலும்" சொறி நாயொன்றின்" ஏவலாளர்கள் எக்காளமிட்டதாக ஊடகங்கள் மூலம் அறிந்தோம்.) இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தொடர்பாக சிங்களத் தலைவி தெரிவித்ததாகத் தகவல் வெளியாகையில் இக் கவிதை கூடுதல் கவனம் பெறுகின்றது.

"மீண்டும் யுத்தம் தொடங்கியதாக
சொறிநாயொன்று கத்தியது
எத்தனையோ யுகப்
பிரளயத்தில் முகம் கொடுத்து
திமிரேறிப் போன உடலுக்கு
இந்தச் சொறிநாயின் கூக்குரல்
பெரிதல்ல.
கிழட்டுச் சிங்கத்தின்
கவட்டுக்குள் மறைந்து கொண்டு
உலகத்தையே நான் தான் ஆழுவதாக
வீணிவழிய குரைக்கும்
சொறிநாய்க்கு
இந்த ஊரில் வாழ்வதற்கென்ன
யோக்கியமிருக்கு
கசப்பானதும்
அருவருப்பானதுமான
காலங்களை நான் நினைவுகூர
விரும்பவில்லை
அது
ஊழிக்காலத்தின்
பின் நிலவுக்காலங்களின்
சலசலப்புக்கள்

இன்று நீ
இவையெல்லாம் மறந்தும்
கிழட்டுச் சிங்கத்தின் கவட்டுக்குள்
மறைந்து கொண்டு
நான் தான் அரசி
என் கட்டளைக்கெல்லாம்
யாவரும் தலைவணங்க வேண்டும்
என்று
நீ சொல்வதுதான் புரியவில்லை.

மீண்டும் நிலாக்காலம் தொடங்கியது
திமிர் கொண்டு உடல்
குறுகுறுக்க.....
குளிரேறிப் போன தெருக்களில்
நடக்கிறேன்.

புணரமுடியாது
கிளட்டுச் சிங்கம் நாக்கைத்
தொங்கப் போட்டு, ஓட,
சொறிநாய்
கதறக் கதறக் கடித்து துரத்துகின்றது
மீண்டும் யுத்தம் நடக்கும்
அதில் நான் வெல்வேன்."

- த.வசந் -

# சொல்லு வான்நிலாவே! உனக்குத்தான் தெரியும் அவனது வீரநடை


தலைநகர் ஊற்றெடுத்த உப்பாற்றிலே 1971.02.05 தினத்திலே மண்ணைக் காப்பதற்கு மட்டுமல்லாமல் தமிழீழ மண்ணைப் பாதுகாப்பதற்க்காக ஆண் மகன் ஒருவனை நொந்து சுமந்து ஈன்றெடுத்தாள் அன்னை. தாய் தந்தையருக்கு மூன்றாவது இளம்பிறையாகத் தோன்றியவனுக்கு வசந்தன் என்று செல்லப் பெயரிட்டார்கள். ஆனால் இவனோ தன் சமுதாயம் அடக்கி ஒழிக்கப்படுவதைக் கண்ட கண்களும் உடலும் தீப்பிழம்புகள் போல சீறிப்பாய்ந்தன. என் இனிய உள்ளங்களுக்கா இந்த நிலை? இதை மாற்றியமைப்பேன் என்று தன்னுள் ஆணையிட்டான். தன் வீட்டைக்காப்பது மட்டுமல்லாமல் தன் தமிழினத்தைக் காக்கப் புறப்பட்டான்.

எவன் எதிரியோ அவனைக் கொன்று குவிப்பதுவே அவன் செயல். தனக்கு வேண்டிய பயிற்ச்சிகளை தன்சக போராளிகளுடன் மிக வேகமாக கற்றுத் தேர்ந்தான். தோற்றம் சிறிதாக இருந்தாலும் அவனின் குணாதிசயங்களும் உணர்வுகளும் எல்லை கடந்தது. கடலின் எல்லை காண்பது இலகு. ஆனால் அண்ணன் மனோஜின் ஆழம் காண்பது கடினமானதாகும்.

குறும்புத்தனமிக்க அண்ணன் எதிரியின் சூழ்ச்சிகளையும் இடங்களையும் வேவு பார்த்து தரவுகளைத் திறம்பட பொறுப்பாக நடத்துவதிலும் பெயர் போனவர். தனக்குப்பிடித்தவர்கள் என்று வேற்றுப்பிரிவு காட்டமாட்டார். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் போல் எடுத்துக்காட்டாகவும் தன் திறமைகளை வெளிப்படுத்தினார். புலிகள் என்றும் கூண்டுக்குள் அடைபடுபவர்களுமல்ல காட்டில் மட்டும் வாழ்பவர்களுமல்ல என்ற வரைவிலக்கணத்தை எதிரிகளுக்கு பலதடவைகள் உணர்த்தியவர்.

எந்த ஒரு துரும்பினாலும் நுழைய முடியாது என்று கூறும் போராளிகளை தன் நுண்ணிய அறிவால் வழியமைத்து நுழையவிடுவார். அவரின் பாதம் படாத இந்த புண்ணிய இடம்தான் உண்டோ? சொல்லு வான் நிலாவே? உனக்குத்தான் தெரியும் அவனின் வீரநடையும் செவ்விதழ் புன்னகையைக் கண்டு நீ பொறாமை கொண்ட நாளும் உண்டு. வன்னியில் இருந்து திருமலைக் காட்டுப்பாதை வழியை கொம்பாஸ் மூலம் கண்டுபிடித்தவர். நாடுகாண் பயணங்களை மேற் கொண்டவர்கள் கூட தனக்கு உதவியாகப் பலரை இணைத்துக் கொண்டு கடல்பாதையை கண்டுபிடிக்க வருடக் கணக்காயின. ஆனால் அண்ணன் துணிவும் திறமையும் ஒன்றாகப் பெற்றவர் என்பதால் யாரும் நுழைய முடியாத அந்த வனாந்தரப் பாதைகளை கண்டுபிடித்து தன்கண்டு பிடிப்பை யாரும் தட்டி விடக்கூடாது என்பதற்காகப் புல்மோட்டை பாதையில் கிடந்த சிறு கற்களைப் பொறுக்கி தன் சேட்பொக்கட்டில் போட்டுக் கொண்டு தளபதியிடம் காட்டினார்.

மற்றும் எதிரியுடன் சண்டை செய்வது என்றால் பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்கு மரணம் போல் அவர் குதுகலிப்பார். எதையும் செய்ய முடியாது என்று இவரின் வார்த்தையில் வந்ததே கிடையாது. எதையும் முடிக்கும் திறமை கொண்டவர். இவரின் முதற் சமர் 1990ல் திருமலை யாழ் வீதியில் 16 எதிரிகளின் உடல்களை தரை சாய்த்தது. பாராட்டும் கிடைத்தது. அண்ணாவின் படையில் அதிகளவு போராளிகள் காணப்பட மாட்டார்கள். ஆனால் அவரின் முயற்ச்சியால் ஒரு போராளி பத்து பேருக்குச் சமன் போல் அவரின் சமர் வெற்றி கொள்ளும். மின்னல் வேகத்தில் சென்று சூறாவளியாக சமரை வீசி பின்பு பனிமழை போல் வருவார். வெற்றிவாகை சூடிக்கொள்வதில் தனிப் பிரிவு இவர்.



லெப் கேணல் மனோஜ்

ஆண்களின் இயல்பு பெண்களைச் சீண்டிப்பார்ப்பது. ஆனால் அண்ணன் பெண்களைத் தாயாக மதிப்பவர். தன் சகாக்கள் பெண்களை நக்கல் செய்தால் பொங்கி எழுவார். இவ்வாறானவர் கள்த்துக்கு சென்றால் மகளிர்ப் படையணி போருக்குப் புயலாக இணைந்து கொள்ளும். இவர் தலைமையில் வேங்கைகள் போர்களம் புகுந்தார்கள் என்றால் தளபதிகள் கூட தன்னகத்தே பெருமிதம் கொள்வார்கள். மனோஜின் தலைமையிலான போர் வெற்றி கொள்ளும் என்று அந்த அளவிற்கு தமிழீழத்தை மீட்டெடுத்து தன் தாய் மண்ணைக் காக்கவேண்டும் என்ற உத்வேகம் தனையனிடம் குடிகொண்டிருந்தது.

மனோஜ் அண்ணன் 2001.07.20 அன்று தன் போராளிகளுடன் தமிழீழ தலைநகருக்கு தன் பயணத்தை ஆரம்பித்தார். காட்டுமிராண்டிகளான சிங்கள இராணுத்தின் கண்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தவராக காடு, மலை, கடல்நீர் என்று பல தடைகளையும் கடந்து எம்மை கண்ணை இமை காப்பது போல் காத்து வந்தார். ஆசையோடு கண்டு 15 வருடங்களாகிவிட்ட வெளிநாட்டிலிருந்து வந்த அண்ணன் தன் தம்பியைக் காண வந்தார். ஆனால் தம்பியோ தன் பிறப்புக் கடமையை உதாசீனம் செய்து சிங்கள வெறியர்களிடம் இருந்து தமிழ் மண்ணை மீட்கும் இலட்சியத்தில் தன் உடல் பொருள் ஆவியைத் தமிழுக்கும் தமிழர்க்கும் அர்ப்பணித்து தன் பணியில் ஈடுபட்டார்.

**பா.கமலநாதன் (சகோதரன்)**
*(பிரான்ஸ்)*

அண்ணன் தன் உடம்பில் ஏற்பட்ட சிறு காயத்தினால் சிலகாலம் ஓய்வு பெற்றார். ஆனால் தன் நினைவலைகளைப் போர்க்களத்திலேயே செலுத்தி நின்றார். சில நாட்களின் பின்னர் வேவுப்புலியானார். அண்ணன் வழிநடத்திச் சென்ற படையணி வெல்வேரிச்சமரில் மாபெரும் வெற்றியைத் தழுவிக்கொண்டது. இச்சண்டையில் எதிரிகளிடம் இருந்து பல்ரக ஆயுதங்களைக் கைப்பற்றியதால் தலைவரண்ணாவிடம் இருந்து பாராட்டையும் பரிசையும் பெற்றுக்கொண்டார். இது மட்டும் போதும் என்று நினைக்கவில்லை. இதனைவிட பன்மடங்கு வெற்றியைத் தன் வழி நடத்தலில் தன் படையணி பெறவேண்டும் என்ற உள்நோக்கம் ஆலவிருட்சம் போல் பரவிக் கிடந்தது.

இவர் 1989 ஆம் ஆண்டில் தன்னை தாயக மீட்புப்போரில் இணைத்துக் கொண்டார். அவ்வேளையில் இவர் பங்குபற்றிய முக்கிய சமர்களான பன்குளத்தில் இராணுவ ரக் வண்டி மீதான தாக்குதல், கடவானைக்காட்டில் முகாமை முற்றுகையிட வந்த இராணுவத்தினர் மீது முறியடிப்புத் தாக்குதல், கிண்ணியா இராணுவ முகாம்மீதான தாக்குதல். விளான் குளத்தில் வைத்து இராணுவத்தினர் மீது பதுங்கித்தாக்குதல், பாலம்போட்டாறு இராணுவத்தினர் மீது பதுங்கித் தாக்குதல் , என்பவற்றைக் குறிப்பிடலாம். 1994 ஆம் ஆண்டில் எமது இயக்கத்தால் நடாத்தப்பட்ட அதிகாரிப் பயிற்சிக் கல்லூரியில் மேஜர் படிப்புக்காகச் சென்று ஒரு வருடப்படிப்பை முடித்துக்கொண்டு மீண்டும் 1995 ஆம் ஆண்டு திருமலைப் படையணியில் இணைந்து கொண்டு 2000 ஆம் ஆண்டு வரையும் பொறுப்பாளராகக் கடமைபுரிந்தார். இவருடைய முக்கிய சமர்க்களங்களாக தவளைப்பாச்சல், ஆனையிறவு பரந்தன் சமர்கள் , மன்னார் பொலீஸ் நிலையத் தாக்குதல், ஜெயசிக்குறு , வெல்வெரி வெற்றிச் சமர். பச்சனூர் பொலீஸ் நிலையத் தாக்குதல் என்பவற்றைக் குறிப்பிடலாம் . பின்பு 2001 ஆம் ஆண்டு 150 பேருக்குரிய தாக்குதல் தளபதியாக கடமையாற்றிய காலகட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓயாத அலைகள் 3 நடவடிக்கையில் யாழ் நகர் நோக்கி முன்னேறும் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது . தாக்குதல் நிறைவு பெற்ற பின் திருக்கோணமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். இதன் பின் மீண்டும் திருமலை மாவட்ட தாக்குதல் படையணித் தளபதியாகக் கடமையாற்றிய வேளையில் இவர் மேற்கொண்ட மூதூர் பாலத்தோப்பூர் இராணுவ புலனாய்வுப் பிரிவு முகாமே இறுதி முகாமாக இருக்கும் என்று கனவில் கூட நாங்கள் நினைக்கவில்லை .



காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

நள்ளிரவில் தொடங்கிய யுத்தத்தின் சத்தங்களே எம் செவிப்பறைகளை அதிரவைத்தது. சீறிச் சிலிர்த்த புலியாய் எதிரியைத்தாக்க தொடங்கினார். திடிரென மனோஜ் அண்ணனின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. நாங்கள் அனலில் விழுந்த புழுவாகத் துடி துடிக்கலானோம். காயம் என்று அறிந்ததும் ஓரளவு மனதைதேற்றிக் கொண்டோம். அந்த வேளையில் யாரும் அறியவில்லை புலரும் பொழுதிலே இடியோசை ஒன்று காத்து நிற்கின்றது என்று.

ஆம்! அதிகாலை 5.25 மணியளவில் எம் செவிகளை நோக்கி ஓர் செய்தி வந்தது மின்னல் வேகத்தில். எதிரியைத் தாக்கி விட்டு எதிரியின் இலக்குக்கு திடீரென உள்ளாகிவிட்டார். தனயனின் மார்பை எதிரியின் துப்பாக்கி முனை குறிபார்த்து விட்டது. அண்ணனின் துணிவைப் பார்த்து அந்தச் சூரியன் கூட தன் செங்கதிரை மண்ணில் பாய்ச்ச மறுத்து விட்டது காரணமோ! ஓர் வீரனின் உடல் இங்கு மாய்ந்து கிடக்கிறது. அந்த வீரனின் பலத்துக்கு முன் அந்த கதிர்களின் ஒளிக்கு பலமில்லை.

வீரத்தாயின் மடியினிலே வீரத்தாலாட்டில் தமிழீழ மானம் காக்க வந்த சிங்கம் 11.12.2001 அன்று இறுதியான போர்க்களத்துடன் தமிழீழ மண்ணை எங்கள் கரத்தில் ஒப்படைத்துவிட்டு துப்பாக்கி முனையில் தன் உயிரை நீத்து ஈழமண்ணை முத்தமிட்டு மூன்று போராளிகளுடன் ஓர் இமயமலை தரை சாய்ந்தது. அண்ணனே! நீங்கள் மாவீரராகி இன்று துயில்கிறீர்கள்.

உங்கள் ஞாபகமாக மூதூர் பள்ளிக்குடியிருப்பில் "லெப். கேணல் மனோஜ் பாலர் பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாவீரரான உங்கள் பாதச்சுவட்டை நோக்கி நாங்களும் இங்கு தடம் பதிக்கின்றோம்.

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"



*(✍ து.கோமளமைந்தன்)*

217. 16.01.1993இல் வங்கக் கடலில் இந்தியச் சதிக்குப் பலியான கேணல் கிட்டு அவர்கள் எந்த அமைப்பின் சமாதானச் செய்தியுடன் வந்து கொண்டிருந்தார்?

''குவேக்கர்ஸ்''

218. 10.11.1993 நள்ளிரவு தாண்டிய வேளையில் ஆரம்பிக்கப்பட்டு 13.11.1998இல் பூநகரி கூட்டுப்படைத்தளம் புலிகளிடம் வீழக் காரணமான புலிகளின் மரபு வழிச்சமரின் பெயர் என்ன?

''தவளை நடவடிக்கை''

219. நன்கு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கேணல் கிட்டுவின் வழிநடத்தலில் 1985.04.10இல் தாக்கப்பட்ட சிறிலங்காக் காவல் நிலையம் எது?

யாழ்ப்பாணக் காவல் நிலையம்.

220. தமிழீழ விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் யாழ். வான்பரப்பில் அடுத்தடுத்து இரு அவ்ரொ விமானங்கள் எப்போது சுட்டு வீழ்த்தப்பட்டன?

28, 29- '04-1995இல்

221. தமிழீழக் கலைஞர்களின் பங்களிப்புடன் தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் உருவாக்கத்தில் முதலாவது பாடல் ஒலிப்பேழை இசைவாணர் கண்ணன் அவர்களின் இசையமைப்பில் எப் பெயரில் வெளியானது?

''இந்த மண் எங்களின் சொந்தமண்''

222. 1977 ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது கொழும்பிலிருந்து தமிழ் எதிரிகளை யாழ்ப்பாணம் ஏற்றிச் சென்ற கப்பலினது பெயரைக் கொண்டு, தாயகம் நோக்கிய அப்பயணம் தொடர்பாக ''அருளர்'' என்பவர் எழுதி, டிசம்பர் 1978இல் முதற்பதிப்பு வெளியான வரலாற்று நாவலின் பெயர் என்ன?

''லங்கா ராணி''

223. 09.07.1995 அதிகாலையிலிருந்து 16.07.1995 அதிகாலை வரையிலான நாட்களில் யாழ் வலிகாமம் மேற்குப் பகுதியில் வாழ்ந்த மக்களைப் பெரும் அவலத்திற்கு உள்ளாக்கிய சிறிலங்காப் படை நடவடிக்கை எது?

முன்னோக்கிப் பாய்தல்

(தொடரும்)

# காத்திரன் பதில்

**★ கே. தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனக் கூறுகின்றவர்களின் தலைக்குள் என்ன இருக்கிறது காத்திரனே?**

*ரி.ரஞ்சிதகுமார் - கிரான்.*

☛. எருமைத்தயிர் இருக்கின்றது.

*******

**★. கே. தமது பதவிகளைத் தக்க வைக்கும் நோக்கில் முஸ்லிம் அரசியல் வாதிகள் சிலர் வாய்க்கு வந்த மாதிரி கதைப்பதையிட்டு என்ன கூறலாம் காத்திரனே?**

*ரி.சுரேஸ்கோவி பேச்சியம்மன வீதி. ஆரையம்பதி - 2*

☛. ''எலும்பில்லாத நாக்கால் எதையும் கதைக்கலாம் தானே'' பதவியைத் தக்க வைக்க இதுவும் கதைப்பார்கள் இதுக்கு மேலவும் கதைப்பார்கள்.

*******

**★.கே. தனித்தமிழீழம் கிடைக்க வேண்டுமானால் தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்?**

*என்.கரன், 2ம்வருடம கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை.*

☛. பார்வையாளர்களாக இருக்கும் தமிழர்கள் எல்லோரும் பங்காளிகளாகி பலத்தைக் கூட்டி நிலத்தைப் பெற வேண்டும்.

*******

**★. கே.ஓசாமா பில்லேடன் ஒழிந்திருப்பதற்கான காரணம் என்ன காத்திரனே?**

*செ.தயாகரன்-பண்டாரியாவெளி*

☛. அமெரிக்காவிற்கு அடுத்த கட்ட நடவடிக்கை மேற் கொள்வதற்காக.

*******

**★. கே. மட்டக்களப்பிற்கு ஏன் அமைச்சர்கள் அடிக்கடி வருகிறார்கள் காத்திரனே?**

*இ.வாகீசன் கன்னன்குடா 2*

☛. போர் ஆரம்பமானால் வரமுடியாது என்பதற்காக

*******

**★. கே. ஒரு குழந்தையின் எதிர காலம் நன்றாக அமைவதற்கு முக்கிய காரணம் தாயா? தந்தையா?**

*க.சிவரெத்தினம் கிப.கழகம் வந்தாறுமூலை*

☛. தாய்ப் பாலூட்டும் தாயால்.

*******

**★. கே. பெண்கள் மட்டும் தான் கண்ணீர சிந்தும் இயந்திரமா காத்திரனே?**

*சிவலிங்கம் சுமதி ஏறாவூர் -4*

☛. யார் சொன்னது சுமதி. பெண்களின் கடைசி ஆயுதம் தான் கண்ணீர் என்கிறார்களே.

*******

**★. கே. தற்பொழுது வெளிவரும் சினிமா திரைப்படங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் காத்திரனே?**

*க.முகுந்தன் மண்டூர் 1*

☛. கதை எல்லாமே ''காதல் பசாசு''. காட்சி எல்லாமே ''காமப் பிசாசு''.

*******

**★. கே. மதுவுக்கு மண்டியிடும் மங்கையர்களைப் பூற்றி என்ன நினைக்கிறீர்கள் காத்திரனே?**

*உ.நடேசன் -குறிஞ்சாமுனை*

☛. ''குடி கேடு'' இது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொருந்தும், மதுப்பழக்கம் மரியாதையைக் குறைக்கும்.

*******

**★. கே. காத்திரனே பண்டாரியாவெளிக் கிராமத்திற்கு எப்போது மின்சாரம் கிடைக்கும்?**

*ச.கோணேஸ் பண்டாரியாவெளி*

☛. மகிழடித்தீவில் இருந்து பண்டாரியாவெளிக்கு மின் இணைப்பு மேற்கொள்ளும் போது.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**

*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்*

## கிண்ணியா..

மேச்சல்தரையை ஆக்கிரமித்தவர்கள் மீது ஆத்திரம் கொண்ட தமிழ் மக்கள் தாக்கியிருக்கிறார்கள். அரசாங்கக் காணிகளை மாத்திரம் அல்ல அம்பாறை மாவட்டத்தில் பல சைவக் கோவில்களையும் கோவில்களுக்குரிய காணிகளையும் கூட முஸ்லிம்கள் தங்களுக்குரியது என உரிமை கொண்டாடுகிறார்கள். சைவக்கோவில்கள் இருந்த இடங்களில் இப்போது மாட்டிறைச் சிக்கடைகளை நடத்துகிறார்கள். ஓட்டமாவடி, மீனோடைக்கட்டு உட்பட பல இடங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அண்மையில் காணிப்பிரச்சினை பற்றி அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளை வைத்து கலந்துரையாடியபோது சைவக்கோயில்களை தாங்கள் பணம் கொடுத்து வாங்கியிருப்பதாக முஸ்லீம்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தமிழ் மக்களை சிறுபான்மை ஆக்குவதற்கு மிகவும் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கோ, அம்பலப்படுத்துவதற்கோ ஏற்ற நகர்வுகள் எதுவும் தமிழர் தரப்பில் எடுக்கப்படவில்லை என்பதுதான் மிக வேதனையான விடயம்.

## முஸ்லிம்களின்..

ஒருபோரைத்தான் நடாத்திக் கொண்டிருக்கின்றது. ஆயுத பலமுள்ள முஸ்லிம்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையைத்தான் அவை மேற்கொண்டும் வருகின்றன. அவர்களது பட்டியலில் ஆயுத பலமுள்ள முஸ்லிம் நாடுகள் கூட, பயங்கரவாதிகளாகத்தான் தென்படுகின்றார்கள். அப்படி இருக்கையில் புதிதாக ஒரு முஸ்லிம் குழு இலங்கையில் ஆயுதப் போராட்டத்தில் குதிப்பதற்கு அவர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

04. தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த போது ஸ்ரீலங்கா இராணுவத்தின் மொத்தப் படையினரின் எண்ணிக்கை வெறும் 5000 மட்டுமே. தமிழீழப் போராட்டம் ஆரம்பமான காலப்பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் அணிவகுப்பு மரியாதையை மேற்கொள்ளும் ஒரு இராணுவ அமைப்பாக மட்டுமே இருந்தது. ஏ.கே 47 ரகத் துப்பாக்கியைக் கூட முதன்முதலில் தமிழ் போரளிகளே இலங்கையில் அறிமுகப்படுத்தும் அளவிற்கு போராட்டத்தின் ஆரம்பகட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் பலவீனமான ஒரு நிலையிலேயே இருந்தது. ஆனால் இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் பலம் என்பது பாரியது. அதேபோன்று விடுதலைப் புலிகளின் படைப்பலமோ இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தை விட பலமடங்கு பாரியது. குறிப்பாக விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் திறமை என்பது வல்லரசுகளின் புலனாய்வுக் கட்டமைப்புக்களுடன் ஒப்பிடும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அப்படி இருக்கையில் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளுவது என்பது நிச்சயம் படுதோல்வியையே அவர்களுக்குப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயுத அமைப்புக்கள் உருவாகி சிறிது காலத்திலேயே அவை முற்றாக அழிக்கப்பட்டுவிடும் சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின்றன.

இலங்கையில் உள்ள முஸ்லிம்களில் பெரும்பான்மையானவர்கள் வியாபாரிகள். இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் பெரும்பாலான நகர்வுகள் இருக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. அரசியலும், போராட்டமும் கூட அப்படித்தான் இருக்கும். இவ்வாறு வியாபார நோக்கில் ஊறிப்போயுள்ள ஒரு சமூகத்தின் மத்தியில், அவர்களின் வியாபாரத்தை முற்றாகவே சிதைத்துவிடும்படியான ஒரு ஆயுதப் போராட்டத்தை நீண்ட காலத்திற்கு நடாத்த அச் சமூகம் நிச்சயம் அனுமதிக்காது. இழப்புக்கள் ஏற்பட ஏற்பட, போராட்ட அமைப்புக்கள் காட்டிக்கொடுக் கப்பட்டுவிடும் சூழ்நிலை படிப்படியாக உருவாகும்.

## அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் சாதனை

(அரியம்)

பட்டிப்பளைப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையே இடம் பெற்ற விஞ்ஞான அறிவுப் போட்டியில் நான்கு கோட்டங்களிலும் அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் 1ம் இடத்தைப் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளது.

பட்டிருப்பு வலயத்தின் பட்டிப்பளைப் பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த முதலைக்குடா மகா வித்தியாலயம், அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கடுக்காமுனை வாணி வித்தியாலயம், மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம், அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் என்பன நான்கு கோட்டங்களாக வகுக்கப்பட்டு முறையே 8ம் தரம், 9ம் தரம், 10ம்தரம், 11ம் தரம் ஆகிய வகுப்பு மாணவர்களிடையே இடம் பெற்ற நான்கு வகுப்புப் போட்டிகளிலும் அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

06. முஸ்லிம்கள் மத்தியில் உருவாகும் ஆயுதக் குழுக்களில் உள்வாங்கப்படும் இளைஞர்கள், மார்க்க சிந்தனையில் ஊறிப் போனவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் திருக்குறானை அடிப்படையாக் கொண்டு இறுக்கமான கட்டுப்பாடுகளை முஸ்லிம் சமூகம் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்தும் நிலை நிச்சயம் ஏற்படவே செய்யும். அவற்றை மீறுவோருக்கு எதிராக மார்க்கத்தில் கூறப்பட்டபடி கடுமையான தண்டனைகளையும் வழங்க ஆரம்பிப்பார்கள். இதுபோன்ற அவர்களது செயற்பாடுகள் வெகு விரைவில் அவர்களை சமூகத்தில் இருந்து அன்னியப்படவைத்துவிடும்.

07. தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு ஸ்ரீலங்கா அரசு உதவிகள் புரியும் என்று ஒரு சிலர் கூறுகின்றார்கள். இது நடைமுறைச் சாத்தியம் அற்றது. முஸ்லிம் ஆயுத அமைப்புக்கள் உருவானால், அதனால் மட்டக்களப்பை விட மாவனல்லையும், மாளிகாவத்தையும்தான் அதிகம் பாதிப்புக்குள்ளாகும். இது ஸ்ரீலங்கா அரசுக்கு நன்றாகவே தெரியும். அதனால் அவர்கள் முஸ்லிம் ஆயுதக் குழுக்களை ஒரு அளவிற்கு அதிகமாக ஊக்குவிக்கமாட்டார்கள். முஸ்லிம் இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்தி ஸ்ரீலங்காப் படைகளில் அவர்களை இணைத்துப் பயன்படுத்திக்கொள்ளவே அவர்கள் முயல்வார்களே தவிர, முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்கி தன் தலையிலேயே மண் அள்ளிப்போட ஒரு போதும் அவர்கள் விழையமாட்டார்கள்.

08. ஸ்ரீலங்கா அரசு முஸ்லிம் தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக செய்திகள் வெளியாகிய மறு கணமே, ஸ்ரீலங்கா அரசு சர்வதேச சமூகத்தின் பாரிய எதிர்ப்பினை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். அதனால் ஸ்ரீலங்கா அரசு ஒரு வரையறைக்கு அப்பால் முஸ்லிம்களை ஆயுதபாணிகளாக்க முன்வராது.

இவை அனைத்தையும் விட, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆயுதக் குழுக்கள் உருவாகுவதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள். முஸ்லிம் இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்தி தமது அரசியலைக் கொண்டு நடத்த வேண்டுமானால் அவர்கள் முயற்சிப்பார்களே தவிர, தமது கைகளை விட்டு முஸ்லிம் இளைஞர்கள் தொலைதூரம் செல்வதற்கு நிச்சயம் அனுமதிக்கமாட்டார்கள்.

ஆயுதப் போராட்டங்களை ஊக்குவித்த தமிழ் அரசியல்தலைமைகளுக்கு நேர்ந்த கதியை அவர்கள் நிச்சயம் மறந்திருக்கமாட்டார்கள்.

அடுத்ததாக, முஸ்லிம்கள் வன்முறையில் இறங்கிவிட்டால் எந்த ஒரு தீர்வையும் பெறமுடியாத அளவிற்கு நிலமை படு மோசமாக மாறிவிடும் என்பது புத்திஜீவி முஸ்லிம்களுக்கு நன்றாகவே தெரியும். முஸ்லிம்களின் உரிமைகள் மறுப்பதற்கு, முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டம் மேற்கொள்ளும் ஒரு காரணம் மட்டுமே போதுமானது என்பது முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு நன்றாகவே விளங்கும்.

எனவே மொத்தத்தில் முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டம் என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் எந்தவகையிலும் சாத்தியமற்ற ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை.
முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அடிக்கடி பம்மாத்துக் காண்பிப்பது, ஒரு மிரட்டலே தவிர வேறு ஒன்றும் இல்லை. அது சாத்தியம் இல்லை என்பது அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.
இன்றைய காலட்டத்தில் தமிழ் தரப்பைப் பொறுத்தவரையில் முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்கினால் மட்டுமே தமிழ் தரப்பால் முஸ்லிம்களை இலகுவாக வெற்றிகொள்ள முடியும்.
இதுதான் களமுனை யதார்த்தம்.


**அரசாங்க அனுமதி பெற்ற.**
**மட்டுமா நகரில் குறைந்த கட்டணத்தில்**
**சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்**
**கொடுக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம்**

**நதீரா சாரதி பயிற்சி நிலையம்**

(R.M.V. No. D.S. 349)
குளோபல் கட்டிடம்
இல.03. மார்கட் வீதி, மட்டக்களப்பு.




**கனரக வாகனம் ஓடத் தெரிந்தால் 4000/-மட்டும்**
**கனரக வாகனம் பயிற்சியுடன் 7000/-மட்டும்**
**மென்ரக வாகனம் பயிற்சியுடன் 5000/-மட்டும்**

**தரமான சாரதிகளை உருவாக்கி நாட்டில் விபத்துக்களற்ற வாகனப் போக்குவரத்து சேவைக்கு உதவுவதே எங்கள் நோக்கம்.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)

# அலையின் பார்வையில்







விடுதலைப்புலிகள் தயாரித்துள்ள இடைக்கால நிர்வாக வரைபு குறித்து மலையகத் தலைமைகளுடன் வன்னியில் ஓர் சந்திப்பு.

சிறிலங்கா தேசத்தில் எங்கு தமிழினம் குடியிருந்தாலும் ஏக பிரதிநிதிகள் எங்கள் விடுதலைப்புலிகள் தான் என்பதை மலையக தமிழ்க் கட்சிகள் உணர்ந்து நிற்கின்றன



கிண்ணியாவில் ஊரடங்கு, இயல்புநிலை பாதிப்பு இரு இனங்களின் உறவுகளில் ஓர் விரிசல். நிகழ்வு நாட்களில் ஓர் நாள் சிறிலங்கா உள் விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க கிண்ணியா சென்று நிலவரம் பற்றி ஆராய்தல்!

## 3வது பிறந்ததின வாழ்த்து




புட்கரன் - கோமாஞ்சனன் (அஞ்சனன்)


05 - 11 - 2003

திருப்பழுகாமம் வன்னிநகரைச் சேர்ந்த புட்கரன்- சர்மிளா தம்பதிகளின் ஏகபுதல்வன் கேமாஞ்சனன் தனது மூன்றாவது பிறந்த நாளை 05.11.2003 இல் தமதில்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, ஆறுமுகம் அப்பப்பா, வள்ளியம்மை அப்பம்மா, புண்ணியமூர்த்தி அம்மப்பா, சவுந்தரலெட்சுமி அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார், அக்காமார், தங்கைமார், அண்ணாமார், மச்சான்மார், மற்றும் உற்றார் உறவினர்கள் மாவேலன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

## காந்தப் புயல் வீசுகிறது! கலியுலகிற்கு ஆபத்து!



இது சூரியஆராச்சி அவதான நிலையத்திலிருந்து பெறப்பட்ட படங்களையே காண்கின்றீர்கள். கடந்த செவ்வாக்கிழமை பூமியை நோக்கிக் காந்தப்புயல் வீசும் போது சூரியன் இவ்வாறு காட்சியளித்தது.



சூரியனிலிருந்து செக்கன் ஒன்றுக்கு 2.100 கிலோ மீற்றர் வேகத்தில் வெப்பக்கதிர் பூமியை நோக்கி செலுத்தப்படுமென்று பிரபல விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளனர். இவ்வெப்பக் கதிரினால் தொலைபேசிப் பரிவர்த்தனை, மின்சாரம், தொலைக்காட்சி ஆகியவை பாதிக்கப்படலாமென்றும் இவ்வெப்பக்கதிர் வெள்ளிக்கிழமை வரை நீடிக்கலாம் எனவும் கணிப்பிடப் பட்டுள்ளது. 1994ம் ஆண்டு இதே போன்று ஏற்பட்டதாக்கத்தினால் இரண்டு செயற்கைக் கோள்கள் பாதிக்கப்பட்டு தொலைக்காட்சி, வானொலி ஒளிஒலிபரப்புக்கள் பாதிப்படைந்தமை குறிப்பிடத்தக்கது.

PC HOUSE Innovative Solutions !
Labtec PHILIPS
உங்கள் கணினித் தேவைகளையும், சேவைகளையும் திருப்தியுடன் நிறைவேற்றிக்கொள்ள
PC HOUSE (PVT) LTD
# 48, First Floor, Trincomalee Road, Batticaloa. Tel: 0777260329E - Mail : batticaloa@pchouse.lk Website : www.pchouse
Branches: Unity Plaza, Majestic, Kandy, Kurunegala, Rathnapura, Negombo, Matara, Jaffna, Badulla, Vavuniya, A'pura, Galle

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 02-11-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

F:\computer\Tamilalai 31.cdr